
விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 கதிர் 026 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 06, செவ்வாய்க்கிழமை 22.12.2015

நீரோகா
இன்றைய சுப்பர் பரிசு
ரூ.2,789,217.50
NLB அதிர்ஷ்டத்தின் ஒரே பெயர்

## கூட்டமைப்பை யாரும் பிளவுபடுத்த முடியாது



### தமிழ் மக்கள் பேரவை அமைப்பின் உருவாக்கத்திற்கு பொறுத்திருந்து பதிலளிப்பேன் என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, டிசெம்பர் 22
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்தவர்கள் கட்சியின் தலைமையின் அனுமதியைப் பெறாமல் ஓர் அமைப்பை உருவாக்குவதை நாம் விரும்பமாட்டோம். இது குழப்பத்திற்கே வழிவகுக்கும். எனினும், தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற கூட்டமைப்பை எவராலும் பிளவுபடுத்தவே முடியாது.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
தமிழ் மக்கள் பேரவை அமைப்பின் உருவாக்கத்துக்கு இப்போது என்னால் பதிலளிக்க முடியாது. பொறுத்திருந்துதான் பதில் வழங்குவேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.
அரசியல் தீர்வுக்கான யோசனைகளை முன்வைக்கப்போவதாகக் கூறி, தமிழ் மக்கள் பேரவை என்ற பெயரில் ஓர் அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சிக்குள் உள்ள வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இந்த பக். 05

> நாம் ஓரணியில் நின்று நிரந்தர அரசியல் தீர்வைக் காண விரும்புகின்றோம். இதைக் குழப்பியடிக்க விரும்பவில்லை. குழப்பியடிக்க விரும்புவோர் இதனைக் கவனத்திற்கொள்ள வேண்டும்.

## முதலமைச்சர் மட்டும் மாகாண சபையல்ல

### வடக்கு அவைத் தலைவர் சிவஞானம் காட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 22
வடக்கு மாகாண முதலமைச்சர் மாத்திரம் வடக்கு மாகாண சபை அல்ல. அமைச்சர்களும் - உறுப்பினர்களும் மாகாண சபையினரே. ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற தேசிய நத்தார் தின நிகழ்வில், அமைச்சர்கள் - உறுப்பினர்கள் அழைக்கப்படாமல் புறக்கணிப்புச் செய்யப்பட்டுள்ளனர்.
இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. பக். 25

## லசந்த படுகொலை; பொன்சேகாவையும் விசாரிக்கத் திட்டம்

கொழும்பு, டிசெ. 22
பிரபல ஊடகவியலாளரும் 'சண்டே லீடர்' பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியருமான லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பில் முன்னாள் பக். 24

## தாஜுதீன் கொலைச் சந்தேகநபர் மகிந்தவின் மகன் யோசிதவுடன்

### வெளியானது புகைப்படம்



கொழும்பு, டிசெ. 22
பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் படுகொலையுடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் வாகனச் சாரதியான திஸ்ஸ என்பவர் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கும் நிலையில், திஸ்ஸ என்பவரைத் தமக்குத் தெரியாது என்று மகிந்தவின் மூத்த மகன் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். இந்த நிலையில், தாஜுதீன் மரணத்துடன் இணைத்துப் பேசப்படும் மகிந்தவின் இரண்டாவது மகன் யோசிதவுடன் சந்தேகநபரான திஸ்ஸ சந்தோஷமாகக் கலந்துரையாடும் புகைப்படம் ஒன்றை ஆங்கில இணையத்தளம் ஒன்று வெளியிட்டுள்ளது.
திஸ்ஸ என்பவர் தாஜுதீன் கொலை மற்றும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வாவின் மீதான தாக்குதல் சம்பவத்திலும் தொடர்பு கொண்டிருந்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.
இராணுவத்தில் பக். 24

## வாக்குறுதி வழங்கிவிட்டு ஏமாற்றக்கூடாது மைத்திரி

### வலி. வடக்கு மீள்குடியேற்ற சங்கத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 22
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த கால அரச தலைவர்களைப் போன்று, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் ஏமாற்றக் கூடாது. நத்தார் தின நிகழ்வில் வைத்து ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியை தேவவாக்காகவே நாம் கருதுகின்றோம்.
இவ்வாறு வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.
வலி.வடக்கு மக்களின் மீள்குடியமர்வுப் பிரச்சினையை எதிர்வரும் 6 மாத காலத்தினுள் தீர்த்து வைப்பேன் எனவும், தெற்கிலிருந்து கூக்குரலிடும் இனவாதிகளை வடக்கு பக். 25

## கோத்தாவை முடக்க அரசு கடும் முயற்சி

### குற்றஞ்சாட்டுகிறார் கம்மன்பில

கொழும்பு, டிசெ. 22
முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவை முடக்கவே ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புபடாத இராணுவ அதிகாரிகள் நால்வர் தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று புதிய ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.



புதிய ஹெல உறுமய கட்சியின் பக். 24

## 27 அரசியல் கைதிகளின் மறியல் மீண்டும் நீடிப்பு

கொழும்பு, டிசெ. 22
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளில் 27 பேரின் தடை உத்தரவு மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.
அரசியல் கைதிகளைக் கொழும்பு புதுக்கடை பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தியதை அடுத்து அவர்களை எதிர்வரும் ஜனவரி 4 திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய 27 அரசியல் கைதிகளில் 19 பேர் தமிழர்கள், 8 பேர் சிங்களவர்களாவர்.
சட்டத்தரணிகளின் ஆட்சேபனையை பக். 24

### முதலமைச்சரே நீங்கள் நல்லவரா? கெட்டவரா?

பக். 13

விக்னேஸ்வரன் முதலமைச்சரானதும் தமிழ் மக்களின் பெருந்தலைவர், தானே என நம்பத் தலைப்பட்டார்.

உங்கள் வசதி கருதி...
www.dfcc.lk
இப்பண்டிகைக் காலத்தை மகிழ்ச்சியாகக் கொண்டாட DFCC வங்கியிடமிருந்து...
- மேல் மாகாணத்திலுள்ள எமது சகல கிளைகளும், மாத்தறை, குருநாகல், கண்டி, யாழ்ப்பாணம், தம்புள்ள மற்றும் காலி ஆகிய கிளைகளும் 2015 டிசம்பர் 16 முதல் 23 வரை இரவு 7.00 மணி வரை திறந்திருக்கும்.
- நாடு முழுவதுமுள்ள 700க்கும் மேற்பட்ட ATM இயந்திரங்களில் கட்டணமில்லாமல் பணத்தை மீளப் பெறும் வசதி.
- சேமிப்புக் கணக்குகளுக்கு 6% உயர் வருட வட்டி மற்றும் ஒரு வருட நிலையான வைப்புகளுக்கு 8% கவர்ச்சிகரமான வருட வட்டி.
- விஸ்தரிக்கப்பட்ட கிளை வலையமைப்பு
அழையுங்கள் 0112350000
DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வடமராட்சி கலிகைச் சந்திப்பகுதியில் கார் ஒன்றுவீதியின் ஓர மாக இருந்த மின் கம்பத்துடன் மோதித் தடம்புரண்டது. இந்த விபத்து நேற்று மதியம் நடந்துள்ளது. (ற-ஜ-109)

# மாணவருக்கு ஹெரோயின் விற்ற நால்வர் சிக்கினர்

## யாழ்ப்பாண நகரத்தில்

யாழ்ப்பாணம், டிசெ.22
யாழ்.நகரத்தின் பிரபல ஆண்கள் கல்லூரியின் மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த மாணவர்களுக்கு குடு எனப்படும் ஹெரோயின் போதைப்பொருளை விற்பனை செய்த நால்வர் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைது செய்யப்பட்டவர்களின் உடைமையில் இருந்து 9 கட்டு ஹெரோயின் பைக்கற்றுக்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை மற்றும் இணுவில் தெற்குப் பகுதியைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.
நீண்டகாலமாக குறித்த நபர்கள் மாணவர்களை இலக்கு வைத்து ஹெரோயின் விற்பனையில் ஈடுபடுகின்றனர் என்று பிரதிபொலிஸ்மா அதிபரின் கீழ் இயங்கும் குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினருக்கு இரகசிய தகவல் கிடைக்கப் பெற்றிருந்தது.
அதையடுத்து பொலிஸாரின் தீவிர கண் காணிப்பில் அவதானிக்கப்பட்டு வந்த இவர்கள், குறித்த பிரபல கல்லூரி .விளையாட்டு மைதானத்துக்கு அருகில் விளையாடிக்கொண்டிருந்த மாணவர்களுக்கு ஹெரோயின் விற்பனையில் ஈடுபடுவது தெரியவந்துள்ளது.
குறித்த இடத்துக்குச் சிவில் உடையில் சென்ற பொலிஸார், பிரதான சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்ததுடன், அவர் மூலம் ஏனைய மூவரை கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.
(ற-ஜ-107)

# வடக்கில் 6 வைத்தியசாலைகள் இன்னமும் இயங்காத நிலையில்

## போரின் பாதிப்பு காரணமாக

யாழ்ப்பாணம், டிசெ.22
போர் பாதிப்புக் காரணமாக வடக்கில் 6 வைத்தியசாலைகள் இன்னமும் இயங்காத நிலையில் உள்ளன என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாண வரவு - செலவுத் திட்டத்தில், சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் கொள்கை விளக்க உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
வட மாகாணத்தில் 104 வைத்தியசாலைகள் காணப்படுகின்றன. இவற்றில் 6 வைத்திய சாலைகள் இயங்காத நிலையில் உள்ளன. காங்கேசன்துறை, ஆனையிறவு, அம்பலவன் பொக்கணை, முள்ளியவளை, கரிப்பட்ட முறிப்பு, கிரிபென்வேவா ஆகிய 6 ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையங்களுமே போரின் பாதிப்பினால் இன்னமும் இயங்க முடியாத நிலையில் உள்ளன.
104 வைத்தியசாலைகளுக்கு மேலதிகமாக 5 மார்பு நோய் சிகிச்சை நிலையங்கள் மற்றும் 5 பால் வினைத்தொற்று நோய் சிகிச்சை நிலையங்கள் (எஸ்.ரி.டி கிளினிக்) அந்தந்த மாவட்ட பொது வைத்தியசாலைகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.
30 சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனை என்பவற்றுடன் இவற்றுக்கு மேலதிகமாக 26 பாடசாலை பற்சிகிச்சை நிலையங்கள் சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மற்றும் சகல மாவட்டங்களிலும் அமைந்துள்ள 5 பிராந்திய மலேரியா தடை இயக்கப் பணிமனை என்பன மூலம் மாகாணத்திலுள்ள மக்களுக்கு நோய் வருமுன் காப்பு, நோய்களுக்கான சிகிச்சை என்பன வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.
வட மாகாணத்தில் போருக்குப் பின்னரான சுகாதாரத்துறை அபிவிருத்தியின் தேவைப்பாடு அதிகரித்துக் காணப்படுகின்றது. சுகாதாரத்துறையை முழுமையான முறையில் கட்டியெழுப்புவது இன்னமும் சவாலானதாகவே உள்ளது. இங்கு காணப்படும் பௌதிக மற்றும் மனித வளப் பற்றாக்குறையானது இதற்கான முக்கிய காரணமாக உள்ளது. குறிப்பாக மனிதவளபற்றாக்குறையானது தரமான சுகாதார சேவையை வழங்குவதற்கு முக்கியமான சவாலாக உள்ளது.
இவற்றில் பிரதானமாக வட மாகாணத்தில் வைத்தியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான அனுமதியளிக்கப்பட்ட ஆளணி, முறையே 729 மற்றும் 826 ஆக உள்ள போதும் தற்போது 487 வைத்திய உத்தியோகத்தர்களும் 624 தாதிய உத்தியோகத்தர்களுமே கடமையாற்றி வருகின்றனர் - என்றார். (ற-ஜ-5-ரி5)

# கிட்டு பூங்காவில் அளவின்றி வெட்டப்படும் சவுக்கு மரங்கள்

## நத்தார் பண்டிகை அலங்காரத்துக்காக

யாழ்ப்பாணம்,டிசெ.22
நத்தார் பண்டிகைக்காக யாழ். மாநகர சபைக்கு ஆளுகைக்கு உட்பட்ட கிட்டு பூங்காவில் சவுக்கு மரங்கள் வகை தொகை இன்றி வெட்டப்படுகின்றன.
யாழ். மாநகர சபையின் ஆளுகையின் கீழ், மாநகர சபையில்



இருந்து 250 மீற்றர் தூரத்தில் உள்ள கிட்டு பூங்காவை அழகுபடுத்தும் நோக்கில் நடப்பட்டிருக்கும் சவுக்கு மரக்கன்றுகளே நத்தார் பண்டிகை அலங்காரத்துக்காக பொதுமக்களால் அளவு கணக்கின்றி வெட்டப்படுகின்றன.
குறித்த மரத்தின் மூலம் இதுவரை பேணப்பட்ட அழகு அழிக்கப்படுகின்ற சமயம் யாழ்.மாநகர சபையினரோ அல்லது சுற்றுச்சூழல் ஆர்வலர்களோ கண்டு கொள்ளவில்லை என்று தெரிவித்துள்ள பிரதேச வாசிகள் விளம்பரங்களுக்கான விழாக்கள் மேற்கொள்ள மட்டும் குறித்த பூங்காவைப் பயன்படுத்துகின்றனர் என்றும் விசனம் தெரிவித்தனர். (ற-ஜ-101)

# ஆன்மிக வங்கி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.22
தமிழ் மக்களது தற்கால பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டி வீணாகான குருபீடத் தால் ஓம் நம சிவாய மந்திரத்தை சேகரிக்கும் ஆன்மிக வங்கி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை வேண்டியும், இலங்கை இந்திய மீனவர்களது பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியும், தமிழ் மக்களது அபிலாசைகள் பூர்த்தியாகும் வண்ணம் சிறந்த அரசியல் தீர்வு கிட்டவும், காணாமல் போனோர்களது குடும்பங்களுக்கு ஆறுதல் கிட்டவும், தனிமனித அபிலாசைகள் நிறைவேறிடவும் இந்த ஆன்மிக வங்கி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இந்த ஆன்மிக வங்கிக்கு ஓம் நம சிவாய மந்திரத்தை ஒவ்வொருவரும் கைப்பட 1008 தடவை எழுதி ஆன்மிக வங்கி, வீணாகான குருபீடம், குருமார் சந்நி தானம், சித்தன் கேணி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு குருபீடத்தின் அமைப்பாளர் சிவஸ்ரீ. வாசுதேவகுருக்கள் அறிவித்துள்ளார்.
அத்துடன் தற்காலத்துக்கு ஏற்ற வகையில் கணினி மூலமாகத் தட்டச்சு செய்து veena ganagu rupeedamgmail.com எனும் மின்னஞ்சல்முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம். கடந்த வியாழக்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த ஆன்மிக செயற்திட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ற-ஜ-ரி6)

# நிதியுதவி வழங்கும் கால எல்லை நீடிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.22
வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு உதவி வழங்குவதற்காக வடக்கு மாகாண சபையால் உருவாக்கப்பட்ட நிவாரண நிதியத்துக்கு நிதிப் பங்களிப்புச் செய்வதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது என்று அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.
நிதிப் பங்களிப்பு செய்வதற்கான கால எல்லை நேற்று முன்தினம் 20 ஆம் திகதியுடன் முடிவடைவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், எதிர்வரும் 30 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.
சென்னையைப் புரட்டிப் போட்ட வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்குவதற்காக, வடக்கு மாகாண அரசால் நிதியம் உருவாக்கப்பட்டிருந்தது. குறித்த வங்கிக் கணக்கு இலக்கத்தில், இந்த மாதம் 20 ஆம் திகதி வரையில் பணத்தை வைப்புச் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.
இதுவரையில் வைப்புச் செய்யப்பட்ட பணத் தொகையை வெளிப்படுத்த முடியாது என்று தெரிவித்த அவைத் தலைவர், வடக்கு மாகாண சபையின் 38 உறுப்பினர்களினாலும் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டார்.
சேகரிக்கப்படும் நிதி தமிழகத்தில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டவர்களிடம் எப்படியாவது கொண்டு சென்று சேர்க்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-ஜ-5-ரி5)

# கசிப்புடன் பெண்கள் இருவர் கைது


யாழ்ப்பாணம், டிசெ.22
பொலிஸார் நடத்திய திடீர் சுற்றிவளைப்புகளின் போது கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு பெண்கள் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கசிப்புக் காய்ச்சுதல் மற்றும் கசிப்பு வியாபாரம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து இந்தச் சுற்றி வளைப்பு நடத்தப்பட்டது என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்ட பெண்களில் ஒருவரிடம் இருந்து ஒன்றரை லீற்றர் கசிப்பும், மற்றையவரிடம் இருந்து 20 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டன என்றும் இவர்கள் இருவரும் துன்னாலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-109)


யாழ்.நகரில் நத்தார் தினத்தை முன்னிட்டு வியாபார நிலையங்களில் விற்பனைகள் களை கட்டத் தொடங்கியுள்ளன. (ற-ஜ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்குப் பல்கலை மாணவர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிசெ.22



தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் நிலவும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியும் அக்குறைப்பாடுகளுக்கு உடன் தீர்வுகாணுமாறு வலியுறுத்தியும் தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்புவோட் பிளேஸில் அமைந்துள்ள பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இது தொடர்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது பல்கலைக்கழகத்தில் போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள் இல்லை. பல்கலைக்கழகத்தின் சுற்றுச் சூழலும் அமைவிடமும் பொருத்தமானதாக இல்லை. அத்துடன், அரச பொறியியற் கல்வியைப் பாதுகாக்குமாறும் கோரியே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

நாங்கள் இந்த விடயம் தொடர்பில் கடந்த அரசையும் வலியுறுத்தியிருந்தோம். தற்போதைய அரசிடமும் எழுத்து மூலமான பல கோரிக்கைகளை பல தடவைகள் முன்வைத்தோம். ஆனால், இது வரை அதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ளவில்லை. நாங்கள் இந்த விடயத்தை வலியுறுத்தி கடந்த 10ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்னால் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தோம்.

அதற்கானத் தீர்வு கிடைக்காமையினாலேயே மீண்டும் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம். இதற்கும் முறையான தீர்வை அரசும், உரிய அதிகாரிகளும் முன்வைக்காத பட்சத்தில் மீண்டும் போராட்டங்களை முன்னெடுப்போம் -என்றனர்.

(த-10)

# இந்திய வியாபாரிக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், டிசெ.22

சுற்றுலா விசாவில் நாட்டுக்குள் வந்து புடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஊர்காவற்றுறைப் பொலிஸாரினால் கைதான இந்திய புடைவை வியாபாரியை நாளை 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் எஸ்.லெனின்குமார் நேற்று உத்தரவிட்டார்.

புங்குடுதீவுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் புடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட தமிழ்நாடு சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த நபர் நேற்று முன் தினம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார். அவரிடம் சுற்றுலா விசா மாத்திரம் இருந்துள்ளது டன், புடைவை வியாபாரத் தில் ஈடுபடும் அளவுக்குப் போதிய ஆதாரம் இருந்திருக்கவில்லை. இதனால் அவரை நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தியபோது நீதிவான் லெனின் குமார் விளக்க மறியலில்வைக்க உத்தரவிட்டார்.

(த-107)

பொருளியற் கல்லூரி
K.K.S றோட், இணுவில்
இரு இடத்திலும்
A/L 2018
கலை - வர்த்தகப்பிரிவு
ஆரம்பம் - 02.01.2016 சனிக்கிழமை
நேரம் - 8.00 a.m
● நீங்கள் நன்கு அறிந்த எமது வழமையான ஆசிரியர் குழுவினால்
● உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
NOTE:
எமது மற்ற நிறுவனமான BARATHY
சித்தன்கேணியிலும் இதே திகதியில்
A/L 2018 ஆரம்பமாகின்றன.

# இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கைகளில் தாமதம்

*நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் கிடப்பில்*

கொழும்பு,டிசெ.22

அரச இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கைகள் குறிப்பிட்ட காலத்தில் கிடைக்காத காரணத்தால் நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைச் செயற்பாடுகள் பெரிதும் தாமதமடைகின்றன.

இதனையடுத்து இரசாயனப் பகுப்பாய்வுகள் திணைக் களத்துக்கு 3.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் நவீன தொழில்நுட்பத்துடனான விஞ்ஞான ஆய்வுகூட மொன்றை அமைத்துக் கொடுப்பதற்கு நீதியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கொரிய நாட்டு நீதித்துறை நிறுவனத்தின் (கொய்கா) உதவிகளுடன் ஆரம்பிக்கப்படும் இந்த அபிவிருத்தித் திட்டம் தொடர்பான ஒப்பந்தமொன்று, கடந்த 9 ஆம் திகதி நீதியமைச்சில் வைத்துக் கைச்சாத் திடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் நிறை வடைந்ததன் பின்னர் இரசாயனப் பகுப்பாய்வுகள் திணைக்களத்தில் தற்போது செயற்பட்டு வரும் டீ.என்.ஏ. ஆய்வு கூடம் மேன்மேலும் விரிவு படுத்தப்படுவதோடு, அது ஆசியாவிலேயே சிறந்த இரசாயனப் பகுப்பாய்வு விஞ்ஞானகூடமாகவும் இருக்கும்.

இந்த அபிவிருத்தித் திட்டம் நிறைவடைந்ததன் பின்னர், இரசாயனப் பகுப் பாய்வுகள் திணைக் களத்தின் நீதிமன்றங்கள் ஆய்வுப் பிரிவின் தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் உபாய முறைமைகளை மேம்படுத்திவிடல், உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் போன்ற செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என நீதியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (த-ஐ-22)




# தீக்காயங்களுக்கு உள்ளாகி 14 வயது மாணவி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிசெ.22

தீக்காயங்களுக்கு உள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இணுவில் இந்துக் கல்லூரி மாணவி நேற்றுச் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கோண்டாவில் மேற்குப் பகுதியைச் சேர்ந்த 14 வயது மாணவியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

பரீட்சையில் குறைந்த புள்ளிகள் பெற்றதால் மனவிரக்தியடைந்த குறித்த மாணவி, கடந்த 3 ஆம் திகதி இரவு தனக்குத்தானே தீ மூட்டியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்து அவர் உடனடியாகவே சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் கடந்த இரு வாரமாக சிகிச்சை பெற்று வந்த இவர், நேற்று உயிரிழந்துள்ளதாகக் கோப்பாய் பொலிஸார் கூறினர்.

நீதிமன்றப் பணிப்புரைக்கு அமைய யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(த-107)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு எதிராக ஜனவரி 8 ஜே.வி.பி. நடை பயணம்

கொழும்பு, டிசெ.22
மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் மீறப்பட்டுள்ளன. ஜனாதிபதித் தேர்தலின் போதும், நாடாளுமன்றத் தேர்தலின்போதும் மக்கள் ஏமாற்றப்பட்டதுடன், மக்கள் ஆணையும் மீறப்பட்டுவருகின்றது என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜனவரி 8ஆம் திகதி அரசுக்கெதிராக பெரிய நடைப்பயணமொன்றும், பேரணியொன்றும் நுகேகொடையில் இடம்பெறவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி நேற்று முன்தினம் அறிவித்தது. இது தொடர்பில் அவரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெரிய மக்கள் சக்திகள் ஒன்றுதிரண்டதன் மூலம் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஊழல் ஆட்சி தோற்கடிக்கப்பட்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கி வெற்றியீட்டிய மைத்திரிபால சிறிசேன மக்களுக்குப் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கினார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படும், ஊழல்வாதிகள் சட்டத்தின்முன் நிறுத்தப்படுவார்கள், நீதித் துறையின் சுதந்திரத்துடன் ஜனநாயகம் நிலைநாட்டப்படும் உள்ளிட்ட பல்வேறு ஜனநாயக கோசங்களை முன்வைத்தார். அதேபோல் பிரதமரும், தகவல் அறியும் சட்டம், கணக்கீட்டுச் சட்டம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பற்றி கருத்துத் தெரிவித்திருந்தார். இதுவரை ஒன்றும் நடைபெறவில்லை. மாறாக, வரவு - செலவுத் திட்டத்தில் மக்களின் மானியங்கள் நீக்கப்பட்டுள்ளதுடன், வரிச்சுமையும் விதிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி எட்டாம் திகதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியாகவுள்ள நிலையில், அரசுக்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்டும் பெரிய பேரணியொன்றை ஜே.வி.பி. ஏற்பாடுசெய்துள்ளது. அத்துடன், அன்று காலை கொழும்பிலிருந்து பெரிய நடைப்பயணம் ஒன்றையும் ஒழுங்கு செய்துள்ளோம். நடைபயணம் நுகேகொடையை வந்தடைந்ததும் அங்கு பெரிய பேரணி நடைபெறும்.

இதில் எமது கட்சியின் சிரேஷ்ட தலைவர்களும், உறுப்பினர்களும், நாட்டின் புத்திஜீவிகளும், அரசியல் விமர்சகர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்- என்றார். (த-சி)

# அமெ.-இலங்கை தொடர்பால் இந்தியாவுக்கு அதிருப்தியாம்

*கூட்டு எதிர்க்கட்சி கூறுகிறது*

கொழும்பு, டிசெ.22
அமெரிக்காவின் முகாமாக இலங்கை மாறிவருவதாகவும், அமெரிக்கா இலங்கை கள்ளத்தொடர்பானது பல்வேறு சந்தேகங்களைக் கிளப்பியுள்ளதுடன், அயல்நாடான இந்தியாவுக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூட்டு எதிர்க்கட்சி சுட்டிக்காட்டியது.

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க அமெரிக்க உதவிச் செயலாளர் நிஷா பிஸ்வால் நேற்று அதிகாலை இலங்கைக்கு உத்தியோகப்பற்றற்ற முறையில் பயணமொன்றை மேற்கொண்டிருந்தார். பட்ஜெட் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், பிஸ்வால் வருகை தந்துள்ளமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர் அமெரிக்காவிலிருந்து முக்கிய அதிகாரிகள் ஆறு பேர் இலங்கைக்கு வந்துள்ளனர். இது எமது வெளியுறவுக் கொள்கை தொடர்பில் பல்வேறு சந்தேகங்களைக் கிளப்பியுள்ளது. மாதம் ஒரு முறை அமெரிக்காவிலிருந்து ஒருவர் வருகைதந்து இலங்கை தொடர்பில் ஆராய்ந்து செல்கின்றார்.

அமெரிக்காவின் முகாமாக இலங்கை தற்போது செயற்பட ஆரம்பித்துள்ளது. அவர்களுக்குப் பல நிலப்பரப்புகளை விற்பனைசெய்வதற்கான திட்டங்கள் உள்ளன. வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட நிலையில் பிஸ்வால் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். இது தொடர்பில் மக்கள் விழிப்படைய வேண்டும். ஐ.தே.கவின் கொள்கைகள் எமக்கு நன்றாகத் தெரியும். அதனாலேயே நாங்கள் ஆரம்பம் முதல் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றோம் - என்றார். (த-சி)

# ராணுவத்தின் பெயர் நிச்சயம் காக்கப்படும்

*அரசு உத்தரவாதம்*

கொழும்பு, டிசெ.22
போரின் முடிவோடு சண்டையில் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் அதேவேளை, இரா ணுவத்தின் பெயர் பாதுகாக்கப்படும் என்பதை அரசு உத்தரவாதப்படுத்தும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் தெரிவித்தார்.

தியத்தலாவை இராணுவ முகாமில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

போரின் முடிவோடு சண்டையில் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கவேண்டும். இராணுவத்தின் பெயர் பாதுகாக்கப்படும் என்பதை அரசு உத்தரவாதப்படுத்தும் அதேவேளை, கடந்தகால காயங்களை ஆற்றுவதற்கான வழியிலும் நாடு முன்னோக்கிச் செல்லும்.

நீங்கள் காயப்பட்டிருந்தால் அதை ஆற்றுவது சுலபமானதொன்றல்ல. சீனா, இந்தியா போன்ற நாடுகளுடனான பலமான பாதுகாப்புத் தொடர்கள் இலங்கைக்குத் தேவை. அபிவிருத்தியடைந்த உலகத்துடன் இணைந்து, இலங்கை இராணுவம் தன்னை நவீனமயமாக்கிக்கொள்ளவேண்டிய தேவை உள்ளது.

இராணுவத்தின் தரங்களை அபிவிருத்தி செய்வதற்காக சீனா, இந்தியா, பாகிஸ்தான், அதேபோல அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுடனும் இலங்கை நல்லுறவுகளைப் பேணவேண்டிய அவசியம் உள் ளது.

இந்த நாடுகளுடன் நாம் உறவுகொண்டிருந்தால் இராணுவத்தை அபிவிருத்தி செய்ய இயலும். எதிர்காலத்தில் எத்தகைய சூழலையும் இராணுவம் எதிர்கொள்ளத் தக்கவாறு எதிர்கால இராணுவ சேவையை உத்தரவாதப்படுத்துவதற்கான திட்டமொன் றையும் பாதுகாப்பு அமைச்சுக்கூடாக முன் னெடுப்பதில் இலங்கை நம்பிக்கையுடன் இருக்கிறது.

உலகமெங்கிலும் நிலவரங்கள் இப்போது மாற்றமடைந்துள்ளன. இந்த மாற்றங்களுக்கும் முகங்கொடுக்கவேண்டிய நிலைப்பாட்டை இலங்கை இராணுவமும் சுவீகரித்துக்கொள்ளவேண்டும் - எனத் தெரிவித்தார். (த-சி)


## துணுக்காய் பிரதேசசபை
## மல்லாவி சந்தைக் கடைத் தொகுதி வாடகை அடிப்படையில் வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரல்

புறநெகும திட்டத்தில் மல்லாவிச் சந்தை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 22 கடைகளில் 18 கடைகள் மீள் கேள்வி கோரல் அடிப்படையில் வழங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புறநெகும திட்டநிதி மூலம் மல்லாவிச் சந்தை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் விவரப்படியான கடைகள் கீழ் குறிப்பிடப்படும் விவரப்படியான கட்டணங்களைச் செலுத்தி மாதாந்த வாடகை அடிப்படையில் நடத்துவதற்கு முல்லைத்தீவு மாவட்ட எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

01. மீள் கேள்விகள் யாவும் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு மூலப்பிரதியை **"செயலாளர் பிரதேசசபை துணுக்காய்"** எனும் முகவரிக்கும் இணைப்பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் முல்லைத்தீவு"** என்னும் முகவரிக்கும் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ 31.12.2015ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். அதற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
02. ஒப்பந்தம் மேற்கொண்டவராலேயே மேற்படி வியாபார நிலையம் தொடர்ச்சியாக நடத்தப்பட வேண்டும்.
03. வதிவிட மாவட்டத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடனும் தேசியஅடையாள அட்டையையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை ஒரு வாரகாலத்தில் செலுத்தி பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொள்வதுடன் செயலாளருடன் ஓர் ஒப்பந்தமும் செய்யவேண்டும். தவறும் பட்சத்தில் தாமாகவே இதிலிருந்து விலகியதாக கருதி அடுத்த கேள்விதாரருக்கு குறித்த நிலையம் வழங்கப்படும்.
05. கேள்விகள் ஏற்கவோ அன்றி நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு.

கேள்விப் படிவம் வழங்கப்படும் காலம் :- 22.12.2015- 31.12.2015 (அலுவலக நேரத்தில்)
கேள்விப் படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி :- 31.12.2015 பி.ப 2.00 மணிவரை
கேள்வி திறக்கப்படும் திகதி நேரம் :- 31.12.2015 பி.ப 2.30 மணி

| கடை இல | ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா ( வரி நீங்கலாக ) | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் ரூபா (வரி நீங்கலாக ) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் ரூபா | மாத வாடகை ரூபா |
|---|---|---|---|---|
| GF 02 | 450,000.00 | 500.00 | 5,000.00 | 3750.00 |
| GF 03 | 450,000.00 | 500.00 | 5,000.00 | 3750.00 |
| GF 06 | 420,000.00 | 500.00 | 5,000.00 | 3500.00 |
| GF 07 | 420,000.00 | 500.00 | 5,000.00 | 3500.00 |
| GF 08 | 420,000.00 | 500.00 | 5,000.00 | 3500.00 |
| GF 09 | 420,000.00 | 500.00 | 5,000.00 | 3500.00 |
| GF 10 | 420,000.00 | 500.00 | 5,000.00 | 3500.00 |
| FF 01 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF 02 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF 04 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF 05 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF06 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF 07 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF 08 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF 09 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF 10 | 330,000.00 | 500.00 | 5,000.00 | 2,750.00 |
| FF 11 | 240,000.00 | [illegible] | 5,000.00 | 2,000.00 |
| FF 12 | 330,000.00 | [illegible] | 5,000.00 | 2,750.00 |

திரு.க.சத்தியநாதன்
செயலாளர்,
பிரதேசசபை,
துணுக்காய்.

(C15878)(10.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சி....

## கூட்டமைப்பை

அங்குரார்ப்பண நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியவர்களும், கூட்டமைப்பின் அதிருப்தியாளர்களும் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிளவுபடுத்துவதற்காகத் திட்டமிட்டுக் கூட்டமைப்பின் அதிருப்தியாளர்களின் அழுத்தத்தின் பிரகாரம் உருவாக் கப்பட்டுள்ளது என்று அரசியல் இராஜதந்திரிகளிடமிருந்தும் மற்றும் உள்ளூர், சர்வதேச ஊடகங்களிலிருந்தும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று அதன் தலைவர் இரா. சம்பந்தனிடம் நேற்று உதயன் வினவியபோதே அவர் மேற்படி விடயங்களைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் ஒரு புதிய அமைப்பு ஜனநாயக ரீதியில் உருவாகிச் செயற்படுவதை எதிர்க்கமுடியாது. ஆனால், ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள் கட்சியின் கோட்பாடுகளை மீறி கட்சியின் தலைமையின் அனுமதியைப் பெறாமல் தனிப்பட்ட ரீதியில் ஒரு புதிய அமைப்பை உருவாக்குவதைக் கட்சியின் தலைமை ஏற்றுக் கொள்ளாது. அதேமாதிரித்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்தவர்கள் கட்சித் தலைமைக்கு அறிவிக்காமல் கட்சியின் அனுமதியைப் பெறமால் ஓர் அமைப்பை உருவாக்குவதை நாம் விரும்பமாட்டோம். இது குழப்பத்திற்கே வழிவகுக்கும். எனினும், தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற கூட்டமைப்பை எவராலும் பிளவுபடுத்தவே முடியாது.

தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்நாட்டில் மட்டுமன்றி, சர்வதேச ரீதியில் பெரிதும் பாடுபட்டு வருகின்றது. தீர்வுக்கான இந்த இலக்கை நாம் தேர்தல் விஞ்ஞாபனங்களில் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளோம். சர்வதேச பிரதிநிதிகளுடனான ஒவ்வொரு சந்திப்புகளின் போதும் இதனை நாம் வலியுறுத்திக் கூறியுள்ளோம். இந்தச் சந்திப்புகளில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண முதலமைச்சர், மாகாண சபைகளின் அமைச்சர்கள் மற்றும் மாகாண சபைகளின் உறுப்பினர்களும் பங்கேற்றியிருக்கின்றார்கள்.

நாம் ஓரணியில் நின்று நிரந்தர அரசியல் தீர்வைக் காண விரும்புகின்றோம். இதைக் குழப்பியடிக்க விரும்பவில்லை. குழப்பியடிக்க விரும்புவோர் இதனைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

தமிழ் மக்கள் பேரவை அமைப்பின் உருவாக்கத்துக்கு இப்போது என்னால் பதிலளிக்க முடியாது. பொறுத்திருந்துதான் பதில் வழங்குவேன் -என்றார்.

(த-சி)

**வீடு வாடகைக்கு** தொடர்பு: 077 459 8750

யாழ். பிறவுண்வீதி, நீராவியடியில் அமைந்துள்ள முற்றிலும் மாபிள் பதிக்கப் பட்டுள்ள மாடி வீடு வாகனத் தரிப்பிடத் துடன் வாடகைக்கு உண்டு.

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி மட்டுவில் நுணாவில் எல்லை வீதியில் (ராசாகடை முன் வீதி) A9 வீதிக்கு 500 மீற்றர் தூரத்தில் உள்ள 3பரப்புக் காணியில் குழாய்க்கிணற்றுடன் கட்டிமுடிக்கப்படாத வீடு விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 072 922 9424

**தையல் வேலையாள்கள் தேவை** தொடர்பு: 077 670 1495

தையல் வேலை தெரிந்தவர்களும், பழக விரும்புபவர்களும் O/L படித்து முடித்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

**வேலையாள் தேவை** தொடர்பு: 077 606 7894

வயதான ஒருவருடன் வீட்டில் தங்கிநின்று வேலை செய்யக்கூடிய பெண் வேலையாள் தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் தொடர்புகொள்ளவும்.

**காணி தேவை**

பிரதான வீதிகளுக்கு அண்மையில் 20-25 பரப்புக் காணி தேவை.

* தெற்கு புன்னாலைக் கட்டுவன் முதல் வயாவிளான் வரையான பகுதிக்குள்
* தெற்கு புன்னாலைக் கட்டுவன் முதல் நிலாவரை வரையான பகுதிக்குள்
* வடக்கு புன்னாலைக்கட்டுவன் முதல் நிலாவரை வரையான பகுதிக்குள்
* இருபாலை வீதி, கோப்பாய் முதல் நிலா வரை வரையான பகுதிக்குள்

(1.5லட்சம் முதல் 2.5 லட்சம் வரைக்குள்) விற்க விரும்புவோர் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 07575 99546

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

20.12.2015 | 1918 | ஊதா

08 21 36 39

செவ்வாய்க்கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,591,540/-

Galaxy Star

வெற்றி வாரம் 018 திகதி 20.12.2015

08 02 20 29 42

அடுத்த புதன்கிழமை சுப்பர் பரிசுப் பொதி ரூ. 3,397,280/-

## காணவில்லை



வரணி வடக்கு, வரணியைச் சேர்ந்த கருணாகரன் பிரவின்னா (வயது .14) 05.12.2015 தொடக்கம் காணவில்லை. இவரைப்பற்றிய தகவல் தெரிந்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துக்கோ அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கோ தகவல் தரவும்.

077 394 2533

தகவல்:
தந்தை
கருணாகரன், வரணி வடக்கு, வரணி.

(சி/15876) (11,15,17,18)

## தவறிவிட்டது

தொடர்பு: 078 937 1330, 078 685 5462

குமாரவேலாயுதம் கிருஸ்ணலீலா ஆகிய எனது (605092629 V) என்னும் அடையாள அட்டை நெல்லியடிச் சந்தியில் இருந்து மூத்தவிநாயகர் கோயிலுக்கு இடையில் சனிக்கிழமை அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(62225) (14,15)

## மரண அறிவித்தல்



### சிவயோகநாதன் சுயந்தன்

(காரியாலய இணைப்பாளர்- ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நெல்லியடி காரியாலயம்)

மலர்வு:

மறைவு:

22.01.1982 ...ல மத்தி கரவெட்டி 21.12.2015 ...ப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் சிவயோகநாதன் சுயந்தன் நேற்று (21.12.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சிவயோகநாதன்-பத்மாவதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், சுபாஜினி, மயூரன், சிவராம், ஸ்ரீராம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், விமலநாதன்-கிருஷ்ணவேணியின் (லண்டன்) மருமகனும், இரவிச்சந்திரன், கருணாவதி (பிரதேச செயலகம்-கோப்பாய்), ராஜேந்திரநாதன் மதனாவதி (சுவிஸ்), அருணாச்சலம் சுலோசனாவதி (லண்டன்), கமலஹாசன்-தில்லைநாயகி (ஆசிரியை-முஸ்லிம் ம.வி. வவுனியா), கமலநாதன் ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற செல்லப்பாக்கியம் (அதிபர்) மற்றும் யோகம்மா, காலஞ்சென்றவர்களான கந்தசாமி நாகமுத்து ஆகியோரின் பேரனும், கோபிகா, பவன், ராகவராம், தாருகா, ராகுலன், மிதுரா, பிரியங்கா, துவாரகா, பானுகோபன், நேமிகிருஷ்ணா, தயாளன், கஜந்தன், லகிதரன் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும், பவன்ஜா, காமாட்சி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2015) செவ்வாய்க் கிழமை பி.ப ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரூண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**துன்னாலை மத்தி,**
**கரவெட்டி.**

(C/15890) (10.17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

உன் பிள்ளைகளெல்லாம் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும். ஏசாயா 54:13



காரைநகரைச் சேர்ந்த
வைத்திலிங்கம் சகுந்தலா தம்பதிகளின் புதல்வன்
**வைத்திலிங்கம் ஜெகதீஸ்வரன்**
19.12.2015 அன்று கிழக்குப் பல்கலைக்கழகப் பொது பட்டமளிப்பு விழாவில்
வர்த்தகமாணி B.com
பட்டம் பெற்றமையையிட்டு அவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
வைத்தி பதிப்பகம் ஸ்தாபனத்தினர்,
மானிப்பாய் ...
தொடர்பு : 07...
vaithiprinters@yahoo.com

## PATRICIAN INSTITUTES
## பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 06.01.2016

I. Computer course

| Course | Duration |
|---|---|
| A. Information & Communication Technology (ICT) (O/L மாணவர்களின் நலன் கருதி ஆரம்பிக்கப்படுகின்றன) | Duration 4 months |
| B. Advanced in Computer Programming | Duration 8-months |
| C. Diploma in Microsoft Office | Duration 4 months |
| D. Diploma in desk top Publishing | Duration 4 months |
| E. Diploma in Video Editing | Duration 4 months |
| F. Diploma in Type Setting | Duration 6 months |
| G. Diploma in Computerized Accounting | Duration 4 months |
| H. Diploma in Software Engineering | Duration 4 months |
| I. Diploma in Micro media | Duration 6 months |
| J. Diploma in Web Multimedia | Duration 4 months |
| K. Professional Diploma in Graphic Design | Duration 4 months |
| L. Computer Hardware Technology | Duration 4 months |
| M. Internet & Email | Duration 3 months |
| N. General Information Technology (GIT) | Duration 4 months |

(கணினி பயிலும் மாணவர்களின் நன்மை கருதி ஆங்கில தட்டெழுத்து (ENGLISH TYPING) தமிழ் தட்டெழுத்து (TAMIL TYPING) இலவசமாக கற்பிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

II. Short Hand Typing (English)
சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்)
Duration 6 months
கணினி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.

III. Short Hand Typing (Tamil)
சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) — Duration 6 months
கணினி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்

IV. Gentral motor Mechanism
(Petrol & Diseal வாகனங்கள், மோட்டார் வாகனம் திருத்துதல்) — Duration 6 months

V. Gentral Electrician (Wiring & Re - Winding)
ஜெனரல் எலக்ரிஸன் மின்சார இணைப்பு மோட்டார் றிவைண்டிங் — Duration 6 months

VI. Lathe Machine Operation (Milling & Machine, Shaping Mechine என்பன கற்றுக்கொடுக்கப்படும்)
(கடைச்சல் இயந்திரம் பயிற்சி) (On the Job Training வழங்குதல்) — Duration 6 months

VII. Carpentery (With use of Machinery மரவேலை
(On the Job Training வழங்குதல்) — Duration 6 months

VIII. Refrigeration and Air Conditioning — Duration 6 months

IX. Motor Cycle Mechanism — Duration 6 months

குறிப்பு: 1. பயிற்சிக் கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்
2. பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு:
Registrar, Patrician Institutes
61, (59), St.Patrick's Road, Jaffna.
T.P. 021 222 6148, Fax: 021 222 6148
Email: Patricianjaffna@yahoo.com

(C/15877) (10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ். இலங்கை முகவர்கள் குறித்து இரகசிய விசாரணை

கொழும்பு, டிசெ.22
ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் முகவர்கள் இலங்கையில் உள்ளதாக வெளிநாட்டுச் செய்திகளில் வெளியாகியுள்ள நிலையில், அது தொடர்பில் இரகசிய விசாரணைகளைப் புலனாய்வுப்பிரிவினர் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
ஐ.எஸ். தீவிரவாத அமைப்புடன் ஏற்கனவே இலங்கையர் ஒருவர் இணைந்துகொண்டிருந்தார். இதனையடுத்து தற்போது இலங்கையில் ஐ.எஸ். அமைப்பின் முகவர்கள் இருப்பதாக இந்தியச் செய்திகளில் சில தினங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தன.
இது தொடர்பில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீரவிடம் கேட்டபோது,
இது தொடர்பில் தற்போது எம்மால் எவ்வித கருத்துகளும் தெரிவிக்க முடியாது. எனினும், முன்னெடுக்கப்படும் விசாரணைகள் தொடர்பில் பொலிஸாரிடமே வினவவேண்டும்- என்றார்.
முன்னெடுக்கப்படும் விசாரணைகள் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகரவிடம் வினவியபோது,
ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் முகவர்கள் இலங்கையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுவது தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் தொடர்பில் பொலிஸாரிடம் எவ்வித தகவல்களும் வழங்கப்படுவதில்லை. இவ் விசாரணைகளை புலனாய்வுப்பிரிவு மேற்கொள்ளுகின்ற தாகவே எண்ணுகின்றேன். ஆகவே, இது தொடர்பில் எம்மால் கருத்துக் கூறமுடியாது எனத் தெரிவித்தார்.
பொலிஸ் இராணுவத் தரப்புகள் இது தொடர்பில் இருவேறு கருத்துகளை முன்வைத்துள்ளன. எனினும், புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொள்வார்களாயின், அது தொடர்பில் இராணுவத்திடமோ, பொலிஸாரிடமோ தெரியப்படுத்துவதில்லை எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் சுட்டிக்காட்டினார். (த-சி)


## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இராமலிங்கம் பொன்னுத்துரை**
உரிமையாளர் - Bala Fancy House-
ஊர்காவற்றுறை)
மண்ணில் 28.03.1923
விண்ணில் 22.12.2005
இந் நாளில் உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.
153, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்




தோற்றம்
1993.09.05
மறைவு
2015.11.22
கடந்த 22.11.2015
ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த
**அமரர் செல்வன் இரவீந்திரன் சுபாஷன்**
அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 22.12.2015 செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப 10.30 மணியளவில் நடைபெறும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
மேலும் அன்னாரினது மறைவுச் செய்தி கேட்டு எமது துயரிலும், நேரிலும், தொலைபேசியிலும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
[இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தயவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.]
தீர்வேலிவடக்கு,
தீர்வேலி.
(68022)
(14,15)
குடும்பத்தினர்.


## பஸ் விபத்தில் 25 பேர் காயம்

கொழும்பு, டிசெ.22
அம்பாறை கண்டி பிரதான வீதியில் பதியதலாவ, சேரங்கட பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற பஸ் விபத்தில் 25 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.
கண்டியிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றுடன், அம்பாறையிலிருந்து கண்டி நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்று மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக அது மேலும் தெரிவித்தது.
காயமடைந்த 25 பேரும் மகியங்கனை மற்றும் பதியதலாவ வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் 22 பேர் பெண்கள் என்பதுடன், பஸ் சாரதிகள் இருவரும் அடங்குவர்.
இந்த விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பதியத்தலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

## தேராவிலில் பதுங்கு குழி தோண்டும் முயற்சி பயனேதுமின்றி முடிந்தது

கிளிநொச்சி, டிசெ.22
தேராவில் பகுதியில் நிலத்தின் கீழ் பதுங்குகுழி இருக்கலாம் எனச் சந்தேகித்து நேற்று அங்கு அகழ்வு



நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் அது பயன் இன்றி நிறைவடைந்தது.
குறித்த இடத்தில் மின்சார சபை தூண் நடும் பணியில் ஈடுபட்டபோது வித்தியாசமான ஒலி கேட்டதைத் தொடர்ந்து அது குறித்து அவர்கள் தமது உயர் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தினர். அதிகாரிகள் இந்த விடயத்தை விசுவமடுப் பொலிஸாரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.
பின்னர் பொலிஸார் நீதிமன்ற அனுமதியுடன் இராணுவத்தினருடன் இணைந்து நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் அந்த இடத்தைத் தோண்ட ஆரம்பித்தனர். இருப்பினும் அந்த கிடங்கில் தண்டவாளம், இரண்டு ஆட்லறி குண்டு வெற்றுக் குழல்கள், பழுதடைந்த பாய் தலையணை. சீற் என்பனவே மீட்கப்பட்டதுடன் தோண்டிய கிடங்கு மூடப்பட்டது. (த-ரிே)


## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தின் மேனாள் முதல்வர்
திருமதி வசந்தாதேவி மேகலிங்கம்
அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி
**செல்லக்கண்டு இராமலிங்கம்**
அவர்கள் அமரத்துவம் எய்தியமையை இட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.
பாடசாலைச் சமூகம்,
யா/நாவற்குழி ம.வி.


## இராஜாங்க அமைச்சராக பிரியங்கர

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற இராஜாங்க அமைச்சராக பிரியங்கர ஜயரத்ன, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.
அதேவேளை, நீதி மற்றும் புத்தசாசன பிரதி அமைச்சராக துஸ்மந்த மித்ரபால நேற்று ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (த)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 21 . 08 . 1924
மறைவு 22 . 11 . 2015
**சபாரட்ணம் கனகரெத்தினம்**
(பிரதம காசாளர் - ஐக்கிய வியாபார சங்கம் -யாழ்ப்பாணம்)
கடந்த 22.11.2015 சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் சபாரட்ணம் கனகரெத்தினம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (22.12.2015) செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் தாங்களும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.
மேலும் அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நேரடியாகவும் தொலைபேசி, குறுஞ்செய்தி, இணையம் ஊடாகவும் ஆறுதல் கூறியோருக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள் மூலம் கண்ணீர்அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதி நிகழ்வில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
616/4, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(68038)
(14,15)
குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**பொன்னையா மகேஸ்வரன்**
(ஓய்வுநிலை பிரதம லிகிதர்
இ.போ.ச.வவுனியா)



மலர்வு
11.05.1944
உதிர்வு
24.12.2012
திதி: பூர்வபக்க துவாதசி
(22.12.2015)

எம் குடும்பத்தின் ஒளிவிளக்கே
எமைப் பிரிந்து எங்கு சென்றீர்
மூன்றாண்டுகள் கடந்தாலும்
முடிவற்ற எம் துயரம் முடிவுறாது

எப்போதும் எதற்கும் அறிவுரைகள் பல கூறி
பக்கபலமாக ஆதரவு பலதந்து
அச்சமின்றி வாழ உறுதுணையாய் இருந்தீர்
எல்லாம் மறந்து நீண்டதூரம் சென்றதேனோ!

[illegible]வரவை ஆவலுடன் எதிர்பார்தோம்
[illegible] அப்படியே எதிர்பார்க்க வைத்துவிட்டு
எங்கு சென்றீர்.. விழிநீர் சொரிய
உம் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

சாவகச்சேரி.
சகோதரிகள்,
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீசாலையில் பஸ் தரிப்பிடம் அமைத்துத் தரக் கோரிக்கை

சாவகச்சேரி, டிசெ. 22
மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள பஸ் தரிப்பிடக் கட்டடம் சேதமடைந்துள்ளதால் அதனை மாணவர்களும் பொதுமக்களும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளனர். அதனால் புதிய தரிப்பிடம் ஒன்றை அமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போதுள்ள தரிப்பிடம் ஏ-9 வீதிப் புனரமைப்பு மற்றும் ரயில் பாதை அமைப்பு போன்றவற்றால் மிகவும் பாதிப்புக்குள்ளாகிக் காணப்படுகிறது. சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட இந்தத் தரிப்பிடக் கட்டடம் தற்போது ரயில் அவ்விடத்தைக் கடக்கும் வேளைகளில் அசையும் நிலையில் உள்ளது. மழை காலங்களில் வெள்ளம் தரிப்பிடக் கட்டடத்துக்குள் நீண்ட காலம் தேங்கி நிற்பதால் அதனைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. அத்துடன் கல்லூரி வாசலிலிருந்து தரிப்பிடம் தூரத்தில் அமைந்துள்ளதால் பயணிகள் வாகனங்கள் வரும் வேளையில் மாணவர்கள் வீதியைக் கடப்பதற்கு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மாணவர்கள் பொதுமக்கள் பயன்படுத்தக் கூடிய வகையில் புதிய வாகனத் தரிப்பிடத்தை அமைத்து வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் பொது அமைப்புகளையும் மாணவர்களும் பொதுமக்களும் கேட்டுக் கொண்டுள்ளனர். (ற-ஐ-9)

# உணவகங்களில் சீர்கேடுகள் நடவடிக்கை எடுக்காதது ஏன்?

### வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

யாழ்ப்பாணம்,டிசெ.22
யாழ்.நகரிலுள்ள சகல உணவகங்களிலும் சுகாதாரச் சீர்கேடுகள் காணப்படுகின்றன. அதனைத் தடுப்பதற்கு ஏன் சுகாதாரத்திணைக்களத்தினர் நடவடிக்கை எடுக்கவில்லை.?
-இவ்வாறு வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கேள்வி எழுப்பியுள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் மீதான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
2016 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாக அமைச்சர் குறிப்பிட்டார். ஆனால் முன்னைய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் நிலை தொடர்பான விவரங்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

யாழ்.நகரில் பல கடைகளிலும் – உணவகங்களிலும் சுகாதாரம் கடைப்பிடிக்கப்படுவதில்லை. ஐஸ்கிறீமில் மலத் தொற்று என்பதற்காக சுகாதாரத் திணைக்களம் அதிரடிப் படையணியைக் களமிறக்கி சோதனை செய்தது. ஆனால் இது போன்ற நடவடிக்கையை, யாழ்.நகர் உணவகங்கள் மீது ஏன் எடுக்கின்றீர்கள் இல்லை.

> “மாணவர்கள் பாடசாலைகளில் மட்டும் சுகாதாரமான தண்ணீரை அருந்தினால் போதுமா?”

பாடசாலைகளில் மாணவர்களுக்கான சுத்தமான குடிதண்ணீரை வழங்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளது என்று அமைச்சர் குறிப்பிட்டார். அந்த மாணவர்கள் பாடசாலைகளில் மட்டும் சுகாதாரமான தண்ணீரை அருந்தினால் போதுமா? அவர்கள் வீடு சென்று மீண்டும் தூய்மையற்ற குடிதண்ணீரையே அருந்தவுள்ளனர். அவற்றைச் சீர் செய்வது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

சிறுவர்நன்னடத்தை பாடசாலைகளில் தங்கவைக்கப்படும் சிறுவர்கள் எந்த அளவுக்கு நன்னடத்தைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. நன்னடத்தை பயிற்சி வழங்குபவர்கள் அதற்கான பயிற்சி பெற்றவர்களாக உள்ளனரா? இவை தொடர்பான திட்டங்கள் வகுக்கப்படுதல் வேண்டும்.

இன்று மருத்துவர்கள் பற்றாக் குறையைப் பற்றிக் குறிப்பிடுகின்றீர்கள். மருத்துவபீடத்திலிருந்து எவ்வளவு மாணவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களை இங்கே சேவை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தப் பிரதேசத்திலுள்ள வறிய மக்களின் வரிப்பணத்தில்தான் அவர்கள் இலவசமாகக் கற்கின்றனர். அந்த மக்களுக்கு அவர்கள் சேவை செய்ய வேண்டும். இதற்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் முரண்பாடாக இருந்தால் அதனைப் பேசித் தீர்த்து, மருத்துவபீடத்திலிருந்து வெளியேறுபவர்களை இங்கே சேவை வழங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார். (ற-ஐ-5-ரி5)

## உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மு.கா. சிக்கலைச் சந்திக்கும்

### என்.கே.றம்ழான் தெரிவிப்பு

மட்டக்களப்பு,டிசெ.22
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் விவகாரம் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் என்.கே.றம்ழான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;
நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெரும் சவாலை எதிர் கொண்டிருந்தது.

அதற்கமைவாக கட்சித் தலைமையின் வேண்டுகோளை ஏற்று கணிசமான வாக்குகளை முஸ்லிம் காங்கிஸுக்கு வழங்கினர். அதனால் குறித்த பகுதிக்கு எந்தவொரு அரசியல் கட்சியினூடாகவும் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்காமல் செய்யப்பட்டது. ஆனால் கட்சி எதிர்பார்த்த இரண்டு தேசியப்பட்டியல் பிரதிநிதித்துவத்தையும் பெற்றுக் கொண்டது. வாக்குறுதி வழங்கப்பட்டதற்கு அமைவாக இன்று வரைக்கும் எந்தவொரு ஊருக்கும் குறித்த தேசியப்பட்டியல் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை.

> “கட்சி எதிர்பார்த்த இரண்டு தேசியப்பட்டியல் பிரதிநித்துவத்தையும் பெற்றுக் கொண்டது.”

இந்தநிலையில் இன்னமும் ஒரு சில மாதங்களில் நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் தேசியப் பட்டியல் விவகாரம் கட்சிக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தும். – என்றார். (ற-ஐ-10)

# எழுதுமட்டுவாழ் சந்தையில் வியாபார நடவடிக்கை ஆரம்பம்



சாவகச்சேரி,டிசெ.22
சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட எழுதுமட்டுவாழ் பொதுச் சந்தையில் மீண்டும் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் யாழ். மாவட்ட அரச அதிபர் இந்தப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டு விடுத்த அறிவிப்பின் பயனாக சாவகச்சேரி பிரதேசசபை சந்தையை ஆரம்பித்துள்ளது.

15 வருடங்களுக்கு முன்னர் பல்வேறு பிரிவுகளுடன் இயங்கிய எழுதுமட்டுவாழ் சந்தைக் கட்டடம், போரால் முழுமையாக சேதமடைந்தது.

2011 ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடியமர்ந்த வேளையில் மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து 5 மில்லியன் ரூபா செலவில் சந்தைக் கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

சந்தையில் வியாபாரிகள் மட்டுமே இயங்கியதாலும் உற்பத்தியாளர்கள் பொருள்களைக் கொண்டு வராததாலும் ஒரு வருடத்தில் சந்தைச் செயற்பாடுகள் செயலிழந்தன.

எனினும் மீளவும் சந்தையில் வியாபார நடவடிக்கைகள் வியாபாரியொருவரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-9)

## மணல் ஏற்றிய நிலையில் ஹன்ரர் சிக்கியது

யாழ்ப்பாணம்,டிசெ.22
சட்டவிரோதமாக மணல் ஏற்பட்ட நிலையில் ஹன்ரர் ஒன்று வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் நேற்று மாலை மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அந்த வாகனத்தை செலுத்தி வந்ததாகக் கூறப்படும் 55 வயதுடைய சந்தேக நபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறைப் பகுதியில் வீதிக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரே, குறித்த ஹன்ரரை துரத்திச் சென்று மடக்கிப் பிடித்தனர் என்றும் சந்தேக நபர் கம்பர்மலைப் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-ஐ-9)

# வடக்கு புனர்வாழ்வுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை

### வடக்கு அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.22
வடக்கு மாகாண புனர்வாழ்வு மற்றும் மகளிர் விவகாரங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் எவையும் வழங்கப்படவில்லை. இருப்பினும், வடக்கு மாகாண சபையால் வாகனக் கொள்வனவுக்கு ஒதுக்கப்பட்ட 51மில்லியன் ரூபா குறைநிரப்பு மதிப்பீட்டு நிதி, மேற்படி இரண்டு அலகுகளின் வேலைத் திட்டங்களுக்கு வழங்கப்பட்டன.
-இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் வரவு – செலவுத் திட்ட விவாதத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
புனர்வாழ்வு மற்றும் மகளிர் விவகாரம் ஆகியவற்றுக்காக ஆளணி இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை. ஆளணி உருவாக்கத்துக்கான கோரிக்கையானது, அமைச்சரவையின் அனுமதியுடன், சம்பளங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும், உடனடித் தேவைகருதி, கடந்தமாத அமைச்சரவைக் கூட்ட அனுமதியுடன், அமைச்சின் கீழுள்ள நிர்வாகக் கட்டமைப்பின் ஊடாக தனித்தனியான அலகுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் கணவனை இழந்த, கணவன் காணாமற்போயுள்ள மற்றும் கணவன் இருந்தும் மாற்றுவலுவுள்ளவராக இருக்கின்ற பெண்கள் மற்றும் மாற்றுவலுவுடையோரைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள் மீது அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளவர்களாக இருக்கின்றோம்.

ஆகையால், இவர்களுக்காக புனர்வாழ்வு மற்றும் வாழ்வாதாரம் தொடர்பான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது.

இந்த வருடம் மேற்படி இருதிணைக்களங்களுக்குமான நிதி ஒதுக்கீடு இல்லாத போதிலும் வடக்கு மாகாண சபையால் வாகனக் கொள்வனவுக்காக ஒதுக்கப்பட்ட 51 மில்லியன் ரூபா குறைநிரப்பு மதிப்பீடு மூலம், மேற்படி இரு அலகுகளின் வேலைத் திட்டங்களுக்கு வழங்கப்பட்டது.

விசேட தேவையுடையோர் மற்றும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களை இனங்காணும் ஆய்வை மேற்கொள்வதற்காக, முதற் கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தில் களப்பணிபுரியும் குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கு ஆசிய மன்றத்தின் உதவியுடன் 50 கணிப்பலகைகள் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், இதன் இலகு தன்மை, விரைவு, வினைத்திறன் என்பவற்றைக் கருத்திற் கொண்டும், எதிர்கால பொதுச்சுகாதார சேவை வழங்கல் தொடர்பான அறிக்கையிடலை மேம்படுத்தும் முகமாகவும், அடுத்த வருடம் ஏனைய மாவட்டங்களிலும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியின் உதவியுடன் கணிப்பலகைகள் பெறப்பட்டு, இந்த ஆய்வு மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பெறப்படும் தகவல்களிலிருந்து விசேட தேவையுடையோர் மற்றும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களை இனங்காண்பதுடன், அவர்களின் தேவைகள் அடையாளப்படுத்தப்பட்டு, குறித்த தேவைகள் இலகுவாக வழங்கக் கூடிய தன்மை ஏற்படுத்தப்படும் – என்றார். (ற-ஐ-5-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.22
வடமராட்சி வல்லை பிரதான வீதியில் பொலிஸாரின் சோதனை நடவடிக்கையில் கஞ்சாவுடன் 18 வயது இளைஞர் ஒருவர்வல்வெட்டித்துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வடமராட்சி பகுதி நோக்கி பயணித்து கொண்டிருந்த பஸ்ஒன்றில்கஞ்சாகொண்டு செல்லப்படுகின்றது என்று கிடைத்த தகவலைஅடுத்து வல்லை பகுதியில் வைத்து குறித்த பஸ்ஸை பொலிஸார்வழிமறித்துசோதனையிட்டுள்ளனர்.

அதன்போது பஸ்ஸில் பயணித்த இளைஞர் ஒருவரின் நடத்தையில் தமக்கு சந்தேகம் ஏற்பட்டதை அடுத்து அவர் சோதனைக்குள்ளாக்கப்பட்டுள்ளார். அதன்போது அவரிடம் இருந்து 14 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞன் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஜ-109,107)

## கணவனைக் கண்டுபிடித்துத் தருமாறு ஜனாதிபதி முன்னால் கதறியழுத பெண்

யாழ்ப்பாணம், டிசெ. 22
காணாமல் போகச் செய்யப்பட்ட எனது கணவரைக் கண்டுபிடித்துத் தாருங்கள் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா முன்னபாக, கோணப்புலம் முகாமைச் சேர்ந்த பெண் ஒருவர் கதறியழுதார். எப்படியாவது தனது கணவரை மீட்டுத் தர வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால, திடீரென மல்லாகம் கோணப்புலம் முகாமுக்குச் சென்றிருந்தார். அங்கு தங்கியுள்ள மக்களுடன் அவர் கலந்துரையாடினார். சுமார் பத்து நிமிடங்கள் வரையில் கலந்துரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதியின் முன்பாகவே குறித்த பெண் தனது கணவரை மீட்டுத் தருமாறுகதறி அழுதார்.

எனது கணவர் கடந்த காலத்தில் காணாமற் போனார். அவரை எப்படியாவது மீட்டுத் தாருங்கள். எனக்கு வேறு ஒன்றும் தேவையில்லை. எனது கணவர்தான் எனக்குத் தேவை என்று கண்ணீருடன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார் அந்தப் பெண். இதற்கு ஜனாதிபதி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

கோணப்புலம் முகாமுக்கு ஜனாதிபதியுடன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் மற்றும் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனும் சென்றிருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த எவரும் பிரசன்னமாகியிருக்கவில்லை. (ற-5)



அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் யாழ் மாவட்ட சம்மேளனத்தினரால் நடத்தப்பட்ட இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்.ஒஸ்மானியா கல்லூரி மஹ்மூத் மண்டபத்தில் நடைபெற்றது. (ற-ஜ-10)

# 12,181 குடும்பங்கள் மீள்குடியமரவில்லை

### யாழ்.மாவட்ட செயலக புள்ளிவிவரங்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.22
யாழ்.குடாநாட்டில் 10 ஆயிரத்து 716 தமிழ்க் குடும்பங்களும், ஆயிரத்து 465 முஸ்லிம் குடும்பங்களும் உள்ளடங்கலாக 12 ஆயிரத்து 181 குடும்பங்கள் இன்னமும் மீள் குடியமர்த்தப்படாதுள்ளன என்று மாவட்டச் செயலகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

மீள் குடியமர்த்தப் படவேண்டிய 10 ஆயிரத்து 716 தமிழ்க் குடும்பங்களில் ஆயிரத்து 318 குடும்பங்கள் குடாநாட்டில் உள்ள முகாம்களில் வாழ்கின்றன என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை குடாநாட்டில் உள்ள 190 ஆயிரத்து 150 குடும்பங்களில் தற்போது 617 ஆயிரத்து 722 குடும்பங்களே வசிக்கின்றன. அத்துடன் போர் முடிவுற்றதன் பின்னர் குடாநாட்டில் 31ஆயிரத்து 118 குடும்பங்களைச் சேர்ந்த 97 ஆயிரத்து 52 பேர் மீளக் குடியமர்த்தப்பட வேண்டியிருந்தது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




அத்துடன் யாழ்.குடா நாட்டில்உள்ளநலன்புரிமுகாம்களில் உள்ள ஆயிரத்து 318 குடும்பங்களும் 7 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 32 முகாம்களில்தங்கியுள்ளனர் என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது.

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் 9 முகாம்களில் ஆயிரத்து 369 பேரும், தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் 6 முகாம்களில் 435 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 504 பேரும், கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 5 முகாம்களில்221குடும்பங்களைச் சேர்ந்த 895 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 3 முகாம் களில் 25 குடும்பங் களைச் சேர்ந்த102பேரும், நல்லூர் பிரதேச செயலாளர்பிரிவிலுள்ள ஒரு முகாமில் 9 குடும்பங்களைச் சேர்ந்த22 பேரும், கரவெட்டிப் பிர தேச செயலாளர் பிரிவிலுள்ள ஒரு முகாமில் 16 குடும் பங்களைச் சேர்ந்த 54பேரும்,பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் பிரிவில் 7 முகாம்களில் 229 குடும் பங்களைச் சேர்ந்த 791 பேரும் வசிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-101)

## சட்டவிரோதமாக மாடு வெட்டிய மூவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.22
சுதந்திரபுரம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் நாம்பன் மாடு ஒன்றை இறைச்சியாக்கிய மூவர் கடந்த சனிக்கிழமை அதிகாலை 2:30 மணியளவில் அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளனர்.

அத்துடன் இறைச் சியாக்கப்பட்ட 40 கிலோ கிராம் இறைச்சியும் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள், சுதந்திரபுரம், ஈவினை மற்றும் கலைமதி பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஜ-107)

## மாணிக்க வாசகர் விழா

யாழ்ப்பாணம், டிசெ.22
காரைநகர் மாணிக்க வாசகர் சபையின் 61 ஆவது மாணிக்க வாசகர் விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நடை பெறவுள்ளது.

மாணிக்கவாசகர்பெருமானின் திருவுருவப் படமும் திருவாசக திருமுறையும் ஊர்வலமாக சடையாளி வைரவர்ஆலயத்தில்இருந்து பிற்பகல் 2 மணிக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

இந்த ஊர்வலம் சயம்பு வீதி வழியாக மடத்துக் கரை அம்மன் ஆலயம் சென்று, அதன் பின்னர் பிரதான வீதி வழியாக பழையகண்டி வீதியை அடைந்து, சம்பந்தர் கண்டி, நடுத்தெரு, பெரிய மணல், சடையாளி ஊடாகச் சென்று ஈழத்துச் சிதம்பரத்தை அடைந்து வசந்த மண்டபத்தில் கூட்டுப் பிரார்த்தனையுடன் நிறைவடையவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாளை புதன்கிழமை, நாளை மறுதினம் வியாழக்கிழமை, மறுநாள்வெள்ளிக்கிழமை ஆகிய மூன்று தினங்களும்சிறப்புசொற்பொழிவுகளும், மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறும் என்றும் அறி விக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-10)

## யாழ். வாழ்வின் எழுச்சி முகாமையாளர் கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், டிசெ.22
அகில இலங்கை வாழ்வின் எழுச்சி முகாமையாளர்கள் சங்கத்தின் தீர்மானத்துக்கு இணங்க திணைக்களத்தின் கட்டமைப்பை நடைமுறைப்படுத்தி உத்தியோகத்தர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகளையும் உரிமைகளையும் நடைமுறைப்படுத்தாமை மற்றும் பல கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி நடத்தப்படவுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு யாழ். மாவட்ட வாழ்வின் எழுச்சி முகாமையாளர்கள் ஆதரவளிக்கவுள்ளனர்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 12 மணிக்கு அமைச்சும், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களமும் அமைந்துள்ள செத்சிரிபாய முன்பாக நடைபெறவுள்ளது.

நாடளாவிய ரீதியில் 2016 இல் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைத் தேர்ந்தெடுக்கும் ஆய்விலிருந்து விலகிக் கொள்வதற்கும், 2015 ஆம் ஆண்டு வருட இறுதி முடிவுக் கணக்குகளை தயாரித்து அறிக்கையிடும் நடவடிக்கைகளிலிருந்து விலகிக் கொள்வதற்கும் எடுக்கப்பட்ட தீர் மானத்துக்கு ஆதரவு தெரிவித்தும் அன்றைய தினம் யாழ். மாவட்ட முகாமையாளர்கள் அனைவரும் சுகவீன லீவு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இந்தக் கவனவீர்ப்பு போராட்டமானது பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து நடைபெறவுள்ளது.

புதிய சேவையாளராகத் திணைக்களத்துக்கு உள்ளீர்க்கப்பட்டவர்களுக்கு வயதுக் கட்டுப்பாட்டைக் காரணம் காட்டி உத்தியோகத்தர்களின் ஓய்வூதிய விண்ணப்பங்களை ஓய்வூதியத்திணைக்களம் நிராகரித்தமை, 2016 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் முன் மொழியப்பட்ட வாழ்வின் எழுச்சி வங்கியையும் அதன் நிதியையும் தேசிய தேமிப்பு வங்கியுடன் ஒன்றிணைக்கும் முயற்சி, தொடர்ச்சியாக இந்தத் திணைக்களத்துக்கு ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கு பங்களிப்பு செய்கின்ற பதவி உயர்வுகள் மறுக்கப்படுகின்றமை.

ஆரம்ப சேவைக்காலத்துடன் இந்தத் திணைக்களத்துக்குள் உள்ளீர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களால் ஏற்கனவே பங்களிப்புச்செய்யப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் உத்தியோகத்தர்களுக்கு வழங்க மறுப்புத் தெரிவித்தமை, 2016ஆம்ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் புதிய சேவையாளர்களாக திணைக்களத்துக்கு உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பணிக்கொடை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படாமை.

திணைக்களம் உருவாக்கப்பட்ட பின்னர் உயிரிழந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்க வேண்டிய இழப்பீடுகளை வழங்க இதுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளாமை, 2016 இல் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை ஆய்வு செய்யும் படிவங்களை பூர்த்தி செய்தல் வேலைத்திட்டத்துக்கு எவ்வித கொடுப்பனவும் மேற்கொள்ளப்படாமை மற்றும் முகாமையாளர்களுக்கிடையில் நிலவும் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்காமை போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-ரி6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மினிபஸ் சாரதிகளால் தாக்கப்பட்ட இ.போ.ச. சாரதி

சாவகச்சேரி,டிசெ.22
மினிபஸ் சாரதிகளால் தாக்கப்பட்ட இ.போ.ச.பஸ் சாரதி ஒருவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்
கொடிகாமம் பஸ் நிலையப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் கடமையிலிருந்த மீசாலை கிழக்கைச் சேர்ந்த இ.போ.ச சாரதி காயமடைந் துள்ளார் என்று தெரிவிக்கப் படுகின்றது.
இதேவேளை கடந்த சனிக்கிழமை கொடிகாமம் கெற்பேலியைச் சேர்ந்த 23 வயது இளைஞரான ஒருவர் கையில் பலத்த வெட்டுக்காயத்துடன் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவங்கள் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் . (ஐ-9)

## அதிபர்களுக்கு கூட்டம்

சாவகச்சேரி, டிசெ.22
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை வலயக் கல்விஅலுவலக மாநாட்டுமண்டபத்தில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப் பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ஐ-9)

## மகேஸ்வர பூசை

யாழ்ப்பாணம்,டிசெ.22
நல்லை ஆதீனத்தில் யோகர் சுவாமியின் அணுக்கைத்தொண்டர்களின் நினைவு, மகேஸ்வர பூசை இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது என்று ஆதீன நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ற-ஐ- ரி5)

## ஆக்கப்பொருள் கண்காட்சி

சாவகச்சேரி, டிசெ.22
தென்மராட்சி கல்வி வலய முறைசாராப் பிரிவினரால் பாடசாலைகளில் நடத்தப்பட்ட உடைஅமைத்தல், மணப்பெண் அலங்காரம், கேக் ஐசிங், கணினி, ஆங்கிலம் ஆகிய பாடநெறிகளில் பங்கு பற்றியவர்களது ஆக்கப்பட்ட பொருள்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு ஆக்கப்பொருள்கள் காட்சிப்படுத்தலை ஆரம்பித்து வைப்பார்.
நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வேர்ட் விஷன் நிறுவன சாவகச்சேரி பிரதேச திட்ட முகாமையாளர் அகிறொசைறோவும், கௌரவ விருந்தினராக இலங்கை வங்கியின் கைதடிக் கிளை முகாமையாளரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஐ-9)

# யாழ்.மாநகர சபை முறைகேடு குறித்து உரிய சட்ட நடவடிக்கை

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.22
யாழ்.மாநகர சபையின் முன்னைய ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற முறைகேடுகளுடன் தொடர்புடையவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றுவடக்குமாகாணமுதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபையின் வரவு – செலவுத் திட்ட விவாதத்தின் போது யாழ்.மாநகர சபையில் கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று குற்றம் சுமத்தி ஆளும் கட்சி உறுப்பினர் இ.ஆனோல்ட் கருத்து வெளியிட்டிருந்தார்.

> சூரிய மின்கலம் மூலமாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இதற்காக 100 சூரிய மின்கலங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இதற்குப் பதிலளிக்கும் விதமாகவே முதலமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
இதுகுறித்து முதலமைச்சர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
ஓய்வுபெற்ற நீதிபதி வசந்தசேனன் தலைமையில் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. விசாரணைகளை முடித்து அவர் அறிக்கை சமர்பித்துள்ளார்.
குறித்த அறிக்கையில், பலர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளார். எடுக்க வேண்டிய சட்டநடவடிக்கைகள் சம்பந்தமாக ஆராய்ந்து வருகின்றோம். விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். தாமதமானாலும் நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார்.
அத்துடன் வடக்கில் சில கிராமங்கள் இன்னமும் மின்சாரத்தைக் காணாத நிலையில் இருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்ட கருத்துக்குப் பதிலளித்த முதலமைச்சர், சூரிய மின்கலம் மூலமாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இதற்காக 100 சூரிய மின்கலங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. மக்களுக்கான மின்சார இணைப்பு வழங்குவதை தனியாக ஆராய்வோம் – என்றார். (ற-ஐ-5-ரி5)



தென்மராட்சி இலக்கிய அணியின் தமிழ்க் கோட்ட மண்டபத் திறப்பு விழாவும், பாரதி விழாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை சங்கத்தானை முருகமூர்த்தி ஆலயத்துக்கு அருகில் இடம்பெற்றன. சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் பேராசிரியர் க.கந்தசாமி கலந்து கொண்டு தமிழ்க் கோட்ட மண்டபத்தைத் திறந்து வைத்தார். தொடர்ந்து நிகழ்வில் பாரதி பற்றி நினைவுப் பேருரையும், பட்டி மன்றமும் இடம்பெற்றன. (ற-ஐ-9)

# வாய்க்கால் தூர்ந்துள்ளதால் நெற்பயிர்ச் செய்கை அழிவு

## பண்டத்தரிப்புப் பகுதியில்

யாழ்ப்பாணம்,டிசெ.22
வெள்ள நீர் வடிகால் வாய்க்கால்கள் உரிய முறையில் புனரமைப்புச் செய்யப்படாத காரணத்தால் பண்டத்தரிப்புப் பிரதேசத்தை அண்டிய வயல்களில் வெள்ளம் தேங்கி நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன என்று விவசாய சம்மேளனத் தலைவர் எஸ்.செல்வரெட்ணம் தெரிவித்துள்ளார்.
பண்டத்தரிப்பு தவிட்டைவெளி, பாணாவெட்டி, சித்தன்கேணி, தூவாவை போன்ற இடங்களில் உள்ள வயல்களில் வெள்ளம் தேங்கியதால் நெற்பயிர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.
இந்த வயல்களை அண்டிய வெள்ள நீர் வடிகால் வாய்க்கால்கள் தூர்ந்து சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.
வடிகால் வாய்க்கால்கள் உரிய முறையில் சீரமைக்காததால் வயல்களில் இருந்து வெள்ளம் வழிந்தோட முடியாது தேங்கியதாலேயே அதிக பயிரழிவுகள் ஏற்பட்டன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
விவசாயிகளுக்கு ஏற்பட்ட இந்த நெற்பயிரழிவு குறித்த விவரங்கள் முழுமையாகத் திரட்டப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஐ-17)

# வாகனப் பாதுகாப்பு நிலையத்துக்கு கொட்டகைகள் அமைக்கக் கோரிக்கை

## கொடிகாமம் சந்தைப் பகுதியில்

சாவகச்சேரி,டிசெ.22
கொடிகாமம் சந்தைப் பகுதியில் உள்ள வாகனப் பாதுகாப்பு நிலையங்களுக்குக் கொட்டகைகள் அமைத்து வழங்குமாறு பொதுமக்களும் வியாபாரிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கொடிகாமம் காளி கோவில் வீதியில் அமைக்கப்பட்டுள்ள வாகனப் பாதுகாப்பு நிலையக் கொட்டகை சிறியதாகக் காணப்படுவதால், வாகனங்களை வெளியே விடவேண்டிய நிலை சந்தைக்கு வரும் உற்பத்தியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஏற்பட்டுள்ளது.
இதனால் காலை 6 மணிக்கு வியாபாரியொருவரால் விடப்படும் இருசக்கரவாகனங்கள் மாலை 5 மணி வரை வெயில் மழை போன்றவற்றால் பாதிப்புக்கு உள்ளாகின்றன.
அத்துடன் சைக்கிள் பாதுகாப்பு நிலைய ஒழுங்கையில் நான்கு சக்கர வாகனங்களை நிறுத்தி விட்டுச் செல்வதால், இருசக்கர வாகனங்களில் வருவோர் தமது வாகனங்களைப் பாதுகாப்பாக நிலையத்தினுள் கொண்டு செல்ல முடியாத நிலையும் காணப்படுகிறது. இதனால் காளி கோவிலுக்கு அருகில் உள்ள பிரதேச சபையின் வாகனப் பாதுகாப்பு நிலையக் கொட்டகையை விஸ்தரிக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இதேவேளை வாகனப் பாதுகாப்பு நிலையத்தில் விடப்படும் வாகனங்களுக்கான கட்டணத்துக்கு அதற்குரிய பற்றுச்சீட்டு வழங்கப்படாததால் தமது வாகனங்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
சாவகச்சேரி பிரதேச சபையால் நிர்வகிக்கப்படும் கொடிகாமம் பொதுச் சந்தைக்குரிய வாகன தரிப்பிடங்களில், நிறுத்தப்படும் சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கு கட்டண அறவீட்டுப் பற்றுச்சீட்டு வழங்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறும் பொதுமக்களும் வியாபாரிகளும் கேட்டுள்ளனர்.
இது தொடர்பாக பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:
சந்தை வளாகத்தினுள் வாகனப் பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளபோதிலும், அதற்குள் வாகனங்களைக் கொண்டு செல்ல பொதுமக்களும் வியாபாரிகளும் தயக்கம் காட்டி காளி கோவிலுக்கு அருகில் தமது வாகனங்களை நிறுத்திவிட்டுச் செல்கின்றனர்.
வெளியே வாகன பாதுகாப்பு நிலையம் அமைக்கக்கூடிய இடவசதி இல்லாத நிலையிலும் காளிகோவில் ஒழுங்கையில் காணப்பட்ட சிறிய இடத்தில் பொதுமக்களின் நலன் கருதி சிறிய பாதுகாப்பு நிலையம் அமைத்துக் கொடுத்துள்ளோம்.
கொடிகாமம் சந்தைக்கு வரும் வாகனங்களை நிறுத்துவதற்கான கட்டணம் அறவிடுவது குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. அங்கு பற்றுச்சீட்டு வழங்காமை குறித்து முறைப்பாடு எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. இருப்பினும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் – என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-9)

## டெங்கு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு

வவுனியா,டிசெ.22
டெங்குத் தொற்றுத் தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் வவுனியா நகர சபைமண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது.
இந்த நிகழ்வில் நகரசபைச் செயலாளர் எஸ். தர்மேந்திரா, சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் எஸ். லவன், பொது சுகாதார மேற்பார்வை பரிசோதகர் க. மேஜெயா, சிவில் பாதுகாப்பு உறுப்பினர்கள், வர்த்தக சங்கத் தலைவர், வியாபார நிலைய உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
நடைபாதையில் வியாபாரத்தை மேற்கொள்பவர்கள் நகர சபையால் அமைக்கப்பட்ட அங்காடிவிற்பனைநிலையத்தில் நகர சபையின் அனுமதியைப் பெற்று வியாபார நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு இந்தக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.
அத்துடன் டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த வியாபார நிலைய உரிமையாளர்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது. (ற-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. தீர்மானம் தமிழருக்கு நல்ல சர்வதேச சந்தர்ப்பம்

## அதனை நிறைவேற்ற முஸ்லிம் கட்சிகளும் ஒத்துழைக்கவேண்டும் என்கிறார் மாவை

கொழும்பு, டிசெ 22



ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள இலங்கை குறித்த தீர்மானம் தமிழ்பேசும் மக்களுக்குச் சர்வதேச சந்தர்ப்பம் ஒன்றை வழங்கியுள்ளது, அதனை முழுமையாக நிறைவேற்றுவதற்கு முஸ்லிம் சமுகத்தினரும், கட்சிகளும் ஒத்துழைப்பை வழங்கவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முஸ்லிம் மக்கள் எந்த நிலத்தில் இருந்து துரத்தப்பட்டார்களோ, எங்கு வாழ்ந்தார்களோ, அந்த நிலத்தில் மீண்டும் வாழமுடியும், மீண்டும் குடியேற வாருங்கள் என நான் அழைப்பு விடுக்கின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற தழிழரசுக் கட்சியின் செனட்டர் மன்சூர் மௌலானாவின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எங்கள் தமிழர்கள் பலர் தமிழை மறந்துள்ள நிலையில் 90 வீதமான முஸ்லிம் மக்களின் வீட்டு மொழியாகத் தமிழ் காணப்படுகின்றது. தமிழ் பேசும் மக்கள் என எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தான் பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் உதயமாவதற்குக் காரணமாக அமைந்தன. சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை, உரிமைகளை வலியுறுத்தி முஸ்லிம் சமூகத்துக்கு சுயநிர்ணய உரிமையுண்டு என முதன் முதலில் தெரிவித்தது எங்கள் தமிழரசுக்கட்சி தான். தமிழரசுக்கட்சி முன்னெடுத்த பல சத்தியாக்கிரகப் போராட்டங்களில் முஸ்லிம்கள் பெருமளவில் பங்கெடுத்தனர். அந்தப் போராட்டங்களில் பல முஸ்லிம் பெண்களை , தாய்மார்களைப் பார்த்த அனுபவம் எனக்குண்டு.

எங்கள் நீண்ட காலப் பேராட்ட வரலாற்றில் பெருமளவு துயர துன்பங்களை அனுபவித்துள்ளோம்.

சென்ற ஆட்சிக்காலத்தில் எது எங்களுக்கு நிகழ்ந்ததோ அதுவே உங்களுக்கும் இடம்பெற்றது. அது இன்னொரு கட்டமாக உருவெடுத்தது, அந்த அனுபவங்கள் 2015 ஜனவரி 8 ஆம் திகதி இடம்பெற்ற மாற்றங்களுக்கு வழிவகுத்தது.

தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் ஒரே அடிப்படையில் சிந்தித்தனர். ராஜபக்ச காலத்தில் என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும், பதவிகளைத் தூக்கியெறிந்த வரலாறு எங்களுடையது. இனிமேல் அமைச்சுப் பொறுப்பை ஏற்பதில்லை என உடுவிலில் தீர்மானம் எடுத்தோம். இதனடிப்படையிலேயே வாய்ப்புகள் இருந்தபோதிலும் அமைச்சுப் பதவிகளை நாங்கள் ஏற்கவில்லை.

மக்கள் போராடினார்கள், விடுதலைக்காகப் போராடினார்கள், பெரிய இழப்புகளைச் சந்தித்தார்கள். இத்தனை இலட்சம் உயிர்களைப் பலிகொடுத்து,அவர்கள் பெறுகின்ற விடிவு, சுதந்திரம், உங்களுக்கும், எங்களுக்கும் உரித்தானது.

இன்று சர்வதேச சந்தர்ப்பம் ஒன்று உருவாகியுள்ளது.

உங்களுக்கும் எங்களுக்கும் இடையிலான பிரச்சினைகளை முன்வைப்பது இலக்குகளைத் தவறச் செய்துவிடும். துன்பங்கள், துயரங்கள் எங்களுக்குள் பிளவுகளை ஏற்படுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

போருக்குப் பின்னரும் ராஜபக்ச அரசின் கீழ் மிகவும் துயரங்களை சந்தித்தவர்கள் நாங்கள். உங்களுக்கு நடந்ததை நினைத்துப்பாருங்கள்.

கடந்தகால ஆட்சிசெயற்பட்ட விதத்தின் காரணமாகவே இன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை குறித்து விவாதங்கள் இடம்பெற்றுள்ளன. இலங்கை போர்க் குற்றங்கள் இடம்பெற்ற ஒரு நாடு என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் தீர்மானத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப் படுத்துவது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து எடுக்கின்ற முயற்சிகள் மிக முக்கியமானவையாக அமையப் போகின்றன.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு இதனைப் பயன்படுத்த வேண்டும். நீங்கள் வேறு நாங்கள் வேறு அல்ல.

இது சர்வதேச சந்தர்ப்பம். நீங்களும் நாங்களும் ஒன்றாகப் பயணிக்க வேண்டிய சந்தர்ப்பம். இந்த ஆட்சி மாற்றம் சிங்கள மக்களினாலோ அல்லது ரணில் விக்கிரமசிங்க கட்சியினாலோ அல்லது சிறிசேன கட்சியினாலோ ஏற்பட்டதொன்றல்ல.

சிறுபான்மை மக்கள் சிந்தித்ததால் தான் புதிய ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஜனநாயகம் மீது நம்பிக்கை கொண்டு ஜனநாயக மாற்றத்தை ஏற்படுத்தியதில் எங்களுக்கும் பங்குள்ளது.

ஜனாதிபதித் தேர்தலைப் போன்று பொதுத்தேர்தலிலும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினோம்.

வடக்கு-கிழக்கின் அதே மக்கள் தமிழரசுக் கட்சிக்கு- தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மிகப்பெரும் பலத்தை-வழங்கினார்கள்.

மக்கள் தெளிவாக உள்ளனர். அரசியல் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரங்களை எங்களுக்கு வழங்கியுள்ளனர்.

நீங்கள் வெளியேற்றப்பட்டது உண்மை. நீங்கள் உங்கள் நிலத்திற்கு மீண்டும் திரும்பலாம்.

முஸ்லிம் மக்கள் எந்த நிலத்தில் இருந்து துரத்தப்பட்டார்களோ, எங்கு வாழ்ந்தார்களோ, அந்த நிலத்தில் மீண்டும் வாழமுடியும். மீண்டும் குடியேற வாருங்கள் என நான் அழைப்பு விடுக்கின்றேன்.

எங்கள் மக்களும் பாதிக்கப்பட்டார்கள். மனித உரிமை மீறல்கள், காணமற்போதல்கள் இடம்பெற்றன. விடுதலைப்புலிகளுடன் இணைந்து முஸ்லிம் மக்கள் போராடிய வரலாறும் உள்ளது.

தற்போது இன்னொரு சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. அது சர்வதேச சந்தர்ப்பம். அதனை ஏற்று நாங்கள் செயற்படவேண்டும். ஒன்றுபட்டு இலக்கை அடைய முயலவேண்டும் -என்றார். (கு)

ஒளிப் படச் செய்தி




# கவனத்தில் எடுப்பார்களா?

மன்னார் அரச பஸ் தரிப்பிடத்துக்குப் பின் பகுதியில் உள்ள மலசலகூடத் தொகுதி ஏற்கனவே அகற்றப்பட்ட போதும் அந்தப் பகுதியில் தொடர்ச்சியாகச் சுகாதாரச் சீர் கேடுகள் இடம் பெற்று வருவதாகவும், இதனால் கடும் துர்நாற்றம் வீசி வருவதாகவும் அந்தப் பகுதியில் உள்ள வர்த்தகர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். உரிய தரப்பினர் இதனைக் கவனத்தில் எடுக்கவேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர். (ஐ-56)









# சகல பாடசாலைகளுக்கும் அதிவேக இணைய வசதி

கொழும்பு, டிசெ. 22

நாட்டிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் அதிவேக இணைய வசதியைப் பெற்றுக் கொடுக்கும் தேசிய வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சு தேசிய அதிவேக இணைய வேலைத்திட்டம், தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு ஆகியவற்றுடன் ஒன்றிணைந்தே இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

தற்போது சில பாடசாலைகளுக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ள இணையச் சேவைக்கு பதிலாக வேகமாக செயற்படக்கூடிய நவீன தொழில்நுட்பத்துடனான இணைய வசதிகளைச் சகல பாடசாலைகளுக்கும் பெற்றுக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே கொழும்பு காலி மற்றும் கண்டி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய வகையில் தெரிவு செய்யப்பட்ட 60 பாடசாலைகளுக்கு இணையத்தள வசதிகள் வழங்கப்படவுள்ளதுடன், அதிவேக இணைய வசதியை எதிர்வரும் ஜனவரி மாதமளவில் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது பாடசாலைகளுக்காக வழங்கப்படும் இணைய வசதிகளுக்காக கல்வியமைச்சு மாதாந்தம் 17 இலட்சம் வரையில் செலவிட்டு வருகின்றது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நாட்டில் நல்லிணக்கம் முகிழ்க்க ஏதுநிலை எப்போது வருமோ...?

போரின் காரணமாக தமது சொந்த வாழ்விடங்களில் இருந்து இடம்பெயர்ந்து, கால் நூற்றாண்டு காலமாக அல்லற்படும் வலி.வடக்கு மக்களை முதன்முதலாக நேரில் சந்தித்து, அவர்கள் படும் அல்லல்களை கேட்டறிந்தவர் பிரிட்டனின் பிரதமர் டேவிட் கமரூன்.

இப்போது, இலங்கையின் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன (இரண்டாவது தலைவராக) வலி.வடக்கு மக்களை, கோணம்புலம் நலன்புரி முகாமில் சந்தித்து அவர்களின் அவலத்தை நேரில் கண்டு மனம் வருந்தி உள்ளார்.

அந்தவேளை, வலி.வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு ஆறு மாதங்களுக்குள் தீர்வு காணப்படும் என்று உறுதியும் அளித்திருக்கிறார்.

அதன் பொருட்டு, அரசியல் தலைவர்கள், சிவில் சமூகத்தினர், முப்படையினர் கொண்ட அவசரகாலச் செயலணி ஒன்றை அமைத்து, அவர்களின் அவல நிலையை நீக்கப்போவதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

தேர்தல் காலங்களில் தெற்கின் அரசியல் கட்சிகளைச் சார்ந்த தலைவர்களும், வேட்பாளர்களும் யாழ்ப்பாணத்துக்கும், வடக்கின் ஏனைய பிராந்தியங்களுக்கும் வருகை தந்து வாக்குறுதிகளை வாரி வழங்குவது வழமை. அது ஒன்றும் புதுமையானதும் அல்ல.

ஆனால், விழாக்காலம் அண்மிக்கும் இந்த வேளையில்,--நத்தார், 2016 ஆம் ஆண்டு புத்தாண்டு பிறக்கவிருக்கும் தருணத்தில்,--

தேர்தல் வேளை என்றில்லாத ஒரு காலத்தில், தென்னிலங்கையின் தலைவர் ஒருவர், நாட்டின் அதிஉயர் தலைவர், தமிழ் மக்களை மனம் மகிழ வைக்கும் வாக்குறுதியை வழங்கி உள்ளமை சிறப்புக்கு உரியதாகும்; பெரும் பதிவுக்கு உரியதும் ஆகும்.

அந்தப் பதிவின் ஊடான யதார்த்தம், கால் நூற்றாண்டு காலமாக கடந்த 25 ஆண்டுகளாக, 1990.06.15 ஆம் திகதி முதல் நிலம் இழந்து, வீடு இழந்து, தொழில் இழந்து, அல்லற்பட்டு அழும் வாழ்க்கையையே வலி.வடக்கு மக்களுக்கு முற்றுமுழுதாகத் தந்து கொண்டிருக்கிறது.

நல்லாட்சி அரசு முளைக்கவும், வளர்ந்து உயரவும் கை கொடுத்தவர்கள் தமிழ் மக்கள். வடக்கு வாழ் மக்களே, அதற்கு அதிக அளவில் உரம் ஊட்டியவர்கள். அதனை நாட்டின் அரசும், அதன் தலைவர் ஜனாதிபதியும் மறந்து விடலாகாது; அது அரசியலுக்கு மட்டுமன்றி மனித நேயத்துக்கும் இன்றி அமையாதது; ஓங்கி வளர்ந்து உயர வேண்டியதும் ஆகும்.

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றோ செல்வத்தைத் தேய்க்கும் படை-- என்ற வள்ளுவன் வாக்கின் வழி நின்று நோக்கின்--

இந்த நாட்டின் தமிழ் மக்களை, 1956 ஆம் ஆண்டின் பின்னரான கடந்த ஐம்பத்தொன்பது ஆண்டுகளாக, சுமார் 60 வருடங்களாகத் தமிழர்களுக்கு சேரவேண்டிய அரசியல் வாழ்வியல் உரிமைகளை வழங்குவதில், கொழும்பு அரசுகள் எப்போதும் தட்டிக் கழிக்கும், ஏய்க்காட்டும் உத்திகளையே உயர்த்திப் பிடித்து வந்துள்ளன என்பதை உணரமுடியும்.

தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள், வாழ்வியல் உரிமைகள், அவ்வப்போது ஆட்சிப்பீடம் ஏறும் கொழும்பு அரசுகளால் கடாசி வீசப்படுகின்றன.

இந்த நிலை நீடிக்கும் வரை, இங்கு வாழும் மக்களுக்கு இடையில் இன, மத, ஒருமைப்பாடும், மீள் நல்லிணக்கமும் சமத்துவ வாழ்வும் துளிர்ப்பதற்கான ஏதுநிலை எதுவும் முகிழ்க்காது என்ற அபசுரமே ஒலிக்கிறது...!



# கிராம இராச்சியத் திட்டம் ஏன்?

**வந்தியத்தேவர்**

அதிகாரப் பகிர்வுக்கும் மாகாணசபைகளுக்கும் எதிரானவர் மகிந்த என்பது எவரும் அறியாத விடயமல்ல. வடக்கு-கிழக்கு ஒன்றிணைந்த தமிழ் மாகாண அரசை அமைக்க தமிழ் தரப்பினர் பெரிய முயற்சிகளை முன்னெடுக்க, அதனை ஜே.வி.பியின் அனுசரணையுடன் நீதிமன்றத்தின் உதவியுடன் முறியடித்தவர் மகிந்த. மாகாண சபைகளுக்குக் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்களைக்கூட வழங்க விடாது காலத்தை இழுத் தடித்து வந்தார். அந்த வகையில், காணி, பொலிஸ் அதிகாரங்களைமாகாண சபைக்குவழங்குவதைத்தவிர்க்கவே மகிந்த முன்னின்றுழைத்தார்.

> வடக்கில் அதிகாரமற்ற மாகாண சபையைப் பொறுப் பேற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப் போதும் மாகாண சபைக்கான அதி காரங்கள் முழுமைப் படுத் தப்படவேண்டும் என வலியுறுத்தி வருகின்றது.

வடக்கில் அதிகாரமற்ற மாகாண சபையைப் பொறுப்பேற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போதும் மாகாண சபைக்கான அதிகாரங்கள் முழு மைப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகின்றது. முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மக்களுக்கான சேவை களை வழங்கக்கூடியதான அதிகார வரம்பு முறைகள் எதுவுமே சபையிடம் இல்லை என்பதைப் பலசந்தர்ப்பங்களில், குறிப்பாகசர்வதேசப்பிரதிநிதிகளிடமும் எடுத்துக் கூறியுள்ளார். இப்போது மாகாண சபை யையும் இல்லாதொழித்து கிராம இராச்சியத் திட்டம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை நல்லாட்சி தரப்பினர் முன்னெடுத்துள்ளார்கள்.

மாகாண சபையின் அற்பசொற்ப அதிகாரங்களையும் மத் திய அரசின் வசம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் குறிக் கோள். மாகாண சபையிடம் உள்ள அதிகாரங்களைப் பிடுங்கிக் கொள்ள அவரால் பயன்படுத்தப் படவுள்ளதுதான் கிராம இராச்சியத் திட்டம். அது பின்னர் எல்லாமுமே நாடாளுமன்றத்தின் அதிகாரம் என மாறவும் கூடும்.

பிரதமர் ரணிலின் இந்தத் திட்டத்தைத் தக்க பதில் ஒன்றின் மூலம் முறியடித்து, அதிகாரப் பலம் கொண்டதான மாகாண சபை அமைப்பது வடக்கு மாகாண சபை மற்றும் தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தினதும் கடமையாகும். ஆனால், வடக்கு மாகாண சபை இந்தக் கடமையை நிறைவேற்றும் என்பதற்கான சாத்தியங்கள் இருப்பதாக இல்லை. மாகாண சபையின் ஆட்சி அதிகாரத்தில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களிடம் நாம் ஒன்றுபட்டுச் செயற்பட்டு எமது தேவைகளை அபிவிருத்திகளை முன்னெடுக்க வேண்டும் என்ற சிந்தனை கிடையாது.

எமது எல்லைகளைக் கடந்து சிங்களக் குடியேற்றங்கள் இடம் பெறும் சாத்தியங்கள் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றன. எமது காடுகள் அழிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்களுக்கு இடமளிக்கப்படுகின்றது. எல்லைகளுக்கு நாங்கள் போகாதுவிடின் எங்களைத் தேடி எல்லைகள் வரும் என ஜே.ஆர். ஒரு தடவை கூறியிருந்தார். இப்போது அவர்கள் எல்லைகளைத் தேடி எங்கள் பிரதேசங்களுக்குள் நுழைந்து கொண்டிருக்கிறார்க ள். எம்மிடம் காணி அதிகாரம் இல்லாததால் உருவான வினை இது.

வடபகுதியில் குற்றச் செயல்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. பொலிஸார் ஏனோதானோ என்றிருக்கிறார்கள். பொலிஸ் அதிகாரம் மாகாண சபையிடம் இருந்திருந்தால் இந்த விடயத்தில் ஒரு சிறிய முன்னேற்றத்தை யாவது காட்டியிருக்க முடியும்.

அதேசமயத்தில் இருக்கின்ற அதிகாரங்களையே அவர்களால் சரிவரப் பயன்படுத்த முடியவில்லை. வடக்கு மாகாண சபை அமைக்கப்பட்டு இரண்டரை வருடங்கள் கடந்துவிட்டபோதும் இன்னமும் போக்குவரத்து அமைச்சுக்குரிய நியதிச் சட்டத்தை உருவாக்க முடியவில்லை.

அப்படியிருக்கையில் இவர்களிடம் அதிகாரம் இருந்தால் எல்லாமும் நிறைவேறும் என்று சொல்லி விட முடியாது. இதனால் மாகாண சபை களை விடுத்து கிராம இராச்சியத் திட்டத்தை அறிமுகப்படுத்துவது கொழும்பு அரசுக்கு ஒன்றும் சிரமமாக இருக்கப்போவதில்லை.

வடக்கின் ஆளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ள முரண்பாடு களும் இந்த மாகாண சபை ஆட்சி மீது மக்களுக்கு நம்பிக்கையீனம் ஏற்படுவதற்கான முக்கிய காரணம். கிராம இராச்சியத் திட்டத்தின் ஊடாக மாகாண சபையின் அதிகாரங்களை மேலும் கீழ் நிலை நோக்கி நகர்த்திக் கொண்டு மத்தியின் அதிகாரங்களை அதிகரிக்க வைப்பதே ரணிலின் நோக்கம். என்பது வெளிப்படை உண்மையாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்ரன்

# முதலமைச்சரே நீங்கள் நல்லவரா கெட்டவரா?

நாயகன் படத்தின் நாயகனான கமலஹாசனைப் பார்த்து, அவரது பேரன் படத்தின் இறுதியில் ஒரு கேள்வி கேட்பதாகக் காட்சி வைத்திருப்பார் அதன் இயக்குநர் மணிரத்தினம். அது, 'நீங்க நல்லவரா கெட்டவரா?' என்கிற கேள்வி. வடக்கு மாகாண முதலமைச்சரைப் பார்த்தும் கூட்டமைப்பினர் இப்போது கேட்பதற்குச் சிறந்த கேள்வியும் அதுதான்.

படத்தில் 'தெரியலையேப்பா' என்று கண்கலங்கயிருப்பார் கமல். முதலமைச்சர் எந்தப் பதிலையும் சொல்லமாட்டார் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் அரசியலுக்குள் கொண்டு வரப்பட்ட முதலமைச்சரது நடவடிக்கைகள், அவர் நல்லவரா கெட்டவரா என் கிற சந்தேகத்தை கட்சியினர் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் முழுமையாக விதைத்திருக்கிறது.

அவரை அரசியலுக்குள் கொண்டு வருவதற்கான விதையை நட்டு வைத்த கொழும்பு இந்தியத் தூதுவர், அண்மையில் யாழ்ப்பாணம் வந்து முதலமைச்சரைச் சந்தித்து கூட்டமைப்பைப் பிளவுபடுத்தும் விதமாக நடந்துகொள்ளாதீர்கள் என்று சொல்லிவிட்டுப் போனதன் பிற்பாடும், முதலமைச்சர் கூட்டமைப்பின் எதிர்த்தரப்பினருடனும், கூட்டமைப்பின் அதிருப்தியாளர்களுடனும் சேர்ந்துகொண்டு, தமிழ் மக்கள் பேரவை என்கிற ஒரு அமைப்பை உருவாக்கியிருக்கிறார் என்கிறபோது கட்சிக்காரர்களுக்கு அவர் நல்லவரா கெட்டவரா என்கிற கேள்வி எழுவது ஒன்றும் வியப்புக்குரியதல்ல.


இதே கேள்வி கூட்டமைப்பினருக்கு, குறிப்பாக தமிழரசுக் கட்சியினருக்கு கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போதும் ஏற்பட்டது. கூட்டமைப்புக்குச் சார்பாக தேர்தல் பரப்புரை செய்யமாட்டேன், நடுநிலை வகிக்கப்போகிறேன் என்று கூறி ஒதுங்கிக் கொண்டமை, பின்னர் தேர்தலுக்குச் சில நாள்களே இருக்கும் நிலையில் எதிரணியினருக்கு ஆதரவானது போன்றதோற்றப்பாடுடைய அறிக்கையை விடுத்தமை என்பவை எல்லாம் கட்சியினருக்கு முதலமைச்சர் நல்லவரா, கெட்டவரா என்கிற கேள்வியை எழுப்பியது. ஆனால் தேர்தல் முடிந்து கூட்டமைப்பும் பெரு வெற்றி பெற்றுக்கொண்ட பின்னர், தான் நல்லவர்தான் என்கிற சாரப்பட, கூட்டமைப்புக்கு எதிராகத் தேர்தலின்போது தான் செயற்பட்டிருக்கவில்லை என்று அவர் கட்சிக்காரர்களுக்கு தன்னிலை விளக்கம் அளித்தார். அந்த விளக்கத்தைப் பின்னர் அவரது மாணவனான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுடனான தகராறின்போதும் வெளிப்படுத்தியிருந்தார்.

அந்த விவகாரம் முடிந்தது என்று பார்க்க, இப்போது தமிழ் மக்கள் பேரவை என்கிற அமைப்பின் இணைத் தலைவராகப் பதவியேற்றுக்கொண்டு கூட்டமைப்பின் எதிராளிகளுடன் கைகோர்த்துக்கொண்டதன் ஊடாக மீண்டும் அவர் நல்லவரா கெட்டவரா? என்கிற கேள்வியைக் கட்சிக்காரர்களிடம் கிளப்பிவிட்டிருக்கிறார் முதலமைச்சர்.

> படித்த மனிதர், நீதியரசராக இருந்தவர் சிறப்பான தலைமையைத் தந்துவிடுவார் என்று நம்பினார்கள். அள்ளுகொள்ளையாக வாக்களித்தார்கள். க.வி.விக்னேஸ்வரன் முதலமைச்சரானார்.

**முதலமைச்சர் ஏன் இப்படி?**

முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தனது நீதியரசர் பதவிக் காலத்தின் பின்பு இலக்கிய ஈடுபாட்டுடனான ஓய்வில் இருந்தவர். தனது இறுதிக் காலத்தில் அரசியல் ஆசைகள் எவையும் அவருக்கு இருந்ததில்லை, இந்தியா அவரைக் கைகாட்டி, கூட்டமைப்பு அவரை அணுகும் வரைக்கும்.



வடக்கு மாகாண சபைக்குத் தேர்தல் அறிவிக்கப்பட்ட போது கொழும்பு அரசுக்குக் குடைச்சல் கொடுக்காத ஒரு நபர் இங்கு பதவியில் இருப்பது புதுடில்லிக்குத் தேவையாக இருந்தது. போர் அப்போதுதான் முடிந்திருந்த சூழலில் மீண்டும் தமிழீழக் கனவுக்கு உருவம் கொடுக்காத ஒரு வர் புதுடில்லியின் சவுத் புளக்குக்குக் (வெளி விவ கார அமைச்சின் இந் தப் பிரிவு தான் இலங்கை விவகாரத்தைக் கையாளுகிறது) தேவையாக இருந்தார். எனவே வடக்கின் தமிழ் இனத் தீவிரத் தன்மைக்குள் மூழ்கி எழும்பாத ஒரு வர் புதுடில்லிக்குத் தேவையாக இருந்தார்.

க.வி.விக்னேஸ்வரன் அப்போது தனது இலக்கியப் பேச்சுக்கள் ஊடாகத் தமிழ் மக்கள் நன்கறிந்த மனிதராகவும், கொழும்பையே தளமாகக் கொண்ட தமிழராகவும், சிங்கள இனத்துடன் சம்பந்தக் கலப்புக் கொண்டவராகவும் இருந்தார். எனவே தான் அவர் வடக்கின் முதலமைச்சராவதற்குப் பொருத்தமானவர் என்று இந்தியா கணித்தது. அவரைக் கைகாட்டியது.

புதுடில்லி சொன்னால் தட்டுவது புத்திசாலித்தனம் இல்லை என்று உறுதியாக நம்பும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பின்னர் சவுத் புளக் காட்டிய வழியில், எல்லாத் தரப்பினரையும் சமாளித்து முன்னேறி க.வி.விக்னேஸ்வரனை முதலமைச்சராக்கினார்.

பார்த்துப் பார்த்துப் பழகிப் போன முகங்களாலும் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன கதைகளாலும் ஏமாற்றப்பட்டு விரக்தியடைந்திருந்த தமிழ் மக்களுக்கும் விக்னேஸ்வரன் என்கிற மனிதர் - முன்னாள் நீதியரசர் - கவர்ச்சிகரமான முன்னிறுத்துகையாகத் தோன்றினார். படித்த மனிதர், நீதியரசராக இருந்தவர் சிறப்பான தலைமையைத் தந்து விடுவார் என்று நம்பினார்கள். அள்ளு கொள்ளையாக வாக்களித்தார்கள். க.வி.விக்னேஸ்வரன் முதலமைச்சரானார்.

இந்தியாவுக்கும் கூட்டமைப்பின் தலைமைக்கும் வேண்டியிருந்ததெல்லாம் வெளி உலகுக்குக் காட்டுவதற்கும் தமிழ் மக்களை உற்சாகப்படுத்துவதற்குமான ஒரு பொம்மை. அதற்காகத்தான் அரசியல் விருப்பற்ற, ஓய்வில் இருந்த ஒரு மனிதர் தெரிவு செய்யப்பட்டார். அவர் களின் விதி பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதையாகிப் போனது. க.வி.விக்னேஸ்வரன் முதலமைச்சரானதும் தமிழ் மக்களின் பெருந் தலைவர் தானே என நம்பத் தலைப்பட்டார். எனவே வெறும் பொம்மையாக பதவியைக் கழித்துவிட்டுப் போக அவர் தயாராக இல்லை. (16ஆம் பக்கம் பார்க்க)

## எழுந்தமானப் பேச்சுக்கள் அபிவிருத்திக்கு முன்னிற்காது

வடமாகாண வரவுசெலவுத் திட்ட விவாதங்களின்போது வடமாகாண சபை உறுப்பினர் பலரும் உள்ளூராட்சி சபைகளின் வினைத்திறனற்ற செயற்பாடு, செயல் திறனற்ற செயலூக்கம் அற்ற உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள் தொடர்பாகப் பலரும் முன்வைத்ததை ஊடகம் வாயிலாக அறிந்தோம்.

உள்ளூராட்சி சபைகள் என்பது சுற்றறிக்கைகளைக் கொண்டு செயற்படும் சபை அல்ல. அவை ஒவ்வொன்றும் நகரக் கட்டளைச் சட்டங்கள், பிரதேச சபைக் கூட்டங்களின் வாயிலாக இயங்குபவை.

வடமாகாணத்தில் ஒரு மாநகரசபை, 3 நகர சபைகள், 30 பிரதேச சபைகள் என 34 சபைகள் உள்ளன. இதில் பல சபைகளுக்கு பொருத்தமான தகுதியுடைய செயலாளர்கள் நியமிக்கப்படவில்லை என்பது கடந்த 5 வருட காலமாகத் தெரியும்.

மக்களுக்குச்சேவையாற்றுவதற்குதற்துணிவு இருத்தல் வேண்டும், அதனைவிட உற்சாகம் தேவையான ஒன்றாகும். நிதிக்கோவை, தாபனக்கோவை, சட்டம் என்பவற்றை சரிவரத் தெரியாத செயலாளர்களால் இவற்றைக் கொண்டு நடத்த முடியாது.

எனவே மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளூராட்சி சபை பற்றிப் பொதுவாகப் பேசுவதை நிறுத்த வேண்டும். மாகாண சபை விவாதங்களில் விடயங்களைத் தயார் செய்யாத பேச்சுக்களைத் தவிருங்கள். எழுந்தமானப் பேச்சுக்கள் அபிவிருத்திக்கு உதவப்போவதில்லை. எந்த உள்ளூராட்சி சபை வினைத்திறனற்றது, எதில் ஊழல், எதில் மோசடி என்பதை சுட்டிக் காட்டிப் பேசுங்கள்.

இதற்காகவே வடக்கு மாகாண சபைக்கு முதலமைச்சரும், பிரதம செயலாளரும், ஆளுநரும் உள்ளனர்.

கடந்த காலங்களில் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் வாயில் வந்தவற்றை எல்லாம் தீர்மானமாக்கி சட்டமாக்க முயன்று எதுவும் செல்லாக்காசு ஆகிவிட்டது. தற்போது பிரதேச சபைகளைப் போன்று மாகாண சபைகளும் அதன் உறுப்பினர்கள் விடயங்கள்குறித்துத் தெரிந்திராது, தயார் செய்யாது எல்லாவற்றையும் பேசு கின்றனர்.

எனவே மாகாண சபைகளில் உருவாக்கப்பட்ட தீர்மானங்கள் செயலுருப் பெறவும், எதிர்காலத்தில் அரச இயந்திரங்கள் முனைப்புடன் செயலாற்றவும் மாகாண சபை விழிப்புடன் இருக்க வேண்டும்.

மாகாண முதல்வர், ஏற்கனவே வழங்கிய பிரமாண அடிப்படையிலான மூல தன நிதியை செலவழியுங்கள். எதிர்காலத்தில் பார்ப்போம் எனக்கூறியுள்ளார். எனவே சிந்தித்து செயலாற்றுவதன் மூலம் அனைத்துத் துறைகளும் மேம்படும்.

முருகு. கணபதி

## தரகர்கள் தொல்லையால் சங்கானைச் சந்தையில் சிரமப்படும் நுகர்வோர்

சங்கானைச் சந்தையில் தரகர்களின் தொல்லைகளால் மரக்கறி வகை உற்பத்தியாளர்கள், சந்தைக்கு தமது உற்பத்திப் பொருள்களை கொண்டுவராமல் வேறு சந்தைகளை நாடிச் செல்கின்றனர். மருதனார் மடச் சந்தையில் 200 ரூபா கத்தரிக்காய் அதேநாளில் சங்கானைச் சந்தையில் 400 ரூபாவுக்கு விற்கப்பட்டது.

இதேவேளை உற்பத்தியாளர் கொண்டு வரும் மரக்கறிகளில் தமது வீட்டுத்தேவைக்காக ஒவ்வொரு தரகரும் எடுத்து விடுகின்றனர்.

ஒரேநாளைக்கு தரகர்கள் ஒவ்வொருவரும் ஆயிரக்கணக்கில் உழைக்கின்றனர்.

மேலும் வியாபாரிகளும் 50 ரூபாவுக்கு கொள்வனவு செய்யும் மரக்கறிகளை நுகர்வோருக்கு ரூபா 20 - 30 முதல் வரை இலாபம் வைத்து விற்றுவருகின்றனர். உதாரணமாக ரூபா 50 கொள்வனவு செய்த கீரைப்பிடி ஒன்று ரூபா 80க்கு விற்கப்படுகின்றது.

அத்துடன் கழிவு என்று கூறி அதிகளவு நிறையையும் குறைத்து உற்பத்தியாளர்களுக்கு நட்டத்தை ஏற்படுத்தி வருகின்றனர். சந்தை வரி எனப் பலவழிகளில் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றன.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையால் சந்தைக்குத்தகைக்கான கேள்விகோரலில் தரகு முறை ஒழிக்கப்படுமென பத்திரிகைமூலம் விளம்பரம் செய்யப்படுகின்றது.

ஆனால் தரகை ஒழிப்பதற்கான எந்தவித நடவடிக்கையும் சபையால் மேற்கொள்ளப்படுவதில்லை.

மு.சந்திரகுமார், சங்கானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேமன் கிளர்ச்சியாளர் சவூதியில் தாக்குதல்

## 2 தமிழக வாசிகள் சாவு

றியாத், டிசெ 22
சவூதியில் யேமன் கிளர்ச்சியாளர்கள் நடத்திய பயங்கர ஏவுகணைத் தாக்குதலில் தமிழகத்தைச் சேர்ந்த 2 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

யேமனில் ஜனாதிபதி மன்சூதி ஹைதிக்கு எதிராக ஹவுத்திக் கிளர்ச்சியாளர்கள் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு வருகின்றனர்.

யேமனின் பெரும்பாலான நகரங்களை ஹவுத்தி கிளர்ச்சிக் குழு கைப்பற்றியுள்ளது. அந்தநாட்டு ஜனாதிபதி ஹைதி, சவூதியில் தஞ்சமடைந்துள்ளார். இதனிடையே சவூதி-யேமன் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் சவூதியின் எல்லைப் பகுதியான நஜ்ரானில் சனிக்கிழமை மாலை யேமன் ஹவுத்தி கிளர்ச்சிச் குழு பயங்கர ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது.

இதில் 2 இந்தியர்கள் உட்பட மொத்தம் 3 பேர் பலியாகினர். பலியான 2 பேரும் தமிழர்கள் ஆவர். (தி)

# பிரபஞ்ச அழகியானார் பிலிப்பைன்ஸ் யுவதி

லொஸ் ஏஞ்சல்ஸ், டிசெ 22
2015ஆம் ஆண்டுக்கான பிரபஞ்ச அழகியாக பிலிப்பைன்ஸைச் சேர்ந்த பியா ஆலோன்சோ உர்ட்பாக் தேர்வுசெய்யப்பட்டுள்ளார். முன்னதாக தவறாக வேறு ஒருவருக்கு பிரபஞ்ச அழகிக் கிரீடம் சூட்டப்பட்டது. 2015ஆம் ஆண்டுக்கான பிரபஞ்ச அழகிப் போட்டி அமெரிக்காவில் நடைபெற்றது. இதில் இந்தியா உட்பட 80 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் கலந்து கொண்டனர். இந்தியா சார்பில் உத்தரகண்ட் மாநிலத்தைச் சேர்ந்த பொலிவுட் நடிகை ஊர்வசி ராதெலா கலந்து கொண்டார். பல்வேறு சுற்றுகளில் அழகிகள் கலந்து கொண்டு அசத்தினர். 15 வயதிலிருந்து இந்தியாவில் நடைபெற்ற பல்வேறு அழகிப் போட்டிகளில் பட்டம் வென்ற ஊர்வசியால் பிரபஞ்ச அழகிப் போட்டியில் முதல் 15 இடங்களுக்குள் கூடவர முடியவில்லை.




இறுதிச் சுற்றில் கலந்து கொண்டவர்களில் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த பியா ஆலோன்சோ உர்ட்பாக் பிரபஞ்ச அழகியாக தேர்வானார். ஆனால் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய நடிகர் ஸ்டீவ் ஹார்வே பியாவின் பெயருக்கு பதிலாக கொலம்பியா அழகி அரி யாத்னா குடியரஸ் பிரபஞ்ச அழகியாக தேர்வு செய்யப்பட்டார் எனத் தவறாக அறிவித்தார். ஹார்வே தவறாக அறிவித்ததை அடுத்து கடந்த ஆண்டு பிர பஞ்ச அழகிப் பட்டம் வென்ற கொலம்பியாவின் பாலினா வேகா மகுடத்தை அரி யாத்னாவுக்கு சூட்டினார். மகுடம் சூட்டப்பட்ட பிறகு தான் ஹார்வே தனது தவறை உணர்ந்து தவறுதலாக அரி யாத்னாவின் பெயரை அறிவித்துவிட்டதாகத் தெரிவித்தார். (த-ரி4)

# சீனாவில் கடும் நி

# புதைந்தன கட்ட

## 91 பேர் மாயம்; 14 பே








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலச்சரிவு
# ட்டடங்கள்
## பேர் மீட்டு



பீஜிங், டிசெ 22

சீனாவின் செனஸன் நகரில் ஏற்பட்ட மண் சரிவில் சிக்கி 91இற்கும் மேற்பட்டோர் காணாமற்போயுள்ளனர். தொழில் நகரான செனஸன்னில் ஞாயிற்றுக்கிழமை காலையில் பெய்த பலத்த மழையையடுத்து, அங்குள்ள மண் குவியல் சரிந்தது.

அதைத் தொடர்ந்து, 22 கட்டடங்கள் மண்ணுக்குள் புதைந்தன. மேலும், கட்டடங்களுக்கு அருகிலுள்ள எரிவாயு நிறுவனமும் வெடித்துச் சிதறியது.மண் சரிவு ஏற்பட்ட பகுதியில் லியூக்ஸி தொழிற்பூங்கா உள்ளது. அதில் அமைந்துள்ள பல கட்டடங்களும், பல்வேறு குடியிருப்புக் கட்டடங்களும் மண்ணுக்குள் புதைந்தன.

அவற்றில் பணியாளர்கள் தங்கியிருந்த இரு கட்டடங்களும் அடங்கும். மண் சரிவடையத் தொடங்கும்போதே முன்னெச்சரிக்கையாக நூற்றுக் கணக்கானோர் அப்பகுதியிலிருந்து பாதுகாப்பாக வெளியேறிவிட்டனர்.

மண் சரிவால் இடிந்து விழுந்த கட்டடங்களிலிருந்து 14 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். 3 பேர் காயத்துடன் மீட்கப்பட்டனர். மேலும், 91 பேரைக் காணவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தீயணைப்புப் படையினர், பொலிஸார், சுகாதாரப் பணியாளர்கள் என 1,500இற்கும் மேற்பட்டோர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (த-ரி4)

# யேமனில் மூன்று நாள் சண்டையில் 75 பேர் சாவு

சனா, டிசெ 22

யேமனில் கடந்த மூன்று நாள்களாக நடைபெற்று வந்த சண்டையில் இராணுவ வீரர்கள் உட்பட 75 பேர் உயிரிழந்தனர் என இராணுவ வட்டாரங்கள் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தன.

யேமன் குறித்து சுவிட்ஸர்லாந்தில் நடைபெற்று வந்த அமைதிப் பேச்சு முறிவடைந்த நிலையில், கிளர்ச்சியாளர்களுக்கும் யேமன் இராணுவத்தினருக்கும் இடையே மீண்டும் கடும் சண்டை நடைபெற்று வருகிறது.

சவூதி கூட்டுப் படைத் தாக்குதலும் மீண்டும் தொடங்கியது. அமைதிப் பேச்சையொட்டி, கடந்த செவ்வாய்க்கிழமை முதல் ஒரு வார காலத்துக்கு யேமனில் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது.

ஆயினும், சண்டை நிறுத்த உடன்படிக்கையை மீறும் விதத்தில், இராணுவத்தினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே ஆங்காங்கே சிறு மோதல்கள் நடைபெற்றன. இந்தநிலையில் சுவிஸ் பேச்சு முறிவடைந்தது.

சவூதி எல்லையையொட்டிய, வடக்கு மாகாணமான ஹஜ்ஜாவில், கடந்த 3 நாள்களாக யேமன் அரசு நிலைகள் மீது கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர்.இதில் 35 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். இதைத் தொடர்ந்து, பதிலடியாக, சவூதி கூட்டுப் படை விமானங்கள் வான்வழித் தாக்குதல் மேற்கொண்டன. இதில் 40 கிளர்ச்சி யாளர்கள் கொல்லப்பட்டனர். 50 கிளர்ச்சியாளர்கள் காயமடைந்ததனர் என இராணுவத் தரப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)





# எயார் பிரான்ஸ் விமானத்தில் குண்டுப் புரளியினால் அமளி

நைரோபி,டிசெ.22

எயார் பிரான்ஸுக்கு சொந்தமான விமானத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்த விமானம் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

மொரீஸிலிருந்து பாரிஸுக்குச் சனிக்கிழமை இரவு புறப்பட்ட எயார் பிரான்ஸ் விமானத்தில் 459 பயணிகளும், 14 விமானப்பணியாளர்களும் இருந்தனர். அந்த விமானத்தின் கழிப்பறையில் மர்மப் பொருள் இருப்பதைக் கவனித்த பயணி அது குறித்து விமான ஊழியர்களிடம் தெரிவித்தார்.

அது வெடிகுண்டாக இருக்கலாம் என்ற அச்சத்தில் அந்த விமானம் கென்யாவின் மொம்பாஸா நகர விமான நிலையத்தில் நள்ளிரவில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக 6 பயணிகளிடம் தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது. அந்த மர்மப் பொருள் வெடிகுண்டு அல்ல எனத் தெரியவந்தது. (த)

# இந்தோனேசியாவில் மீண்டும் நிலநடுக்கம்

ஜகார்த்தா, டிசெ 22

இந்தோனேசியாவின் போர்னியோ தீவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.இது ரிச்டர் அளவில் 6 அலகுகளாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தநிலநடுக்கம் போர்னியோ தீவின் கடலோர நகரமான தராக்கான் என்ற இடத்திலிருந்து சுமார் 34 கிலோமீற்றர் தூரத்தில் பூமியின் அடியில் 22 கிலோமீற்றர் ஆழத்தில் உருவானதாக தெரியவந்துள்ளது.

பூமியின் நெருப்பு வளையம் என அழைக்கப்படும் பகுதியில் அமைந்துள்ள இந்தோனேசியாவில் அவ்வப்போது நிலநடுக்கங்களும், எரிமலை வெடிப்பும் நிகழ்ந்து வருகின்றன. (த)

www.sdb.lk

நிலையான வைப்புகளுக்கு

உயர்ந்த வட்டி



ஐந்து வருட
நிலையான வைப்பொன்றுக்கு
10.75%
உச்ச வருட வட்டி (முதிர்ச்சியில்)
வ.தே.வ. 8.98%

| | 3மாதம் | 6மாதம் | 1வருடம் |
|---|---|---|---|
| முதிர்ச்சியில் (வ.வ.வீ.) | 7.25% | 8.25% | 8.75% |
| வ.தே.வ. | 7.45% | 8.42% | 8.75% |

| | 2வருடம் | 3வருடம் | 4வருடம் |
|---|---|---|---|
| முதிர்ச்சியில் (வ.வ.வீ.) | 8.50% | 8.50% | 8.75% |
| வ.தே.வ. | 8.17% | 7.87% | 7.79% |

60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு 1 மில்லியன் வரை 15% வருட வட்டியும், 55 வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கு அதி உயர் வட்டியும் உரித்தாகும்.

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள சணச அபிவிருத்தி வங்கிக் கிளையை நாடுங்கள்

011 5 411 411

SDBL
சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சீ
தேசத்தின் முன்னோடி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தமிழகத்தை உலுக்கிய அடைமழை

என். ராமதுரை

ஐப்பசி – கார்த்திகையில் அடை மழை பெய்யும் என்பார்கள். ஆனால், இந்த ஆண்டில் தமிழகத்தில் அது அடாத மழையாகிவிட்டது. மழை மற்றும் வெள்ளம் ஏற்படுத்திய பாதிப்புகள் காரணமாக, பழைய நிலைமை திரும்பப் பல வாரங்கள், அல்லது பல மாதங்கள் ஆகலாம். அந்த அளவுக்குப் பெரும் சேதத்தை இந்த மழை ஏற்படுத்திவிட்டது.

இந்த மழைக் காலத்தில் குறிப்பிடத்தக்க அம்சம் ஒன்று உண்டு. வங்கக் கடலில் இந்த டிசெம்பர் மாதக் கடைசிக்குள்ளாக ஒரு புயல் தோன்றுமா? என்பது தெரியாது. ஆனால், இந்த ஆண்டில் இதுவரை ஒரு புயல்கூடத் தோன்றவில்லை. பெய்த மழை அனைத்தும் காற்றழுத்தத் தாழ்வு மண்டலங்களால் ஏற்பட்டதே. புயல் என்றால், கரையிலிருந்து பல நூறு கிலோ மீற்றர் தொலைவில், கடலில் உருவாகி பின்னர் கரையை நோக்கி நகரும். மழையைவிடக் காற்றுத்தான் அதிகமாக இருக்கும். புயல் காற்றினால் ஏற்படக்கூடிய சேதங்கள் வேறு விதமானவை. ஆனால், புயலுடன் ஒப்பிட்டால் காற்றழுத்தத் தாழ்வு மண்டலங்கள்தான் அதிக மழையை அளிப்பவை. இந்த ஆண்டில் பல சமயங்களிலும் இவை கரை ஓரமாக உருவாகி நிறைய மழை பெய்யும்படி செய்திருக்கின்றன.

## சேதத்துக்குக் காரணம்

பெருமழையால் ஏற்பட்ட பயங்கர நிலைமைக்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவதாக, மிகக் குறுகிய காலத்தில் இதுவரை இல்லாத அளவுக்குக் கடும் மழை பெய்தது. இதன் விளைவாக வெள்ள நீர் வடிந்தோட தகுந்த வழியும் அவகாசமும் இல்லாமல் போய்விட்டது. வெள்ள நீர் வடிந்தோட வடிகால்கள் போதுமான அளவில் இல்லை. இது தொடர்பான பெரிய திட்டங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அடையாறு, கூவம், பக்கிங்காம் கால்வாய் போன்றவற்றின் கரைகளில் கடந்த பல ஆண்டுகளாக அனுமதிக்கப்பட்டு வந்த நில ஆக்கிரமிப்புகள் வெள்ள நீர் எளிதில் வடிய இயலாமல் தடுத்தன.

இந்த நீர் நிலைகளில் தேங்கிக்கிடந்த குப்பைகளும் பிரச்சினையாகின. ஆக்கிரமிப்புக்களில் பலருக்கும் பங்கிருந்தது.

சென்னை விரைவு ரயில்பாதையின் ரயில் நிலையம், குறைந்தபட்சம் ஓரிடத்தில் பக்கிங்காம் கால்வாய் மீது குறுக்காக அமைந்துள்ளது. சென்னை விமான நிலையத்தின் நீட்டிக்கப்பட்ட ஓடுபாதை அடையாறு நதி மீதே இருந்தது.

வெள்ளநீர் வெளியேறத் தகுந்த வழி இல்லாமல் நகரமே நீரில் மிதந்தபோது செம்பரம்பாக்கம், புழல் போன்ற ஏரிகளின் பாதுகாப்புக் கருதி மேலதிகமாகச் சேர்ந்த நீர் திடீரெனத் திறந்துவிடப்பட்டது. இது ஏற்கெனவே இருந்த நிலைமையை மிக மோசமாக்கியது.

## இயற்கை மீது கை வைக்கலாமா?

சென்னை நகரம் கடந்த பல ஆண்டுகளாக வேகமாக விரிவடைந்து வருகிறது. மக்கள் தொகையும் அதிகரித்து வந்துள்ளது. புதிய தொழில்கள், வணிக அமைப்புகள், கல்வி அமைப்புகள் ஆகியவற்றுக்கு இடம் தேவை, மக்கள் குடியிருக்கவும் இடம் தேவை. ஏற்கெனவே குறிப்பிட்டபடி அவ்வித விரிவாக்கத்தின் போது முன்னர் ஏரிகளாக இருந்த இடங்களும் வயல்களும் விழுங்கப்பட்டுவிட்டன. இது தவிர்க்க முடியாததே. இப்போது சென்னை சென்ட்ரல் ரயில் நிலையமும், எழும்பூர் ரயில் நிலையமும் இருக்கின்ற இடங்கள் முன்னர் வயல்களாக இருந்திருக்கலாம். இப்போது தமிழகத்தில் குறுக்கும் நெடுக்குமாக உள்ள ரயில் பாதைகளும், நெடுஞ்சாலைகளும் பல இடங்களில் வயல்களின் ஊடே அமைக்கப்பட்டவையே. தூர்ந்துபோன ஏரிகளின் வழியே அமைக்கப்பட்ட சாலைகளும் உண்டு. இயற்கை மீது கைவைக் கலாகாது என்று கூறுவோர் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். இயற்கையாக ஓடிக் கொண்டிருந்த காவிரி நதி மீது கரிகால் சோழ மன்னன் கல்லணை கட்டியபோதே இயற்கை மீது மனிதன் கைவைக்க ஆரம்பித்துவிட்டான். அந்த அளவில் முன்னர் ஏரிகள் இருந்த இடங்கள் மீது கைவைக்கலாகாது என்ற வாதம் சரி யானதாக இருக்க முடி யாது.

ஐரோப்பாவில் நெதர்லாந்து நாட்டில், ஏரிகள் என்ன, கடலையே தூர்த்து நிலத்தை மீட்டுவருகின்ற னர். இது பல நூற்றாண்டுகளாக நடைபெற்றுவருகிறது. நெதர் லாந்தின் கடற்கரை வளைந்து நெளிந்து அமைந்துள்ள தால் இது சாத்தியமாகி யுள்ளது.

## செய்ய வேண்டியது என்ன?

சென்னையிலும் இது போன்று பெரிய அளவில் பாதாளக் கால்வாய் அமைக்கப்படுமானால், மழைகாலத்தில் பல பகுதிகளில் தண்ணீர் தேங்கும் நிலை இருக்காது. இந்தவிதக் கால்வாய் பல கிளைக் கால்வாய்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். உலக வங்கி, ஆசிய வங்கி போன்றவற்றிடமிருந்து இதற்குக் கடன் பெற முடியும்.

பெரிய மழை பெய்தால் இடுப்பளவு தண்ணீர் தேங்கக்கூடிய பகுதிகளில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள அடுக்கு மாடிக் கட்டடங்களை இடித்துத் தள்ளுவது என்பது பெரிய பிரச்சினை. இதனால் ஏராளமான பேர் வீடிழப்பர். வேலை இழப்பர். அத்துடன், சென்னை பெருநகரம் மேலும் விரிவடைவதைத் தடுக்க இயலாது.

ஆகவே, பாதாளக் கால்வாய்களைக் கட்டுவதுதான் ஒரே வழி.

பெரிய பிரச்சினையைச் சமாளிக்கப் பெரிய திட்டம் தேவை. அவசியமானால் மெக்சிக்கோநகரில் இதுஎப்படிநடைமுறைப் படுத்தப்படுகிறது என்ப தைக் கேட்டறியலாம். ஆனால், இந்தத் திட்டம் வெளிநாட்டு நிபுணர்களின் மேற் பார்வையில் நடைபெறுவதாக இருக்க வேண்டும்.

*நன்றி: தி இந்து தமிழ்*

# முதலமைச்சரே நீங்கள் நல்லவரா கெட்டவரா?

(13ஆம் பக்கம் பக்கத் தொடர்ச்சி....)

தமிழர் அரசியலில் – இலங்கை அரசியலில் தனக்குரிய இடம் தரப்படவேண்டும் என்று விரும்பினார். தான் ஒன்றும் எடுப்பார் கைப்பிள்ளை இல்லை என்று கோபப்பட்டார். மதிப்பார்ந்த தன்னை கூட்டமைப்பு ஒரு விளையாட்டுப் பொருளாக்கப் பார்த்தமையை ஏற்றுக்கொள்வதற்கு அவர் தயாராக இல்லை. கூட்டமைப்பில் இருப்பவர்களில் பெரும்பாலானவர்களுக்கு மேலாகத் தனக்கொரு அரசியல் இடம் தரப்பட்டிருக்க வேண்டும் என்று கருதினார். அதற்கான காய்நகர்த்தல்களையும் செய்தார்.

கூட்டமைப்பின் தலைமை விளித்துக்கொண்டது. பிடித்த பிள்ளையார் குரங்காகிப் போனார் என்பதைக் கண்டுகொண்டது. அவரைக் கட்டுக்குள் வைக்க விருப்பப்பட்டது. முரண்டு பிடித்தால் அரசியலில் மரியாதைக்குரிய இடம்கூடத் தரப்படாது என்று தனது செயல்களால் எச்சரித்தது. விளைவு, இரு தரப்புகளும் நேரடியாக முட்டி மோதிக்கொள்ளும் நிலைக்கு வந்தன. எதுவுவானாலும் பார்த்துவிடலாம் என்கிற நிலையில்தான் நாடாளுமன்றத் தேர்தல் அதற்கான களமாக்கப்பட்டது.

முதலமைச்சரைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கான சந்தர்ப்பமாக நாடாளுமன்றத் தேர்தலை கூட்டமைப்பு அணுகியது. முதலமைச்சரோ, இலங்கை அரசியலில் தமிழரின் அரசியலில் தனக்கான இடத்தை மதிப்பிடுவதற்கான களமாக அதனை மாற்றிக் கொண்டார். எனினும் இரு தரப்பினருமே எச்சரிக்கையாகத்தான் இந்தக் களத்தைப் பயன்படுத்தினார்கள். தமது கைகளைத் தாமே சுட்டுக்கொள்வதற்கு அவர்கள் தயாராக இருக்கவில்லை. அதில் கூட்டமைப்பு பின்தங்க, முதலமைச்சர் முன்னேறினார். மேலதிக பரீட்சார்த்தங்களைச் செய்வதற்கான துணிவை அது அவருக்கு வழங்கியது. அதேநேரத்தில் நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் முதலமைச்சருடனான போட்டியில் பின்தங்கிய கூட்டமைப்போ, தேர்தலின் பின்னர் அவரை நேரடி இலக்காக மாற்றுவதற்கு முயன்றது. முதலமைச்சர் மீதான சுமந்திரனின் வெளிப்பாடுகள் அத்தகையதே. மாகாண சபைக்குள்ளும் தமிழரசுக் கட்சியினரில் பெரும்பான்மையோர் முதலமைச்சருக்கு எதிரணியினராகினர். கூட்டமைப்பின் ஏனைய மாகாண சபை உறுப்பினர்கள் மதில் மேல் பூனையாகினர். இந்த மோதலில் எந்தத் தரப்பு வெல்கிறதோ அதனுடன் சேர்ந்துகொள்வார்கள் அவர்கள்.

## கட்சியே பொறுப்பு

இத்தகைய நிலையில் அரசியல் அநாதரவு – அந்தகார – வெளி ஒன்றுக்குள் முதலமைச்சர் தள்ளப்பட்டார். அங்கே அவருடன் கூட நிற்பவர்கள் மிகச் சொற்பம்பேர். அவர்களும் கூட்டமைப்பின் அரசியல் களத்துக்குள் ஆயுதங்கள் அற்ற அபிமன்யூக்களாக நிற்பவர்கள். ஓரிருவர் தமக்கான வேறு சுயநல அரசியல் கனவுகளுடன் இருப்பவர்கள் (அடுத்த பிரபாகரன் என்றவாறாக). இப்படியேபோனால் க.வி.விக்னேஸ்வரன் என்கிற மனிதரின் அரசியல் இன்னும் மூன்றாண்டுகளில் முடிவுக்கு வந்துவிடும். கூட்டமைப்பின் தலைமையுடன் முரண்பட்டுக் கொண்டு காணாமற்போன முதலமைச்சர் என்கிற பதிவுடன் அவரது அரசியல் வரலாறு புதைக்கப்பட்டுவிடும்.

அவர் அதனை விரும்பவில்லை. ஓர் அற்பமான அரசியல் தலைவராக தமிழ் மக்களின் வரலாற்றில் தான் காணாமல் ஆக்கப்படுவதை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இது அவரைப் பதற்றத்துக்குள்ளாக்குகிறது. கூட்டமைப்பின் அரசியல் எதிரிகள் இதனைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்கிறார்கள். அவர்களுக்கும் வேண்டியது க.வி.விக்னேஸ்வரனும் அவரது அரசியல் வரலாறும் அல்ல. கூட்டமைப்பைத் தாண்டி தாங்கள் மேலேறுவதற்கான கொழுகொம்பாக முதலமைச்சர் மீதான மக்களின் ஆர்வத்தைப் பார்க்கிறார்கள். பயன்படுத்த முயற்சிக்கிறார்கள்.

தனது வரலாற்றில், தனது அரசியல் இடம் குறித்த அச்சப்பட்டு, கையறு நிலையில் நிற்கும் முதலமைச்சரை தம் தேவைக்காக தம் பக்கம் இழுக்க முயற்சிக்கிறார்கள். பதற்றத்தில் தன்னை நோக்கி நீட்டப்படும் அவர்களின் கைகளைப் பற்றிப் பிடிக்கிறார் முதலமைச்சர். அவர் எச்சரிக்கையோடுதான் நடந்துகொள்கிறார். ஆனால் அவரால் நிதானமாக – தீர்க்கமாக – சிந்தித்து ஓரிடத்தில் காலூன்ற முடியவில்லை. எனவே பதகளிப்புப்படுகிறார். வரலாற்றில் தனது அரசியல் இடத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஓரிடத்தைத் தந்துவிடக்கூடியவர்களையும், கரங்களையும் நகர்ந்து, முகர்ந்து பார்க்க அவர் முற்படுகிறார். அதனால்தான் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைமையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

இந்தக் கூட்டு என்பதும் நாடாளுமன்றத் தேர்தல் போன்று ஒரு சோதனைக்களம்தான். ஒருவரை ஒருவர் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கும் கூட்டு இது. அதனால்தான் கூட்டமைப்பின் அரசியலால் பின்னடைவுகளைச் சந்தித்தவர்கள் எல்லோரும் இந்தக் கூட்டில் இணைந்திருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரதும் நோக்கம் தங்களைப் பலப்படுத்திக் கொள்வதே.

இதன் இணைத் தலைவர்களில் ஒருவரான மருத்துவர் லக்ஸ்மன், தமிழ் சிவில் சமூக அமையம் என்கிற அமைப்பை உருவாக்கியவர்களிலும் ஒருவர். இப்போது பேரவை செய்யப்போவதாகச் சொல்லப்படும் அரசியல் அழுத்தக் குழு வேலையை அந்த அமையத்தினாலேயே செய்திருக்க முடியும். ஆனால் கடந்த காலங்களில் அது முடிந்திருக்கவில்லை. எனவேதான் அவரும் அரசியல்வாதிகளுடன் சேர்ந்து இந்தத் தமிழ்மக்கள் பேரவைக்கு வந்திருக்கிறார். முதலமைச்சரின் இந்த நிலைப்பாட்டுக்கு அவர் மட்டுமே பொறுப்பாளி அல்லர். அவரை இந்த அரசியல் அந்தகாரப் பொதுவெளிக்குள் தள்ளிய கட்சியினரே அதிகம் பொறுப்பாளிகள். இதை அவர்கள் உணர்வார்கள் என்பது போலத் தெரியவில்லை. ஆனாலும் அவர்களிடம் அந்தக் கேள்வி மட்டும் தொக்கி நிற்கிறது. முதலமைச்சர் நல்லவரா? கெட்டவரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையின் கூட்டே சீட்டு



## ஒற்றுமையின் பற்றுதலே இங்கு பற்றுச்சீட்டு

செ.உமாசுதன்

மனித வாழ்வியலின் கட்டமைப்பு என்பது கனதியானது. கருத்தானது. தனித்துவமான இயல்புகளாலும், செயற்பாடுகளாலும் பிணைக்கப்பட்டது. அதன் வழி பயணிப்பது, நம்பிக்கையின் அடிப்படையிலே நகர்வது, மன ஒற்றுமையின் ஒன்றுபடலால் இணைபிரியாது கலந்துவிடுவது, கால ஓட்டத்தின் வேகத்தில் சுழன்று கொண்டிருப்பது போன்றவை எப்போதும் எம்முன் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சுழற்சிகள் நிகழ்காலம், இறந்த காலம், எதிர்காலம் எனக் கடந்தாலும் ஒழுங்கமைப்பில் மாற்றம் பெறாதவை. சுமுகமான நம்பிக்கையின் கட்டியெழுப்புதலோடும், ஒற்றுமையின் பலத்தோடும் உறவாடி, கருத்துக்களின் பரிமாற்றத்தோடு பயணிக்கின்ற, ஒவ்வோர் தனியன்களதும் கூட்டிணைவால் ஒரு சமூகமாக உருப் பெறுகின்றது.

ஒவ்வொர் சமூகமும் தமக்கென தனித்துவமான மொழி, கலை, கலாசாரம் மற்றும் ஒழுக்க விழுமியங்கள் என்பதன் அடிப்படையிலே வலுப்பெற்று தனித்துவ அடையாளங்களை, வரலாற்றுப் பாரம்பரியங்களை அந்த இனத்தின் இலக்கணமாக, அழகாக அரவணைத்துக் கொண்டுபயணிக்கிறது. இந்தநிலையிலே ஒரு தேசத்திலே வாழ்ந்து வருகின்ற இன சமூகங்கள் தங்களின் வரலாற்றின் அடிப்படையிலும், பூர்வீகத்தின் நிலைத்திருப்பின் ஆதாரம்மூலமும், பெற்றுக்கொள்ள வேண்டிய அனைத்து உரிமைகளையும் சுதந்திரமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு இடமளிக்கப்பட வேண்டும். அவ்வாறில்லாமல் ஒரு சமூகம் மற்றைய இனத்தின் நியாயமான உரித்துக்களை வழங்காது அடாத்தாக தனது எனத் தக்க வைத்துக்கொண்டு, அடிமைப்படுத்த முற்படும்போது, இந்த நல்லிணக்கம்-நம்பிக்கையின் அடிப்படையிலே கட்டியெழுப்பப்பட்ட ஒற்றுமை என்பது இயல்பாகவே முரண்படுகின்றது. தகர்ந்து தூர்ந்து போகின்றது.

இதற்கு ஆதாரமாக கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக எமது உரித்துக்களைப் பெறச் சுமுகமாகவும் பின்னர் விடுதலை வேண்டிய சமூகமாகவும் போராடியவர்கள் நாங்கள். தமிழ் சமூகமாக நம்பிக்கையில் நலிவின்றி ஒற்றுமையாய் பயணித்தவர்கள். நல்லினமாக உரிமை பெற்று நல்லிணக்கம் பெறக்கேட்டோம். கிடைக்கவில்லை. அழிவால் நலினப்படுத்தப்பட்டோம். இன்னமும் கேட்டுக் கொண்டே இருக்கிறோம்.

ஆனாலும் இன்னமும் துடிப்போடுதான் இருந்து வருகிறோம். நம்பிக்கையின் அடிப்படையிலும், மன ஒற்றுமையின் ஆதாரத்தோடும், பல விடயங்களைச் செய்து வருகின்றோம். அது வேறு ஒன்று மல்ல சேமிப்பும் அதற்கேற்ற திட்டமிடலும் தான். வாழ்வுக்கான ஆதாரமாக, சேமிப்பாக கிராமங்கள் தோறும் நகரங்களிலும் தற்போதும் நடைமுறையில் இருந்து வருகின்ற மன ஒற்றுமையின் ஆதாரமான நம்பிக்கையின் கூட்டான சீட்டுப் பிடிக்கும் முறைதான் அது.

உலகத்தின் எந்த வங்கியில் காசு இல்லாமல் போனாலும் போகலாம். ஆனால் பெண்களின் கையில் காசில்லை என்றால் அது தான் பெரிய அதிசயமாய் இருக்கும். வயிற்றைக் கட்டி, அதிலை இதில மிச்சம் பிடிச்சு சிறுவாடு சேர்க்கிறது. அந்தக் காசில் சின்ன சின்ன சீட்டுக் கட்டுறது. இதெல்லாம் எங்கள் பெண்களுக்குக் கைவந்த கலை. பல இடங்களில் தற்போதைய இளைய தலைமுறைப் பெண்களுக்கு பிள்ளை குட்டி பெற்று வளர்த்த அனுபவமுள்ள பெரிசுகள் சொல்லுற முக்கியமான அறிவுரை சீட்டைக் கீட்டைப் பிடிச்சு நாலு காசு சேர் என்பது தான்.

சீட்டுப்பிடித்தலில் பலவகை. கிராமங்களிலை அரிசிச் சீட்டு, சீனிச் சீட்டு, மிளகாய்த்தூள் சீட்டு எண்டிருக்கு. அலுமினியப் பாத்திரக் கடைகளில் பாத்திரச் சீட்டு என்றும், தளபாடக் கடைகளில் மேசைச் சீட்டு, அலுமாரிச் சீட்டு என்றெல்லாம் இருந்திருக்கிறது. காசுச் சீட்டிலே நடைமுறையிலே குலுக்கல் சீட்டு, கூறல் சீட்டு என இரண்டு வகை வழக்கில் உண்டு.

சீட்டுப் பிடிப்பதை சட்டப்படி அனுமதி

> “சீட்டுப் பிடிப்பது சட்டப்படி அனுமதி பெற்றவர்கள் தான் செய்யலாம். என்றாலும் நட்பு ரீதியாக நம்பிக்கை அடிப்படையில் யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் சீட்டுக் கட்டுவது நடைமுறையில் இருந்து வருகிறது. சும்மா வங்கியிலை காசு சேர்க்கிற தெண்டா அவ்வளவு அக்கறையாய் சேர்க்க இயலாது.”

பெற்றவர்கள் தான் செய்யலாம். என்றாலும் நட்பு ரீதியாக நம்பிக்கை அடிப்படையில் யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் சீட்டுக் கட்டுவது நடைமுறையில் இருந்து வருகிறது. சும்மா வங்கியிலை காசு சேர்க்கிறதெண்டா அவ்வளவு அக்கறையாய் சேர்க்க இயலாது. ஆனா சீட்டுக் காசெண்டால் தவணைக்குக் கட்டியே தீர வேணும். அப்ப என்ன விதப்பட்டும் காசு தேடிப் போடுவினம் என்கிறார் இந்தத் துறையிலே நீண்டகாலமாக தன்னை ஈடுபடுத்தி வருகின்ற இணுவிலைச் சேர்ந்த நாகமுத்து துரையர்.

இப்ப சீட்டுக்கள் எப்பிடிக்கட்டுவது எண்டு பார்ப்போம்,

### குலுக்கல் சீட்டு

பத்துப் பேர் சேர்ந்து ஒரு குலுக்கல் சீட்டு கட்டுவது எப்படி ? மாதக் காசு,100ரூபா10 பேர் ஆயிரம் ரூபா முதலாவது மாதம் பத்துப் பேருடைய பெயரையும் போட்டுக் குலுக்கி ஒரு சீட்டை எடுப்பார்கள். அதில் யார் பெயர் வருகின்றதோ அவருக்கே ஆயிரம் ரூபாவும் கிடைக்கும். அடுத்த மாதம் இன்னொருவர் பெயர் வரும். இப்படியே பத்து மாதங்களில் பத்துப் பேரும் மாதம் நூறு ரூபா கட்டி ஏதாவது ஒரு மாதத்தில் ஆயிரம் ரூபாவை ரொக்கமாகப் பெறுவர். சில இடங்களில் பத்து வரையான இலக்கங்களை ஒவ்வொரு சீட்டிலும் எழுதி முதல் நாளே குலுக்கிப் பங்காளர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சீட்டை எடுப்பார்கள். இதில் யாருக்கு என்ன இலக்கம் வருகிறதோ அந்த இலக்கத்திற்குரிய மாதச் சீட்டு அவருக்கு கிடைக்கும். இந்தச் சீட்டைத் தலைமை தாங்கி நடத்துபவர் தாச்சி எனப்படுவார். வழமையாக எந்தச் சீட்டிலும் முதலாவது சீட்டு தாச்சிக்கே உரியது. இக் குலுக்கல் சீட்டில் கட்டிய காசு அப்படியே வரும். இலாபம் இல்லை. இந்தச் சீட்டிலே ஆள்கள் தொகை கூடலாம் குறையலாம். கட்டுத் தொகையும் கூடிக் குறையலாம்.

### கூறல் சீட்டு

இந்த வகைச் சீட்டை ஏலச் சீட்டு என்றும் அழைக்கின்றனர். சீட்டின்போது முதலாவது மாதக் காசு முழுமையாகத் தாச்சிக்கு . (தலைமை) பத்து பேரும் கட்டிய நூறு ரூபாக்களும் ஆயிரம் ரூபாவாகக் கிடைக்கும். இரண்டாவது மாதம் சீட்டு ஏலம் விடப்படும் கழிவு நூறு ரூபா, இரு நூறு ரூபா எனத் தாச்சி அறிவிப்பார். சீட்டுத் தேவையானவர்கள் மேலதிக தொகையை உயர்த்திக் கேட்பார்கள். உதாரணமாக ஒருவர் நூற்றி ஐம்பது என்ற கேட்பார். பின்னர் சீட்டுக்கு தலைமைதாங்கும் தாச்சி நூற்றி ஐம்பது ரூபா எனக் கேட்பார். வேறு எவரும் விரும்பினால் அதனை விட தொகையை கூட்டிக் கேட்கலாம்.

இருநூறு முந்நூறு எனக் கூடலாம் இந்தத் தொகை. இப்படி உயர்த்தப்படும் தொகை கழிவு எனப்படும். யார் கடைசியான உச்சக் கேள்வித் தொகையை கேட்டாரோ அவருக்கே சீட்டுப் பணம் கிடைக்கும். அவர் கேட்ட தொகை இருநூறு ரூபா என்றால் அந்த இருநூறு ரூபாவைக் கழித்து வருகின்ற தொகையான எண்ணூறு ரூபாவே சீட்டு எடுத்தவருக்கு கிடைக்கும். அவர் கழித்த இருநூறு ரூபாவும், பத்துப் பேருக்கும் சமமாகப் பங்கிடப்படும். இதனடிப்படையிலே பங்கிட்ட ஒவ்வொருவருக்கும் இருபது ரூபாய் வருகின்றதல்லவா..? இந்தத் தொகையை கட்டுக் காசில் இருந்து கழித்து வருகின்ற தெகையான எண்பது ரூபாய் கட்டுத் தொகையே அடுத்த மாதத்துக்கான அமையும்.

இப்படியே சீட்டை எடுப்பவர்கள் தங்கள் தேவைக்கேற்பவும் அவசரத்தைப் பொறுத்தும் கட்டுமான அளவுக்கு கழிவு விடுவார்கள். இந்தச் சீட்டிலே போகப் போக எடுப்பவர் தொகை முடிவுக்குவர கடைசி சீட்டுக்கள் இலாபமாக வருவதுண்டு. சீட்டுக் காசு உரிய நாள் உரிய நேரத்தில் கட்டத் தவறினால் கழிவுக் காசு கிடைக்காது. முழுப்பணமாகக் கட்டவேண்டும். அதாவது 100 ரூபாவும் கட்டவேண்டும். எவராவது கட்டத் தவறினால் சீட்டு எடுத்தவருக்கு உரிய பணத்தை உரிய நாள் உரிய நேரத்தில் தாச்சியானவர் தன் சொந்தப் பணத்திலோ அல்லது கடன் பட்டோ கட்டியே தீரவேண்டும்.

இந்தநிலையிலே முன் சீட்டுக்களைக் கழித்து எடுத்துவிட்டு பின் வரும் சீட்டுக்களை ஒழுங்காக கட்டாமல் ஏமாற்றுபவர்கள் சிலரும் இந்த வட்டத்தில் இருக்கத்தான் செய்கின்றனர். அப்படி இருவரோ அல்லது மூவரோ இழுத்தடித்தால் தாச்சியானவர் நொடித்துப்போகின்றார் (சிக்கலில் மாட்டுதல்). கட்டியவர்களுக்குக் காசு கொடுக்க முடியாமல் திண்டாடுகின்றார். சீட்டுக்கள் பெருந் தொகையாக நிர்ணயிக்கப்பட்டு பிடிப்பதும் உண்டு (125,000, 1500,000). மாதம் இரண்டு தடவை கட்டுக்காசு கட்டும் வழக்கமும் உண்டு. குறித்ததொரு சீட்டில் பங்கெடுப்போர் பதினைந்து பேர் என்றால், ஒரு தடவைக்கான கட்டுக் காசு பதினைந்து ஆயிரம். மூன்று பேர் கட்டத் தவறினாலும் தாச்சியானவர் தனது கட்டுக் காசுடன் இதுவாக மாதம் குறைந்தது எட்டுமுதல் பத்தாயிரம் வரை கட்ட வேண்டியேற்படும். இவ்வாறு சீட்டுக் கட்டும் ஒவ்வொருவரும் நம்பிக்கையின் அடிப்படையிலே இயங்கினாலும் சீட்டு இயற்கையான செயற்கையான முறைகளிலும் முறிந்து விடுவதுமுண்டு. பங்காளிகள் இடம்பெயர்ந்து செல்லுதல், சாவடைதல், கட்ட இயலாத நிதி நெருக்கடி என இன்னோரன்ன காரணங்களும் இவற்றுள் அடங்குகின்றன.

இத்தகைய நடைமுறைக்கான சீட்டுச் சட்டம் 1999 ஆம் ஆண்டின் முதலாம் எண் சட்டம் என்று சொல்லப்படுகின்றது. இந்தச் சட்டங்களின் படி சீட்டுப்பிடிப்பவர் அதற்கான அனுமதியை, உரிமத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

தன்னுடன் சீட்டுப் பிடிப்போரிடம் எழுத்து மூல முறி ஒன்றை அதனை பொறுப்பெடுத்து நடத்துபவர் நிறை வேற்றியிருக்க வேண்டும். சீட்டுத் தொடர்பிலான கொடுக்கல் வாங்கல் எல்லாம் தகுந்த ஆவணமாக எழுத்தில் பொறிக் கப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அப்படிச் செய்யும் ஆவணங்களைத் தொடர்புடையவர்கள் நிழற் பிரதியெடுத்து வைத்திருக்கவும் வேண்டும். இவ்வாறு அனைத்தும் இருந்தால் சீட்டுப் பிணக்குகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கலாம் எனச் சொல்லப்படுகின்றது. ஆனாலும் எங்கள் ஊர்களில் இவ்வாறு ஆவணங்கள் பேணப்படாத போதும் மன ஒற்றுமையும் நம்பிக்கையும் சீட்டுக்கான நம்பிக்கைச் சீட்டாகிறது. ஆவணமாகிறது.

சிக்கல்களை குறைக்க சீட்டுப் பிடிப்போர் தான் சேர்க்கும் குழுவில் ஒவ்வொரு வரையும் நிரந்தர வதிவிடம், நிரந்தர வருமானம் உள்ளவராகவும் நேர்மையுள்ளவராகவும் தெரிவு செய்கின்றனர்.

இதெல்லாம் போகட்டும், இல்லத்தரசிகளிடையே சில இடங்களில் நடைமுறையில் உள்ள சீட்டாக 50 ரூபா காசும், 50 கிலோ அரிசியும், இரண்டு சுண்டு சீனியும் என்ற சீட்டும் இருந்துவருவதாகவும், இச் சீட்டு அவர்களுக்கு ஆபத்துதவியாக அமைவதாகவும் அயல் வீட்டுக்காரர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படுகிறது இந்தச் சீட்டு.

குறைந்தது பத்துப் பேர் இணைகின்றனர். இந்தச் சீட்டுக்கள் வீட்டு விசேடங்களின் போது கைகொடுப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

இவ்வாறு மன ஒற்றுமையும் ஒருவர் மீது ஒருவருக்குள்ள நம்பிக்கையின் பிரதிபலிப்பும் எமது பகுதி ஊர்களில் பல இடங்களிலும் கூட்டாகி ஒன்றித்து சீட்டாகிறது. சேமிப்பு, முதலீடு, தொழில், இலாபம் மீண்டும் சேமிப்பு என பலருக்கு பலன் தருகிறது. வங்கிகளில் நாம் பற்றுச் சீட்டுகளோடு (Cash receipt) திண்டாடி வலம் வருகிறோம். இங்கே ஒற்றுமையெனும் பற்றுதலோடு உறவுகளுடன் உறவாடி சீட்டாக பணத்தைச் சுழற்சி செய்கிறோம். ஒரு சுற்றோட்டமாக அது எம் சமூகத்திடையே வலம் வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவதானம் வேண்டும்

ஒரு ஊரில் ஒரு இளம் பெண் பால் விற்று சீவியம் செய்து வந்தாள். அவள் தினமும் தன்னிடம் இருந்த ஒரு பசு மாட்டிலிருந்து பாலைக் கறந்து அதை ஒரு குடத்தில் நிரப்பி, தனது தலையில் வைத்து எடுத்துச் சென்று வியாபாரம் செய்து வந்தாள். தான் ஏழையாக இருப்பதனாலே தான், இப்படித் தினமும் பால் விற்று சீவிக்க வேண்டி உள்ளது. என்னைப் போன்ற மற்றப் பெண்களெல்லாம் விதம் விதமாக ஆடை அணிந்து எடுப்பாகச் செல்கிறார்களே எனத்தன்னுள் கவலையுடன் இருந்தாள்.

ஒருநாள் அவள் வழமைபோல் பாலைக் கறந்தெடுத்துக் குடத்தினுள் விட்டு அதனை விற்பதற்காக தெரு வீதி வழியே சென்று கொண்டிருந்த போது தனது வாழ்க்கைத் தரத்தை எப்படி முன்னேற்றலாம் எனக் கற்பனை செய்தாள்.

இன்று பாலை விற்று வரும் பணத்தில். சில கோழிக் குஞ்சுகள் வாங்குவேன். அவை வளர்ந்து பெரிதானதும்; அவைகளை விற்று வரும் பணத்தில் இரண்டு ஆட்டுக் குட்டிகள் வாங்குவேன்; அவை வளர்ந்ததும் அவற்றை விற்று அதைக் கொண்டு பசு மாடு ஒன்று வாங்குவேன்.. அதைக் கொண்டு ஒரு பெரிய மாட்டுப் பண்ணை வைப்பேன். அதில் வேலை செய்ய பல பெண்களை வேலைக்கு அமர்த்துவேன்.

வருமானம் பெருகவே பலவிதமான ஆடை அணிகளையும் நகைகளையும் வாங்கி அவற்றை அணிந்து கொண்டு மற்றப் பெண்கள் எல்லாம் என்னைப் பார்த்து அதிசயிக்கக் கூடியதாக உல்லாசமாக இப்படி நடப்பேன் எனத் தலையில் பால் குடம் இருந்ததை மறந்து அதைப் பிடித்திருந்த கையை எடுத்து விசுக்கி நடக்க ஆரம்பித்தாள்.

என்ன பரிதாபம், அவள் நடந்த நடையில் தலையில் இருந்த அனைத்துப் பாலும் கீழே கொட்டியது. குடமும் உடைந்தது. அவளுக்கு அன்றைய பால் வியாபாரம் நஷ்டமடைந்ததுடன்..பால் குடமும் வேறு வாங்க வேண்டிய நிலை ஏற் பட்டது.



அப்போது தான் அவள், எந்த ஒரு காரியமும் நடந்து முடியும் முன், அதை எண்ணித் திட்டங்கள் போடக் கூடாது என்பதை உணர்ந்தாள். எந்த ஒரு செயலில் ஈடுபட்டாலும்..அதை முதலில் கவனமாக முடிக்க வேண்டும். இடையில் வேறு நினைவுகள் வந்தால் நஷ்டமே.



## வர்ணம் தீட்டலாம் வாங்க



## வரலாற்றில் இன்றைய தினம்

1769 - சீன- பர்மா போரில் பரபரப்பான நிலையில் போர் நிறுத்தம்.
1851 - இந்தியாவின் முதலாவது சரக்கு ரயில் செயற்பாடு
1885 - இற்றோ ஹிறோபூமி எனும் சமுராய் ஜப்பானின் முதலாவது பிரதமராகினார்.
1937 - 'லிங்கன்' சுரங்கப் பாதை அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் போக்குவரத்துக்கெனத் திறந்து வைப்பு.
1942 - உலக மகாயுத்தம் - 2 V - றொக்கட்டை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்த கட்டளையிட்டு அடல்ப் ஹிட்லர் ஒப்பம்.
1956 - ஒஹியா கொலம்பஸ் மிருகக் காட்சிச்சாலையில் வளர்ப்பு நிலையில் பிறந்த முதலாவது மனிதக் குரங்கு கோலா பிறந்தது.
1994 - பிரபல இலங்கை விஞ்ஞானி சிறில் பொன்னம்பெரும தமது 71 ஆவது வயதில் அமெரிக்காவில் காலமானார்.
1999 - அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட 'மாஹோ' கப்பல் 3 ஆயிரம் மெற்றிக் தொன் பொருள்களுடன் காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில் மூழ்கியது.

## பறக்கும் பாலூட்டி

- வெளவால் முதுகெலும்புள்ள பாலூட்டி.
- பாலூட்டிகளில் பறக்கும் இயல்புள்ள ஒரே பிராணி வெளவால் மட்டுமே.
- வெளவால்களில் உலகம் முழுவதும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வகைகள் உள்ளன.
- எலி, நரி போலவே சிறிய முகத்தைக் கொண்டவை வெளவால்கள்.
- ஆந்தைகளைப் போலவே இரவில்தான் வெளவால்கள் உற்சாகமாக இருக்கும்.
- வெளவால்களுக்குக் கண்கள் உண்டு. பார்வைத் திறனும் உண்டு. ஆனால் அவற்றின் கண்கள் பெரிதாக வளர்ச்சி அடையாதவை.
- பூச்சிகள், மீன்களை உணவாக உட்கொள்ளும். சிலசமயம் பழங்களையும் சாப்பிடும்.
- வெளவால்களில் குருதிக் காட்டேரி வகை வெளவால்கள் சிறிய, கூர்மையான பற்களைக் கொண்டவை. விலங்குகளின் தோலைத் துளைத்து குருதி குடிக்கும் வல்லமை கொண்டவை.
- வெளவால்களில் உலகம் முழுவதும் அதிகம் காணப்படும் இனம் பழம்தின்னி வெளவால்களே.
- வெளவால்கள் பகல் முழுவதும் தலைகீழாகத் தமது இருப்பிடத்தில் தொங்கிக்கொண்டிருக்கும். இரவுதான் அவை பல இடங்களுக்குச் சென்று இரை தேடும்.
- பூக்களின் மகரந்த சேர்க்கைக்கும், பழவிதைகளை வெவ்வேறு இடங்களில் தூவி தாவரங்கள் பெருகுவதற்கும் வெளவால்கள் உதவுகின்றன.
- காடுகள், குகைகள், நதியோரங்கள், நகரங்களில் உள்ள பழைய கட்டடங்கள் ஆகியவைதான் வெளவால்களின் வாழ்விடங்கள். அருகில் நீரும், உணவும், இரையும், பாதுகாப்பும் இருப்பதை வெளவால்கள் உறுதி செய்து கொள்ளும்.
- நீர்ப்பாதைகளில் பயணம் செய்யும்போது, வெளவால்களால் தடங்கல்கள் ஏதுமின்றி தமது மீயொலி அலைகளை அனுப்பி எதிரே இருப்பதைத் தெரிந்துகொள்ள முடியும். மனிதர்கள் பயன்படுத்தும் சாலைவழிகளை வெளவால்கள் தேர்ந்தெடுப்பதில்லை.
- கூட்டம் கூட்டமாக வாழ்பவை வெளவால்கள்.
- வெளவால் மணிக்கு ஆயிரம் சிறுபூச்சிகள் வரை சாப்பிடும். வயல்களைத் தாக்கும் பூச்சிகளை அழிப்பதால் விவசாயியின் நண்பனாக வெளவால் உள்ளது.
- சிறகுகள் மட்டும் ஆறடி கொண்ட வெளவாலும் உண்டு. ஒரு சிறு நாணயம் அளவுக்கே உள்ள சிறிய வெளவாலும் உண்டு.
- வெளவால்கள் பெரும்பாலும் பறவைகளுடன் மோதுவதில்லை. பறவைகள் வாழும் இடத்தில் இருப்பதுமில்லை.
- பெண் வெளவால்கள் கோடைகாலத்தில்தான் கர்ப்பம் அடையும்.
- கரு வளர்வதற்குப் போதுமான சத்துக் கிடைக்கும் காலம் என்பதால் கோடைகாலத்தில் பெண் வெளவால்கள் கருவுறுகின்றன.
- பெண் வெளவால்கள் எல்லாம் சேர்ந்து பேறுகாலக் குடியிருப்பு ஒன்றைத் தனியே உருவாக்கிக் கொள்ளும்.

## பொருள்தரும் தனி எழுத்துக்கள்

அ -தமிழ் எண் எட்டின் குறியீடு
ஆ - பசு
ஈ -கொடு, பறக்கும் பூச்சி
உ -சிவன்
ஊ -தசை, இறைச்சி
ஏ - அம்பு
ஐ -ஐந்து, அழகு, தலைவன், வியப்பு
ஓ -வினா, மதகு - நீர் தாங்கும் பலகை
கா - சோலை, காத்தல்
கூ - பூமி, கூவுதல்
கை - கரம், உறுப்பு
கோ -அரசன், தலைவன், இறைவன்
சா - இறப்பு, மரணம், பேய், சாதல்
சீ- இகழ்ச்சி, திருமகள்
சே -எருது, அழிஞ்சில் மரம்
சோ- மதில்
தா -கொடு, கேட்பது
தீ- நெருப்பு
து - கெடு, உண், பிரிவு, உணவு, பறவை இறகு
தூ - வெண்மை, தூய்மை
தே -நாயகன், தெய்வம்
தை - மாதம்
நா - நாக்கு
நீ - நின்னை
நே -அன்பு, நேயம்
நை -வருந்து, நைதல்
நொ -நொண்டி, துன்பம்
நோ - நோவு, வருத்தம்
நௌ - மரக்கலம்
பா - பாட்டு, நிழல், அழகு
பூ - மலர்
பே - மேகம், நுரை, அழகு
பை - பாம்புப் படம், பசுமை, உறை
போ - செல்
மா -மாமரம், பெரிய, விலங்கு
மீ - ஆகாயம், மேலே, உயரம்
மு - மூப்பு
மூ - மூன்று
மே - மேன்மை, மேல்
மை - அஞ்சனம், கண்மை, இருள்
மோ - முகர்தல், மோதல்
யா -அகலம், மரம்
வா -அழைத்தல்
வீ -பறவை, பூ, அழகு
வை -வைக்கோல், கூர்மை, வைதல், வைத்தல்
வௌ -கௌவுதல், கொள்ளை அடித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பைக் குலைக்க முற்படுவோரின் சதியா இது?

யாழ். நூலகக் கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பு உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் பட்டுள்ளது. ஆனால், கூட்ட ஏற்பாடுகள், அறிக்கைகள், வடிவமைக்கப்பட்டுள்ள இணையத்தளம் போன்றவற்றைப் பார்க்கின்றபோது நீண்டகாலமாகத் திட்டமிட்டு இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதா என எண்ணத் தோன்றுகின்றது.

மதத் தலைவர்கள், வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும், மருத்துவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்ளும் சிலர் இணைந்து தமிழ்மக்களின் நலன்களைப் பாதுகாப்பதையும் வலியுறுத்துவதையும் நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பே தமிழ் மக்கள் பேரவை என்று அதற்கு அர்த்தம் கற்பிக்கப்படுகின்றது. இதன் பின்னணியில் உள்ளூர்ப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியரும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல தசாப்த காலமாகப் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்குக் கௌரவமான அரசியல் தீர்வைக் காண்பது உட்பட தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த ஓகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற தேர்தலில் மக்களின் ஆணையைக் கோரி, அமோக வெற்றியைப்பெற்று நான்குமாத காலமே பூர்த்தியாகியுள்ள நிலையில், தமிழ் மக்கள் பேரவை என்ற பெயரில் அமைப்பு உருவாக்கப்பட்டிருப்பது பல்வேறு கேள்விகளை எழுப்பி வைத்துள்ளது.

தீர்வுக்கான முன்னெடுப்புக்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் இணைந்து மேற்கொண்டுவரும் நிலையில் இந்தப் புதிய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பை உருவாக்குவதில் முன்னின்ற பலர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது அதிருப்தி கொண்டவர்கள் என்பது தெரிகிறது.

இந்த அமைப்பை உருவாக்குவதற்குத் தலைமை தாங்கியவர்களில் ஒருவர் வடக்கு மாகாண முதலமைச்சர். குறித்த அமைப்பை உருவாக்கும் கூட்டத்தில் இருந்து வெளியே வந்த முதலமைச்சர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, தான் மீண்டும் ஊமை எனப் பதிலளித்திருந்தார். ஆயினும் அடுத்த நாள் அந்த அமைப்பினால் அனுப்பி வைக்கப்பட்ட ஊடக அறிக்கையில், கேள்வியையும் தானே கேட்டு அதற்கான பதிலையும் தானே கூறியிருந்தார் முதலமைச்சர்.




அதில், இது ஓர் அரசியல் கட்சி அல்ல. அரசியலில் குதிக்கும் எண்ணம் கூட அதற்கு இருக்கமாட்டாது. இது வரைகாலமும் நாங்கள் அரசியல் தீர்வு பற்றிப் பேசி வருகின்றோம். எப் பேர்ப்பட்ட தீர்வைத் தமிழ் மக்கள் எதிர்பார்க் கின்றார்கள் என்பதை இது வரையில் எவருமே வெளிப்படுத்தவில்லை. அடுத்து, சமூகப் பிரச்சினைகள் பலவுண்டு. அவை பற்றி நாங்கள் விஞ்ஞான ரீதியாக முறையாக ஆராய முற்படவில்லை. எனவேதான் இப்பேர்ப்பட்ட மக்கள் குழுவொன்று பல நல்ல காரியங் களில் இறங்குகின்றது என்று அறிந்தபோது நான் அதில் பங்கு பற்ற இசைந்தேன். அரசியல் கட்சிகளையும் அழைத்ததாகக் கூறினார்கள். அரசியல் ரீதியான விடயங்களை ஆராய இருப்பதால் அரசியல்வாதிகள் அதில் பங்கேற்பதில் என்ன பிழையிருக்கின்றது? என்று முதலமைச்சர் முந்தி விழுந்து கூறியதில் ஏதோ உள்நோக்கம் உள்ளதோ என்றும் எண்ணவேண்டியிருக்கிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைவாகத் தமிழ் மக்களின் பிரச்சினைகள், நலன்கள் சார்ந்த விடயங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேகமாகச் செயற்படவில்லை என்ற விமர்சனங்கள் உள்ளபோதிலும், பல தசாப்த காலமாகத் தீர்வு காணப்படாதிருக்கும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளைக் காண்பது சாத்தியமில்லை என்பதையும், யதார்த்தத்தை உணர்ந்தவர்கள் நன்றாகப் புரிந்துகொள்வர்.

கூட்டமைப்பின் வேட்பாளராக 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற வடமாகாணத் தேர்தலில் முன்னிறுத்தப்பட்டு கூட்டமைப்பின் பிரசார ஆதரவோடு தேர்தலில் பெருவெற்றி பெற்று வடமாகாண முதலமைச்சரானவர் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்.

ஆனால், தொடர்ந்து வந்த காலப்பகுதியில் அவருக்கும் கூட்டமைப்பின் தலைவர்களுக்கும் இடையே ஓர் இடைவெளி தோற்றம் பெற்றது என்ற யதார்த்தநிலையானது, கடந்த பொதுத் தேர்தலில் எடுத்த நிலைப்பாட்டிலிருந்தும் தெரிவித்த கருத்துகளில் இருந்தும் வெளியரங்கில் நிரூபணமானது.

தற்போது தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்புக்குத் தலைமை தாங்குவதற்கு எடுத்துள்ள தீர்மானம் கூட்டமைப்பிலிருந்து தனிவழிப் பயணத்தை வெளிப்படையாகத் தொடர்வதற்கான அவரது சமிக்ஞையாகவே தோன்றுகின்றது.

கடந்த தேர்தலில் கூட்டமைப்பை இலக்குவைத்து தாக்குவதையே பிரசாரமாகக் கொண்டிருந்த கஜேந்திரகுமார் போன்றோரை இணைத்துக்கொண்டு தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு என்ற பொதுப் பயணத்தில் எந்தளவு தூரத்துக்கு முதலமைச்சரால் பயணிக்கமுடியும் என்பதை வெகு விரைவில் அறியமுடியும்.

# வெற்றி பெற விரும்புகிறீர்களா?

நிலா, ஏழாலை.



நாம் எந்த ஒரு செயலைச் செய்யும் போதும், வெற்றி பெறவேண்டும் என்பதே எம் எல்லோரது விருப்பமாயிருக்கும். இருந்தும் எல்லோருக்கும் எல்லா நேரமும் வெற்றி கிடைப்பதில்லை. சிலநேரங்களில் மயிரிழையில் அது கை நழுவிப் போகும் சந்தர்ப்பங்களும் உண்டு. ஒவ்வொருவரது வாழ்விலும் ஏதோ ஒரு தேடல், ஆசை, கற்பனை மனதில் தோன்றும். இப்படித்தான் அமைய வேண்டும் என்ற நிறைய ஆசைப்படுவோம். ஆனால் அதற்கான வாய்ப்புக்காக எவ்வளவு தூரம் முயற்சி செய்கிறோம் என்று கேட்டால் நிச்சயம் அது, சாதகமானதாக இல்லை. முழு மூச்சாக அதில் அக்கறை செலுத்துகி றோமா? என்றால் இல்லை. அதற்கு ஏதோவொரு சாக்குப்போக்குச் சொல்லி நம்மையே நாம் ஏமாற்றுகின்றோம். மாறாக "எல்லாம் தலை விதி" எனக் கூறி விட்டு அதனை அப்படியே விட்டு விடுகின்றோம். கிடைக்கவில்லை என்று மனம் வருந்துகின்றோமேயன்றி, அதை அடைய எவ்வாறு முயற்சிக்க வேண்டும் என்று எம்மில் பலர் சிந்திக்க மறந்து விடுகின்றோம். சில நேரங்களில் அதனைப் பற்றி யாரிடமாவது புலம் பினாலும் அதனைக் கேட்பவரும் அக்கறை யில்லாதவர் அல்லது மூடநம்பிக்கை உள்ளவர் என்றால் உங்களது எண் ணத்தையும் அது அவரது போக்கில் மாற்றி விடும்.

### வெற்றி இலக்கை அடைய

நீங்கள் வெற்றி இலக்கை அடைய வேண்டும் என எண்ணினால் சுயமாக முடிவெடுக்கக் கற்றுக் கொள்ளுங்கள். மற்றவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள், ஆனால் முடிவெடுப்பது என்பது நீங்கள் மட்டும்தான், ஆனால் உங்களை சார்ந்திருப்பவர்களையும், ஒரு கணம் சிந்திக்க மறவாதீர்கள்.

> நாம் எந்தவொரு காரியத்தில் வெற்றி பெற, நம்பிக்கையும்,ஆசையும், விடாமுயற்சியும் தேவை. அந்த நம்பிக்கை மட்டும் இருந்தால் போதாது. என்னால் நிச்சயம் இந்தக் காரியத்தை செய்ய முடியும் என்ற மன உறுதியும் வேண்டும்.

நாம் எந்தவொரு காரியத்தில் வெற்றி பெற நம்பிக்கையும்,ஆசையும், விடாமுயற்சியும் தேவை. அந்த நம்பிக்கை மட்டும் இருந்தால் போதாது. என்னால் நிச்சயம் இந்தக் காரியத்தைச் செய்ய முடியும் என்ற மன உறுதியும் வேண்டும். அப்படி இருந்தால் மட்டுமே நீங்கள் திறமையுள்ளவராக இருந்தாலும் கூட உங்களால் வெற்றி பெற முடியும்.

"மலையே வந்தாலும் தலையே சும" என்பது முதுமொழி. எந்தப் பிரச்சினை வந்தாலும் கடைசி வரை போராடுங்கள். மனம் தளராதீர்கள். என்னால் இதில் வெற்றி பெற முடியும் என்ற தன்னம்பிக்கையை கை விடாதீர்கள். அதுவே உங்களை வெற்றி பெறச் செய்யும். அது மட்டுமல்லாது என்னால் முடியும் என்ற நம்பிக்கையால். சுறுசுறுப்பும், உற்சாகமும் ஏற்படும். மாறாக பிரச்சினைகள் வரும் போது பயந்து, மனம் தளர்ந்து ஒதுங்குவோமானால் தோல்வியுறும் நிலை ஏற்படுவதுடன் சோம்பேறிகளாகி, தன்னம்பிக்கையற்றவராகி எதற்கும் மற்றவர்களை எதிர் பார்க்கும் மனநிலைக்கு தள்ளப்படுவோம்.

### இலக்கு நோக்கிய உங்கள் பயணம்

எப்போதும் உங்கள் பயணம் இலக்கு நோக்கியதாகவே இருக்கட்டும். அதற்கு நாம் என்ன முயற்சி செய்ய வேண்டும். எமது எண்ணங்கள் உயர்வானதாகவும் நேரானதாகவும் இருக்கட்டும். அப்போது தான் உங்களால் ஆக்கபூர்வமாக சிந்திக்கவும் அதனைச் செயற்படுத்தவும் முடியும்.

தன்னம்பிக்கையும் , தைரியமும் உங்கள் எண்ணங்களுடன் இணையும்போதுதான் மனத்துணிவு ஏற்படும். இதனால் உங்களுக்கு வெற்றி கிட்டும். அதற்கு மாறாக இது நடக்குமா? என்னால் முடியுமா? என்று மனதில் நினைக்காதீர்கள். அந்த தாழ்வுணர்ச்சி, பயம், நம்பிக்கையீனம் என்பவை எமது மனதை ஆளத் தொடங்கும்போது தான் எந்தச் செயலை செய்யும் போதும் உங்கள் அவநம்பிக்கை வெளிப்படும். இதனால் இது என்னால் முடியுமா? என் உங்கள் மனம் உங்களை தளர்வடையச் செய்து விடும்.

அடிக்கடி உங்களைச் சுய ஆய்வு செய்து பாருங்கள். எனது பலம் என்ன? எனது பலவீனம் என்ன? எனக் கண்டறியுங்கள். பலவீனமானவைகளை மாற்ற முயற்சி செய்யுங்கள். நீங்கள் தான் மாற வேண்டுமே தவிர மற்றவர்கள் உங்களை மாற்றுவது என்பது இலகுவான காரியம் அல்ல. அத்துடன் சமூகத்திலும் அக்கறை கொள்ளுங்கள். முரண்பாடானவிடயங்களை முடிந்தளவு தவிர்த்து நடந்து கொள்ளுங்கள். நடைமுறைக்கு ஒத்துவராத விடயங்களைப் பற்றி அலட்டிக் கொள்ளாதீர்கள்.

எப்போதும் எம்மைப் பற்றி மட்டும் சிந்திக்காது, எம்மைச் சார்ந்தவர்களைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். அதற்காக சில விட்டுக் கொடுப்புக்களுடன் கூடிய தியாக மனப்பாங்கை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதனால் எமக்கு மட்டுமல்ல எம்மைச் சாந்தவர்களுக்கும் எம்மில் நம்பிக்கை ஏற்படும் வாய்ப்பு அதிகம்.

### வாழ்க்கையைப் புரிந்து கொள்ளுங்கள்

எனக்கு எது தேவை? எது தேவையில்லை? என்று முடிவெடுக்கும் ஆற்றல் உங்ளிடமே உள்ளது. வாழ்க்கை என் றால் பிரச்சினைகள், குழப்பங்கள், வெறுப்பு, கோபம் கவலை போன்ற உணர்வுகள் ஏற்படுவது இயல்பானது தான். அதற்காக மனம் தளராது அப்படியான நேரங்களில் உங்கள் வாழ்வில் நடைபெற்ற மகிழ்ச்சியான விடயங் களை அசைபோடுவது, உங்களில் அக்கறையுள்ள, நீங்கள் மிகவும் நேசிக்கும் உறவுகளைச் சந்திப்பது, இயற்கையை இரசிப்பது, மன துக்கு இதம் தரும் பாடல்களைக் கேட்டு இரசித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடலாம். அதனால் எமது மனம் ஆறுதல் அடைவதுடன் எமது கவலைகளை மறக்கவும் செய்து விடும்.

எப்போதும் எமது இலட்சியத்தை நோக்கி கால்கள் பயணிக்க வேண்டும். அந்தப் பாதையில் பயணிக்கும் போது எந்தத் தடைகளையும் கடந்து செல்வேன் என்ற நம்பிக்கையுடன் பயணிக்க வேண்டும். அதற்கு எம்மையும் எம்மைச் சார்ந்தவை களையும் மனதில்இருத்திக் கொள்ளுங்கள். காரணம் நாம் தனியே பயணித்த போதிலும் எம்மை நம்பி இருக்கும் உறவுகள் நாம் சில நேரங்களில் சறுக்கி விழும்போதோ, நாம் வெற்றி பெறும் போதோ எம்மைத் கைதூக்கி விடுகிறர்கள். அதேவேளை நாம் தமக்குத் துணை இருக்கிறோம் என்ற நம்பிக்கை வைத்துள்ளவர்களின் மனதைக் காயப்படுத்தாது அவர்களது உணர்வுகளையும் மதித்து நடக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

வாழ்க்கையைப் புரிந்து கொள்ளுங்கள். யதார்த்தமாக சிந்திக்க பழகிக்கொள்ளுங்கள். எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செய்து முடித்து விட்டு பின் நீங்களும் கவலைப்பட்டு, மற்றவர்களையும் கவலைப்பட வைக்காதீர்கள். உங்கள் இலட்சியப்பாதையாக, இருள் நீங்கிய ஒளி மயமான பாதையை நோக்கியே பயணியுங்கள். வெகு விரைவில் அந்த இலக்கை அடைந்து விடுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** தாயின் அன்பும், ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு எளிதில் நிறைவேறும். உபரி வருமானம் உண்டு. எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். உடல்நிலை சிறப்பாக இருக்கும்.

**இடபம்:** நண்பருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற தாமதமாகும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். உறவினர் வகையில் கூடுதல் செலவு செய்ய நேரிடலாம். உடல்நலனில் கவனம் தேவை.

**மிதுனம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில் வளர்ச்சி பெற சாத்தியக்கூறுகள் தென்படும். பணவரவும், நன்மையும் அதிக அளவில் கிடைக்கும். வெகுநாள் வாங்க நினைத்த வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**கடகம்:** எந்தச் செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி பூர்த்தியாகும். கொடுக்கல், வாங்கலில் முன்னேற்றம் ஏற்படும். உடன் பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள்.

**சிங்கம்:** சுயகௌரவத்தை பாதுகாத்துக் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். சேமிப்புப் பணம் அத்தியாவசியச் செலவுகளுக்கு பயன்படும். தரமற்ற பொருளை வாங்க நேரிடலாம்.

**கன்னி:** தன்மானத்துக்குச் சோதனை வரலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். குடும்பப் பிரச்சினைகளைச் சரி செய்வீர்கள். பணவரவை விட செலவு அதிகரிக்கும். உடல் நலத்தில் கவனம் தேவை.

**துலாம்:** வாழ்வில் வளம் பெற, புதிய சூழல் உருவாகும். மனத் தைரியத்துடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திருப்திகர வளர்ச்சி ஏற்படும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**விருச்சிகம்:** சமூகப் பணியில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தெய்வ அனுகூலம் கிடைத்து முக்கிய செயல் நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியில், புதிய சாதனை படைப்பீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்ததத்திட்டமிடுவீர்கள்.

**தனுசு:** உங்களின் நற்செயல் சிலரால், தவறாக விமர்சிக்கப்படலாம். தொழில், வியாபாரம் செழிக்கச் சில மாற்றங்களைச் செய்வீர்கள். பணவரவைவிட செலவு அதிகரிக்கும். கண்களின் பாதுகாப்பில் கவனம் வேண்டும்.

**மகரம்:** முக்கியமான பணி நிறைவேற தாமதமாகலாம். சமயோசிதமாக செயற்படுவதால், நற்பயன் கிடைக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சிபெறக் கடுமையாக உழைப்பீர்கள். பணவரவு ஓரளவுக்கே இருக்கும்.

**கும்பம்:** நீண்ட நாள் தாமதமான செயலில் அனுகூல பயன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். இலாப விகிதம் அதிகரிக்கும். நண்பர் வீட்டு சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அழைப்பு வரும்.

**மீனம்:** செயற்பாடுகளில் கவனச் சிதறல் ஏற்படலாம். நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். மீதிப்பணம் கிடைக்க தாமதம் ஏற்படலாம். பொருள்கள் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

## கவர்ச்சியைக் கைவிடும் காஜல்

ஹீரோயின்களுக்குள் நடக்கும் போட்டியால் ஸ்ரேயா, தமன்னா போன்றவர்கள் டாப்லெஸ் காட்சியிலும் நடித்தனர். அவர்களுக்கு ஈடுதரும் வகையில் காஜல் அகர்வாலும் கவர்ச்சி தூக்கலாக நடித்தார். தற்போது அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டு, நடிப்புக்கு முக்கியத்துவம் உள்ள வேடங்களை தெரிவு செய்ய முடிவு செய்திருக்கிறார். ஹிந்தியில் "டு லப்ஸான் கி கஹானி" படத்தில் பார்வையற்ற பெண்ணாக நடிக்கிறார். இது பற்றி காஜல் கூறும்போது, "ஹீரோயின் அந்தஸ்தில் நான் ஒரு எல்லையை அடைந்திருக்கிறேன். கவர்ச்சியாகவும், சுட்டித்தனமாகவும் பலவித கதாபாத்திரங்கள் ஏற்று நடித்தேன். தற்போது நடிப்புக்கு முக்கியத்துவம் உள்ள வேடங்களைத் தெரிவு செய்து நடிக்க முடிவு செய்திருக்கிறேன். இந்திப் படத்தில் பார்வையற்ற பெண்ணாக, அதேசமயம் சிற்பியாகவும் வேடம் ஏற்கிறேன். இந்த கதாபாத்திரத்தில் நடிப்பதற்காக பயிற்சியும் பெற்று வருகிறேன் -என்றார்.









தாஜ்மஹால் ➤ காதலன் Re
♥ கனவுக்காதலன் ♥

எவ்வளவு தூரம் சென்றாலும் களைப்பு இல்லை பயணம் உன்னுடன் என்பதால்.
வாழ்க்கை பற்றி பயம் இல்லை
வாழப்போவது உன்னுடன் என்பதால்.

தாஜ்மஹால் ➤ காதலன்
ரொம்ப கெட்டவன் @ik

உன்னிடம் இருப்பதை இல்லாதவர்களுக்குப் பகிர்ந்து கொடு... உன்னிடம் இல்லாதபோது இறைவன் உனக்குக் கொடுப்பான்...

★ கிரிஷ் "•KRISH•"

நீ என் மீது கொண்ட காதலை பிடிக்கவில்லை என்றும் நான் சொல்லவில்லை. கொஞ்சம் பொறு நம் திருமணம் வரை என்றேன், நீயோ சொல்லாமல் விலகிச் சென்றுவிட்டாய்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | | | 9 | | | | |
| 4 | | | 7 | | | 3 | | |
| 3 | 7 | | | | 1 | | | |
| | | 3 | | 7 | 6 | 5 | 4 | |
| | 4 | | | 5 | | 2 | 3 | |
| | 9 | 7 | | | | 6 | | |
| 7 | | | 4 | | | | | 2 |
| | | 2 | | | 7 | | | 3 |
| | | | | 1 | | | 7 | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 4 | 6 | 9 | 8 | 2 | 1 | 5 |
| 9 | 6 | 1 | 3 | 2 | 5 | 8 | 7 | 4 |
| 2 | 8 | 5 | 7 | 1 | 4 | 9 | 6 | 3 |
| 6 | 5 | 3 | 9 | 4 | 1 | 7 | 8 | 2 |
| 8 | 4 | 9 | 2 | 3 | 7 | 6 | 5 | 1 |
| 7 | 1 | 2 | 8 | 5 | 6 | 3 | 4 | 9 |
| 5 | 3 | 6 | 4 | 8 | 9 | 1 | 2 | 7 |
| 1 | 2 | 7 | 5 | 6 | 3 | 4 | 9 | 8 |
| 4 | 9 | 8 | 1 | 7 | 2 | 5 | 3 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபலமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 140 | – | 100 | 120 | 140 | 120 | 120 |
| கத்தரி | 160 | 180 | 160 | 160 | 160 | 160 | 110 |
| கரட் | 200 | 300 | 200–300 | 180 | 200–280 | 300 | 220 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40 | 30 | 30 |
| பயிற்றை | 150 | 240 | 250–300 | 200 | 220–280 | 300 | 250 |
| பாகல் | 300 | 320 | 400 | 400 | 350–400 | 380 | 350 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 90 | 80 | 90 | 80–90 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 140 | 140 | 100 | 120 | 140–150 | 180 | 120 |
| பூசணி | 50 | 50 | 50 | 50 | 40 | 80 | 40 |
| தக்காளி | 200 | 160 | 180 | 260 | 180–200 | 140 | 150 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 70 | 40–60 | 60 | 40 |
| கீரை | 40 | – | 50 | 30 | 40–50 | 50 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 30 | 50 | 30–40 | 40 | 60 |
| பச்சை மிளகாய் | 1000 | 650 | 700 | 700 | 700–800 | 1000 | 700 |
| புடோல் | 140 | 110 | 120 | 120 | 120–130 | 160 | 120 |
| கோவா | 120 | 160 | 140 | 140 | 150–160 | 160 | 150 |
| வெண்டி | 200 | 140 | 150–200 | 120 | 140 | 120 | 120 |
| போஞ்சி | 300 | 180 | 280 | 280 | 240–260 | 320 | 250 |
| லீக்ஸ் | 150 | 160 | 160 | 280 | 140–160 | 200 | 160 |
| தேங்காய் | 50 | 35 | 50 | 50–60 | 40–50 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 | 80 | 80–100 | 100 | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 160 | 120–200 | 120 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 20–25 | 20 | 15 |
| கறிமிளகாய் | 500 | – | 300 | 360 | 400–450 | – | 350 |
| இராசவள்ளி | 240 | 160 | 160 | 180 | 160–180 | 160 | 200 |

# மிக்ஸி பராமரிப்பு



1. அரிசி மா கெட்டியாகத் தேவைப்படும் போது அரிசியைக் கெட்டியாக அரைப்பதாலும் மிக்ஸி கெட்டு விடும்.
2. மிக்ஸி பிளேட்களை சாணை செய்யக் கூடாது. மிக்ஸி பிளேடுகள் மோட்டரின் வேகத்தைப் பொறுத்தே பொருள்களைப் பசுந்தாக அரைக்கும்.
3. மிக்ஸியின் பிளேட்கள் மழுங்கி விட்டால், கல் உப்பை ஒரு கை எடுத்து மிக்ஸியில் போட்டு ஓரிரு நிமிடங்கள் ஓட்டவும். பிளேட்கள் கூர்மையாகி விடும்.
4. சூடான பொருள்களை மிக்ஸியில் அரைக்கக் கூடாது.
5. மிக்ஸியில் அரைக்கும் போது சூடு உண்டாகிறதா என்பதைக் கவனித்து இடைவெளி விட்டு அரைக்க வேண்டும்.
6. மிக்ஸி ஓடும் போது மூடியைக் கையினால் அழுத்திக் கொள்ள வேண்டும்.
7. அரைக்கும் போது பிளேட்கள் இலேசாக உள்ளதா என்பதைக் கவனித்து இறுக்கிக் கொள்ள வேண்டும்.
8. அரைக்கும் பொருள்களுடன் பிளேட் சுலபமாகச் சுற்றக்கூடிய அளவு தண்ணீர் விட்டு அரைக்க வேண்டும். இல்லையெனில் பிளேட் உடையவோ, மோட்டர் எரியவோ நேரலாம்.
9. மிக்ஸி பொருள்களை அரைக்கும் போது இடையிடையே திறந்து பார்க்கக் கூடாது.
10. இட்லிக்கு மிக்ஸியில் புழுங்கல் அரிசி அரைக்கும்போது, இரவே ஊற வைத்துவிட்டால் மிக விரைவாக அரைத்து விடலாம். மிக்ஸி சூடாவதையும் தடுக்கலாம்.

## நாளை

மார்கழி -07
புதன்கிழமை 23.12.2015
திதி: திரயோதசி மு.இ.08.04
நட்சத்திரம்: கார்த்திகை பி.ப.02.39
ராகுகாலம்: 12.25-01.55 வரை
சுபநேரம்: 04.55- 06.25 வரை
பிரதோஷ விரதம்

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 600 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 300 | 200 | - |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | - | - |
| பாரை | 450 | 500 | - | 500 | 400 | 400 |
| சுறா | 500 | 600 | - | 600 | 1000 | - |
| சீலா | 250 | 400 | 400 | 400 | 250 | - |
| விளை | 650 | 500 | 400 | 450 | 300 | 400 |
| முரல் | 250 | 350 | 300 | 300 | 400 | - |
| கும்பிளா | 300 | 300 | 300 | 400 | - | 200 |
| கிழாக்கன் | 400 | 800 | 300 | 400 | - | - |
| ஒரா | 300 | 450 | 300 | 400 | - | 350 |
| திரளி | 200 | 300 | 100 | 350 | 150 | - |
| நகரை | 150 | 250 | 100 | 300 | 200 | 300 |
| சூடை | 150 | 150 | 100 | 120 | 200 | - |
| ஒட்டி | 200 | 150 | 200 | 300 | 300 | 300 |
| திருக்கை | 150 | 350 | - | 300 | 300 | - |
| பாலை | 250 | 200 | - | 400 | 350 | - |
| வாளை | 100 | 150 | 200 | 350 | 250 | 200 |
| சொய் | 100 | 150 | 80 | 100 | 50 | - |
| மதனம் | 150 | 200 | 300 | 250 | - | 300 |


# இது புதுசு



## புதிய டொப்கள்

பெண்களுக்கான ஆடை வகைகளில் டொப்கள் பிரபலமானவை. அவை பலவித வடிவமைப்புக்களில் கிடைக்கின்றன. இது பதின்ம வயதுப் பெண்களுக்கு எற்ற ஆடைவகையாகும். சில டொப்களை கவுணாகவும் அணியலாம். நாகரீகமான இவை 1500ரூபா முதல் 2000 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன. இவை மெல்லிய உடல்வாகுள்ள பெண் கள் அணியத் தகுந்தவையாகும்.






# சோயா முறுக்கு

**தேவையானவை:**
பச்சை அரிசி மா - 3 கப்
சோயா மா - 1 கப்
பாசிப்பருப்பு - 3 கப்
வறுத்து அரைத்த உளுத்தம் மா - கால் கப்
பெருங்காயம் - தேவையான அளவு
உப்பு, எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை:**
அரித்தெடுத்த மாவுகளுடன் மற்றப் பொருள்களைப் போட்டு நீர் தெளித்து நன்கு பிசையவும். காய்ந்த எண்ணெயில் முறுக்கு அச்சில் மாவைப் போட்டுப் பிழியவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணத்தில் காகில்ஸ் வங்கியை திறந்து வைத்தார் ஜனாதிபதி மைத்திரி



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காகில்ஸ் சதுக்கம் மற்றும் யாழ். காகில்ஸ் வங்கி என்பவற்றை திறந்து வைத்தார். இதன் மூலம் வடக்குக்கான காகில்ஸின் முதலீடு ரூ.1.3 பில்லியனை எட்டியது.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் சொகுசு குடும்ப பொழுதுபோக்குத் தளமான காகில்ஸ் சதுக்கம் மற்றும் யாழ். காகில்ஸ் வங்கியின் வட பிராந்திய தலைமையகம் என்பவற்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திறந்து வைத்தார்.

காகில்ஸ் (சிலோன்) பிஎல்சி இனது பிரதித் தலைவர் ரஞ்சித் பேஜ் குறிப்பிடுகையில், இந்தப் புதிய கட்டடம் யாழ். நகரின் தோற்றத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை என்பதுடன், வடக்கின் புதிய சமாதான யுகம் மற்றும் அங்கு வாழ் மக்களின் சுபீட்சமான வாழ்வு என்பவற்றை வெளிப்படுத்தும் அடையாளச் சின்னமாகவும் திகழும் என்று குறிப்பிட்டார்.

ரூ. 890 மில்லியனுக்கும் அதிகமான முதலீட்டில் உருவாக்கப்பட்டுள்ள காகில்ஸ் சதுக்கத்தின் மூலம் வட பிரதேச இளைஞர்களுக்கும் குடும்பத்தினருக்கும் உலகத் தரத்திலான பொழுதுபோக்கு வசதிகளைப் பெற்றுத்தர நாம் எதிர்பார்த்துள்ளோம்.

வட பிரதேசத்தில் முறையானதும் தொடர்ச்சியானதுமான பொருளாதார அபிவிருத்தியை உருவாக்கல் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் ஆகிய அரசினதும் ஜனாதிபதியினதும் நோக்கங்களுக்கு உதவுவதே எமது எதிர்பார்ப்பாகும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த வணிகக் கட்டடமானது 4 தளங்களைக் கொண்டிருப்பதுடன், மொத்தமாக 74,000 சதுர அடிகள் தரைப் பரப்பளவைக் கொண்டுள்ளது. காகில்ஸ் சதுக்கமானது சுப்பர் மார்க்கட், சொப்பிங் தொகுதிகள், காகில்ஸ் வங்கி, சர்வதேச உணவகமான கே.எவ்.சி. அமைந்துள்ள புட் கோர்ட், 3-டி சினிமா அனுபவத்தைப் பெற்றுத்தரும் தியேட்டர் சகிதம் மூன்று திரைகள் அடங்கிய பல் திரைத் தியேட்டர், அடித்தள கார் பார்க் என்பவற்றைத் தன்னகத்தே கொண்டது.

இலங்கையில் வெகு வேகமாக விரிவடைந்து வரும் காகில்ஸ் வங்கி வலையமைப்பில் யாழ்ப்பாண காகில்ஸ் வங்கி 10 ஆவது கிளையாகும்.

**வணிகம்**

வட மாகாண பிரதேச மக்களுக்கு வங்கியியல் துறையில் ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்கி வைக்கும் நோக்கத்தின் முதற்படியாக காகில்ஸ் வங்கி வவுனியாவில் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்தது. யாழ்ப்பாணக் கிளையைத் தொடர்ந்து விரைவில் சுன்னாகத்தில் தனது 11ஆவது கிளையைத் திறக்கவுள்ளது.

காகில்ஸ் வங்கியின் நோக்கம் வாடிக்கையாளர்களுக்கு எளிய, அதேநேரம் புத்தாக்கமுள்ள, கவர்ச்சிகரமான உற்பத்திகளை அறிமுகம் செய்து அவர்களுக்கு தொடர்ச்சியான சேவையை வழங்கி அவர்களது வங்கித் தேவைகளை இலகுவாக்குவதாகும்.

காகில்ஸ் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரேம்குமார், எமது யாழ்ப்பாணத்தின் வருகை இங்குள்ள மக்களுக்கு அதிசிறந்த வங்கிச் சேவையை வழங்கி எமக்கிடையிலான நெருக்கத்தை அதிகரிக்க உதவியுள்ளது என்று குறிப்பிட்டார். விழாவின்போது அவர் மேலும் தெரிவிக்கையில், அபிவிருத்தியை ஊக்குவிக்கும் அதேவேளை அனைத்து சமூகத்தினர் மற்றும் வருமானப் பிரிவினரது நிதித் தேவைகளை நிறைவு செய்யும் வங்கிக் கலாசாரமொன்றைநாம்கட்டியெழுப்ப எதிர்பார்ப்பதுடன், எமது குறுகிய காலபிரசன்னத்திலேயே அதற்காக நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளோம் என்று குறிப்பிட்டார்.

2009ஆம் ஆண்டு முதல் காகில்ஸ் ரூ.1.3 பில்லியனுக்கு மேல் வட மாகாணத்தில் முதலீடு செய்துள்ளது. அதன் ஊடாக மானிப்பாய், கன்னாதிட்டி வீதி - யாழ்ப்பாணம், வவுனியா, நெல்லியடி, சுன்னாகம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி நகரங்களில் அமைந்துள்ள காகில்ஸ் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டன. அத்துடன் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் விவசாயிகளிடமிருந்து உற்பத்திகளைப் பெற்றுக் கொள்வதற்காகச் சேகரிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டன. இந்த நடவடிக்கையில் தற்பொழுது வட பிரதேசத்திலுள்ள 2000க்கு மேற்பட்ட பண்ணையாளர்கள் மற்றும் மரக்கறி செய்கையாளர்கள் இணைந்து கொண்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.



## நுட்பம்



## புதிய அம்சங்களுடன் அன்ரொயிட் 6.1

கூகுள் நிறுவனம் அண்மையில் அன்ரொயிட் மஸ்மலோஸ் எனும் தனது இயங்குதளத்தின் ஆறாவது பிரதான பதிப்பை வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் தற்போது இதன் மற்றுமொரு பதிப்பாக அன்ரொயிட் 6.1 இனை அடுத்த வருடம் ஜுன் மாதமளவில் அறிமுகம் செய்ய தீர்மானித்துள்ளது.

இந்தப் பதிப்பில் ஸ்கிரீன் மல்டி டாஸ்க்கிங் எனும் புதிய அம்சத்தை உள்ளடக்கவுள்ளனர்.

இதன் மூலம் ஒன்றுக்கு மேற்பட்ட திரையில் வெவ்வேறு அப்பிளிக்கேன்களில் பணியாற்றக்கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தவிர மேலும் சில அம்சங்கள் உள்ளடக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவை தொடர்பான தகவல்கள் கூடிய விரைவில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## மெசேஜிங் மாயம்


புதிதாக ஒரு மெசேஜிங் செயலி அறிமுகமாகி இருக்கிறது. "டிரைப்.பிஎம்" எனும் அந்த செயலியை, இன்னொரு மெசேஜிங் செயலி என அலட்சியம் செய்து ஒதுக்கிவிட முடியாமல் புதுமையான அம்சங்களுடன் வந்திருப்பது தான் கவனத்தை ஈர்க்கிறது.

வாக்கி-டாக்கியின் மறு வடிவம் என்று சொல்லப்படும் இந்தச் செயலியை மிக எளிதாக, ஒற்றை விரலால் இயக்கலாமாம். இதில் மெசேஜ் அனுப்ப கீபோர்டில் கை வைக்கும் தேவையும் கிடையாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எப்படி என்றால், செயலி மூலம் தொடர்புகொள்ள வேண்டியவரின் புகைப்படப் பகுதியை கிளிக் செய்து அப்படியே அழுத்திக்கொண்டிருந்தால் போதும், நாம் சொல்ல வேண்டிய செய்தியைப் பதிவு செய்து விடலாம். அதன் பிறகு "அனுப்பு" பட்டனை அழுத்தினால் போதும் அந்தச் செய்தி வீடியோ வடிவில் சென்றடையும்.

செய்தியை அனுப்பும் முன்னர் எம்முடைய தோற்றம் எப்படி இருக்கிறது என முன்னோட்டம் பார்ப்பதற்கான கண்ணாடி வசதியும் செயலியில் இருக்கிறது. வீடியோ செய்தியைப் பெறுபவர் அதிலேயே கிளிக் செய்து பதில் செய்தியையும் அனுப்பலாம்.

தொடர்புப் பட்டியலில் உள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல் குழுவில் உள்ள அனைவருக்கும் செய்தி அனுப்ப முடியும் என்பதால் இந்த மெசேஜிங் செயலியைப் பல விதங்களில் பயன்படுத்தலாம்.

அனுப்பும் செய்திகளைச் சேமித்து வைக்கும் வசதியும் இதில் இருக்கிறது. உலகின் எந்தப் பகுதியிலும் செயற்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்ட்ராய்டு மற்றும் ஐபோன் இரண்டிலும் இது அறிமுகமாகி இருக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீக்குச்சிகளுக்கான மருந்துகளை இறக்குமதி செய்வதில் இழுபறி

கொழும்பு, டிசெ, 22
தீக்குச்சிகளுக்கான மருந்துகளை இறக்குமதி செய்வதில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தீப்பெட்டிக்குப் பரவலாகத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இந்த நிலையில் தீப்பெட்டிக்கு நிலவும் தட்டுப்பாடு விரைவில் தீர்க்கப்படும் என நுகர்வோர் பாவனை அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாகத் தீப்பெட்டிக்கு கடும் தட்டுப்பாடு நிலவிவருகின்றது. ஒரு தீப்பெட்டி 15 ரூபா முதல் 20 ரூபா வரை விற்கப்படுவதாகவும், அதிலும் குறித்த தொகைக்கு மேல் பொருட்களை கொள்வனவு செய்பவர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் மாத்திரமே தீப்பெட்டிகள் விற்கப்படுவதாகவும் நுகர்வோர் சுட்டிக் காட்டியிருந்தனர்.

இந்த நிலைமை யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி மலையகம், கொழும்பு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் ஏற்பட்டிருந்தது.

இது தொடர்பில் நுகர்வோர் பாவனை அதிகார சபையினரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

தீக்குச்சி தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மருந்துப்பொருள்களை இறக்குமதி செய்வதில் நெருக்கடி நிலை தோன்றியுள்ளது. அதனால் நாட ளாவிய ரீதியில் தீப்பெட்டிக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விரைவில் இந்த நிலைமை சீராக்கப்படும் – என்றனர்.

இருந்தபோதிலும் விலை அதிகரித்து விற்பதற்கும் நுகர்வோர் பாவனை அதிகார சபைக்கும் தொடர்பில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

(த-10)

## செவிசாய்க்காவிடின் மீண்டும் போராட்டத்தில் குதிப்போம்

*அரசை எச்சரிக்கின்றது மருத்துவர் சங்கம்*

கொழும்பு, டிசெ.22
தமது கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்காவிடின் தாங்கள் மீண்டும் போராட்டத்தில் குதிக்கத் தயங்கப்போவதில்லையென அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் விசேட நிறைவேற்றுக் குழுக் கூட்டம் சங்கத்தின் செயலாளர் நாலந்த ஹேரத் தலைமையில் நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளதாவது:

வரவு–செலவுத் திட்டத்தில் மருத்துவர்களின் மானியங்கள் குறைக்கப்பட்டன. அதனை மீள் பரிசீலனை செய்யுமாறு நாங்கள் கோரிக்கை விடுத்திருந்தோம். மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி மற்றும் இலங்கை இந்திய பொருளாதார உடன்படிக்கை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் எமது யோசனைகளை முன்வைத்துள்ளோம். இவற்றை அரசு தட்டிக்கழித்துச் செயற்பட எத்தனித்தால், நாங்கள் மீண்டும் போராட்டத்தில் குதிப்போம்– என்றார்.

(த-சி)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் இராஜேஸ்வரன் (கனடா)

(ஓய்வுபெற்ற ஊழியர் நீர்வேலி ப.நோ.கூ.சங்கம்)



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராஜேஸ்வரன் (ஓய்வு பெற்ற ஊழியர் நீர்வேலி ப.நோ. கூ.சங்கம்) 19.12.2015 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான சுப்பிரமணியம்- பாக்கியம் தம் பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற வர்களான சங்கீதபூஷணம் செல்லத்துரை - இரத்தினம் (உரும்பிராய்) தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வமணியின் (மணி -கனடா) அன்புக் கணவரும், காண்டீபன் (கனடா), கிரிகரன்(கனடா) ஆகியோ ரின் அன்புத் தந்தையும், கோபிகாவின் (கனடா) அன்பு மாமனாரும், இராஜினியின் (சுவிஸ்) அன்புச் சகோதரனும், ஜீவ மோகனின் (சுவிஸ்) மைத்துனரும், அனிக்ஷா, அன்றிக்கா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2015) செவ்வாய்க்கிழமை கனடாவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்: திருமதி புஸ்பா மகேந்திரன்
(சகோதரி)
0016 4795 56616
மனைவி (கனடா)

கந்தசாமி கோயிலடி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
(68134)
(11,16)

# மரண அறிவித்தல்

## தம்பிப்பிள்ளை இராசரத்தினம்

(ஓய்வு பெற்ற தபால் ஊழியர் கூழாவடி, ஆனைக்கோட்டை)



நல்லூரைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டை, இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை இராசரத்தினம் 18.12.2015 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை தங்கம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா கமலம்மா தம்பதியரின் மருமகனும், பத்மாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசகுணமணி மற்றும் கனகராணி, பத்மாவதி, காலஞ்சென்ற கமலாவதி மற்றும் திலகவதி குணரத்தினம்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கௌசலாதேவியின் (பிரான்ஸ்) மைத்துனரும், சிவதர்சினி (கனடா), சிவரூபன், சிவநீதன்(பிரான்ஸ்), சிவதாசன், சிவாணி(ஆசிரியர் - யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் ஜோகேந்திரன்(கனடா), ஜெயந்திமலர், லோஜினி (பிரான்ஸ்), சுகுமார்(ஆசிரியர் - யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின்பாசமிகு மாமனாரும் அக்சயா, அபிநயன், வினுஜன், ஆருஜன், வேணுஜன், சானுகா, சஷ்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும், கஜானந்தன், ஜனுசியா, சுபவீனா, சுஜீபன், ஹரி, ஹரிணி ஆகியோரின் பாசமிகு பெரிய தகப்பனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை(23.12.2015) புதன்கிழமை காலை 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் இடம் பெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பரராசசேகரப்பிள்ளையார் கோயில் வாயில்
இணுவில் தெற்கு,
இணுவில்.
(66133)
(14,16)

தகவல்:
குடும்பத்தினர்,
சகோதரர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசலட்சுமி இரட்ணராஜா



இல.49 பெனிக்கோஸ் லேன், கச்சேரியைப் பிறப்பிடமாகவும், இல.21 சந்தன மாதா கோயில் 2ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி இரட்ணராஜா நேற்று (2015.12.21) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - இராசம்மா தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்ற இரட்ணராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - அமிர்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சிறிறஞ்சினி (St.John's College), றஞ்சிற் (Global Hardwares) ஆகியோரின் அன்புத் தாயும், விஜயபதி, லக்ஷி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பேள் பிரியதர்சினி, பிரசாத், றெபோன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், துரைராஜா (கனடா), காலஞ்சென்ற தனபால சிங்கம் ஆகியோரின் சகோதரியும், வில்வராஜா, ரட்ணராணி, வில்வராணி, யோகராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (2015.12.22) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சென் ஜோன்ஸ் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.21, சந்தனமாதா கோயில் வீதி,
2ஆம் ஒழுங்கை சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
(68138)
(11,16,17,18)

தகவல்:
குடும்பத்தினர்.
077 667 9401
077 938 4262

## திருமதி செல்லக்கண்டு இராமலிங்கம்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், நாவற்குழியை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி செல்லக்கண்டு இராமலிங்கம் 21.12.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சின்னப்பு இராமலிங்கத்தின் மனைவியும், செல்வநாயகி, நவமணி (வைத்தியர்), பரமேஸ்வரி, நிர்மலாதேவி, வசந்தாதேவி (ஓய்வு நிலை அதிபர்- யா/நாவற்குழி ம.வி),சித்திராதேவி (ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும், அப்புத்துரை, காலஞ்சென்றவர்களான விசுவரட்ணம், வீரசிங்கம் மற்றும் நடராசா, மேகலிங்கம்,ஜெயபாலன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், ஸ்ரீநாதன் (கொலண்ட்), நந்தினி, ஸ்ரீசங்கர், சிவசக்தி, சிவகுமார், யாழினி, யாழ்வேந்தன் (லண்டன்), தர்மினி (லண்டன்), தயாபரன் (தயா பான்சி), தர்மசீலன் (சுகாதாரப் பகுதி), தனுசுயா, சஜீவன் (இலங்கை வங்கி), நிரோந்திபன் (சிங்கப்பூர்), மலரவன் (கொமர்சல் வங்கி), ஜனனி (ஜேர்மனி), ராஜீவன் (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2015) செவ்வாய்க்கிழமை அவரது இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் நாவற்குழி பிணமுருங்கை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாடசாலை வீதி,
நாவற்குழி, கைதடி.
(68140)
(11,15,17,18)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோத்தாவை

தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் ரூபாவின் பெறுமதி குறைவடைவதைத் தடுப்பதற்கு நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவை அமெரிக்கத் திறைசேரியின் செயலாளராக நியமிக்க வேண்டும். அப்போது இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிக்கும். நாட்டை மீட்டெடுத்த இராணுவத்தினர் சர்வதேச மட்டத்திலும், உள்நாட்டிலும் காட்டிக்கொடுக்கப்படுகின்றனர். ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கொலைத் தொடர்பில் தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுவரும் கேணல் சம்மி கருணாரத்ன, கேணல் பிரபோத வீரசேகர, சார்ஜன்ட் மேஜர் உபசேன, கோப்ரல் ரூபசேன ஆகிய நால்வரும் கொலையுடன் தொடர்புடையவர்கள் அல்லர். நான் சிறையில் அவர்களைச் சந்தித்தபோது அவர்கள் இதனைக் கூறினர்.

அவர்கள் சாட்சியமளிப்பதற்கான ஆவணத்தைத் தானே தயாரித்ததாக பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் சானி அபேகுணவர்தன தெரிவித்திருந்தார்.

எனவே, இவர்களைத் தடுத்துவைத்து விசாரணை செய்வதன் மூலம் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் கோத்தாபயவை முடக்கப் பார்க்கின்றனர். உண்மையான குற்றவாளியைப் பாதுகாக்க முயற்சிக்கின்றமை வெளிப்படையாக விளங்குகிறது. தனிப்பட்ட அரசியல் விடயங்களுக்காக பழிவாங்குவதற்காக முன்னைய சந்திரிகாவின் அரசும் இது போன்றே செயற்பட்டது என்பதை மறந்துவிடக்கூடாது- என்றார்.

(த-சி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராஜேஸ்வரி நடேசலிங்கம்

(சங்கானை)

பிறப்பு 1954.09.16

மறைவு 2015.12.21



**இணுவிலைப் பிறப்பிடமாகவும் சங்கானை அரசடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி நடேசலிங்கம் நேற்று (21.12.2015) திங்கட்கிழமை காலமானார்.**

**அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் பூரணம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கேஸ்வரி தம்பதியரின் மருமகளும் நடேசலிங்கத்தின் (ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ் - சங்கானை) அன்பு மனைவியும் ஞானேஸ்வரி யின் (ஆசிரியர் - யா/ சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்ப பாடசாலை) சகோதரியும் காலஞ்சென்றவர்களான கனகராஜா, விமலராசா ஆகியோரின் மைத்துனியும் ஜெகதா, ஜெகதீபன்** (Partner Global LifeStyle Lanka), **ஜெகவதனா ஆகியோரின் பாசமிகு தாயாரும் கோபிநாத்** (Regional Manager Union Assurance - Pointpetro) **தனுஷா** (IDM Nations Campus - Chankanai), **பிரகலாதன் (உரிமையாளர் -** Everest Electricals **- பளை) ஆகியோரின் மாமியாரும் சரவணபவன் (சுவிஸ்), மதியழகன் (யாழ். போதனா வைத்தியசாலை), கஜநேசன் (லண்டன்), பிரபாஜினி (கனடா) ஆகியோரின் சித்தியும் கலெஷ்சனா, புவிதரன் ஆகியோரின் பெரியம்மாவும் தரண்ஜா, அபிஷனா, லக்ஸ்மீரா, யஸ்வினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.12.2015) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.**

தகவல் : **குடும்பத்தினர்.**

(68149)

## மரண அறிவித்தல்

### சுதாகர் லதுசாயினி (லது)

(இணுவில் மத்திய கல்லூரி மாணவி-தரம்09)

**தோற்றம்: 28.03.2001** **மறைவு: 21.12.2015**



கோண்டாவில் மேற்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுதாகர் - லதுசாயினி நேற்று (21.12.2015) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் சுதாகர் கலைவாணி தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், லஜிந்தினியின் அன்புச் சகோதரியும், செல்வரத்தினம்-கண்மணி, சிவலிங்கம்-மோகனா தம்பதியரின் அன்பு பேர்த்தியும், சுமைலி, சுவர்ணா (பிரான்ஸ்), சுமணா (ஜேர்மனி), தமயந்தி (பிரான்ஸ்), கலையரசி (பெல்ஜியம்), காலஞ்சென்ற சிறிதரன் (சுவிஸ்), பிரபாகரன் (கனடா), ஜஜீதரன் (கனடா) ஆகியோரின் மரு மகளும், காண்டீபனின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2015) செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கே.கே.எஸ். வீதி,**
**கோண்டாவில் மேற்கு.**

(68151) (10.17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## லசந்த

இராணுவத்தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடமும் விசாரணை நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் நாள்களில் சரத் பொன்சேகாவிடமும் விசாரணை நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

லசந்த விக்கிரமதுங்க, 2009ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட போது சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக கடமையாற்றியிருந்தார்.

கொலையுண்ட குறித்த பகுதி அதி உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அந்தப் பகுதிக்கு அப்போது பிரிகேடியர் கெப்பிற்றிப்பொல பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளராகக் கடமையாற்றிய அமல் கருணாசேகர மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சாட்சியங்களை மறைத்துள்ளார் என்று அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

(த)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சித்திரா சந்திரகுமாரன்

தோற்றம் - 1965.09.04
மறைவு - 2015.12.21



**அம்மனடி, வதிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சித்திரா சந்திரகுமாரன் நேற்று (21.12.2015) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.**

**அன்னார் காலஞ்சென்ற தனபாலசிங்கம் (ஓய்வு பெற்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்) - திரவியநாயகம் தம்பதிகளின் ஏக புத்திரியும் கதிரமலை சந்திரகுமாரன் அவர்களின் அன்பு மனைவியும் ஹரிகிருஷ்ணியின் (மாணவி - நெல்லியடி மத்திய கல்லூரி) பாசமிகு தாயாரும் லயன் பொ.கதிரமலை - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகளும் சூரியகுமாரன், உதயகுமாரன், நந்தகுமாரன், மீனலோஜினி காலஞ்சென்ற புஸ்பலோஜினி ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற நவரத்தினத்தின் மருமகளும் சரஸ்வதியின் பெறாமகளுமாவார்.**

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2015) செவ்வாய்க்கிழமை புதுவளவு, நெல்லியடியில் (லயன் பொ. கதிரமலை அவர்களின் இல்லத்தில்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

தகவல் : **க. சந்திரகுமாரன் (கணவர்)**

(c/15888)


## தாஜுதீன்

இருந்து தப்பிவந்த திஸ்ஸபின்னர் மகிந்தவின் நம்பிக்கைக்குரிய ஒருவராக மாறினார். அத்துடன் மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவிலும் இணைக்கப்பட்டார்.

மகிந்தவின் குடும்பப் பாதுகாப்பைக் கண்காணிக்கும் பணிகளை மேற்கொண்ட அவர், அந்தக் குடும்பத்துக்கு எதிரானவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளும் குழுவின் தலைவராகவும் செயற்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-சி)

## செல்லையா கந்தசாமி



ஆவரங்கால் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட செல்லையா கந்தசாமி கடந்த 17.12.2015 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி- வள்ளியம்மை தம்பதிய ரின் மருமகனும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், சறோஜினிதேவி (கனடா) திருவருட் செல் வன் (ஆசிரியர்), சிவனருட்செல்வன் ஆகியோரின் பாசமிகு தந்தை யும், சிவசுப்பிரமணியம் (கனடா), வதனரூபி, கவிதா ஆகியோரின் அன்பு மாமனும், பிரசாத் (கனடா), நிருஷாத் (கனடா), திருவர்த்தனன், ஆருத் திரன், சானுகா, லக்ஷியா ஆகியோரின் பேரனும், காலஞ் சென்ற நல்லம்மா, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் சகோதர னும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், சுப்பிர மணியம், கனகரத்தினம், பொன்னம்பலம், இராசமணி, விசுவரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.12.2015) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மகன்-க.திருவருட்செல்வன்**
**(ஆசிரியர்)**
**(யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்)**

**ஆவரங்கால் கிழக்கு,**
**புத்தூர்.**

(C/15883) (10.17)

## துரைசாமி சந்திரா (பத்தர்)

**தோற்றம்:16 ஆவணி 1953** **மறைவு:17 மார்கழி 2015**



யாழ். கல்வியங்காட்டினை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட துரைசாமி சந்திரா அவர்கள் 17.12.2015 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான துரைசாமி-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பராணி அவர்களின் அன் புக் கணவரும், டெனின் மயூரன், தன்யா ரேனுகா (ஜேர்மனி) அவர்களின் பாசமிகு தந்தையும், மகேந்திரா, பாலேந்திரா (லண் டன்), குலேந்திரன் (ஜேர்மனி), ஜெயராணி (ஜேர்மனி), குணேந்திரா ஆகியோரின் அன்பு சகோதரனும், கௌரிசங்கர், புஸ்பமலர், புஸ்பதேவி, புஸ்பலதா (பிரான்ஸ்), தயாளன், ஜெய ஈஸ்வரி, அனிதா (லண்டன்), சிவகாந்தரூபி (ஜேர்மனி), வசந்தாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரன்சிதராணி, காலஞ்சென்ற விவேகானந்தன் மற்றும் தவேஸ்வரன், சின் னத்தம்பி (நவி - பிரான்ஸ்) ஆகியோரின் சகலரும், கார்த்திகா, நிரோஷன், நிரோசிகா, பிரகதீஸ். சாருதா, லக்ஸ்மி (லண்டன்), சன்ஹரன் (லண்டன்), நிவேதா (ஜேர்மனி), பகீரதி (ஜேர்மனி), ஸ்ரீராகவி(ஜேர்மனி), துவாரகன், சிந்துகா ஆகியோரின் அன்பு சித்தப்பாவும் பிரசாத், ரங்கன் லால் (பிரான்ஸ்), கார்த்திகா (பிரான்ஸ்), அபிராமி (சுவிஸ்), வாகீசன் (லண்டன்), காயத்திரி, கார்த்தீபன் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும், சத்தி யன், கோபிதரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை (23.12.2015) புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : **புஸ்பமலர்**
(077902543[illegible])

(68150)(10.17)

## 27 அரசியல்

அடுத்து, தடுத்து வைக்கப்பட்டுள்ள 8 சிங்கள கைதிகள் தொடர்பான மேலதிக புலனாய்வு அறிக்கையை எதிர்வரும் ஜனவரி 4ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பிரான்ஸிலுள்ள ரூபன் என்பவருடன் தொலைப்பேசியமை தொடர்பில் குறித்த எட்டுக் கைதிகளும் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று கைதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்குறுதி

மக்களின் பிரச்சினையை நேரில் வந்து பார்வையிடுமாறும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்திருந்தார். இது தொடர்பில், வலி. வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கம் விடுத்துள்ள அறிக் கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"நத்தார் தினத்தை முன்னிட்டு யாழ்ப் பாணம் வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 25 வருடங்களாக முகாம்களில் வாழும் மக்களை நேரில் சந்தித்தார். இதன் போது அவர் இனவாத அரசியல்வாதிகளுக்கு மக்களின் துயர் பற்றி அறைகூவல் விடுத்து இடம் பெயர்ந்த மக்களின் பிரச்சினையை ஆறு மாத காலத்துக்குள் முன்பாக முற்றாகத் தீர்த்து வைத்து மீள குடியேற்றுவதாகத் தெரிவித்துள்ளார். இதனை நாங்கள் தேவ வாக்காக நம்புகிறோம்.

இதுவரை காலமும் இருந்த அரசியல் தலைவர்கள் வலி. வடக்கு மக்களின் பிரச்சினைகளை நேரடியாக அணுகிய தில்லை. நாங்கள் கடந்த காலங்களில் பலமுறை மனுக்கள் கையளித்திருந்தோம். ஆனால் அவர்கள் எமக்கு இடையூறுகளை ஏற்படுத்தினார்களே தவிர எந்தவித தீர்வும் தரவில்லை. நல் லாட்சி அரசு தமிழ் மக்களின் ஆதரவுடன் பதவியேற்று ஒருவருடம் நிறைவடையவுள்ளது.

எமது மக்கள், இந்த அரசும் காணி விடுவிப்பு விடயத்தில் இழுத்தடிப்புச் செய்கின்றது என்று தெரிவித்து, கோரிக்கைகளை முன்வைத்து அறவழிப் போராட்டம் செய்ய முற்பட்டனர். இதன் போது எமது அமைப்பு, நல்லாட்சி அரசு விடுவிப்புக்கு நடவடிக்கை எடுக்கும் என்று மக்களைச் சாந்திப்படுத்தினோம்.

மக்களின் அவலங்களை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர், ஜனாதிபதி உரையாற்றிய போது அவர் முகத்தில் கவலை - கோபம் தாண்டவம் ஆடியதை உணர்ந்தோம். இந்த நிலையில் கடந்த தலைவர்களைப் போல் ஏமாற்றாமல் உரிய காலத்துக்குள் மீள்குடியேற்றப் பணிகளை முடித்துத் தருவார் நல்லாட்சி ஜனாதிபதி என்று நம்புகிறோம் - என்று அந்த அறிக்கையில் உள்ளது.

(த-5-10)

## முதலமைச்சர்

சிவஞானம் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் தேசிய நத்தார் தின நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பங்கெடுக்குமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று அவைத் தலைவர் குற்றம் சுமத்தினார்.

இதன்போது, வடக்கு மாகாண முதலமைச்சருக்கு அழைப்பு அனுப்பப்பட்டு அவர் பங்கேற்றுள்ளாரே என்று அவைத் தலைவரிடம் கேட்டபோது, வடக்கு மாகாண முதலமைச்சர் மாத்திரம் வடக்கு மாகாண சபையிலலையே அமைச்சர்கள் - உறுப்பினர்களும் வடக்கு மாகாண சபையினரே. முதலமைச்சருக்கு அழைப்பு அனுப்பப்படத்தான் வேண்டும். அதற்காக, ஏனையோருக்கு அழைக்கக் கூடாது என்றில்லையே.

ஆகக் குறைந்தது யாழ்.மாவட்ட உறுப்பினர்களுக்காவது, அதிலும் கிறிஸ்தவ உறுப்பினர்களுக்காவது அழைப்பு அனுப்பியிருக்கலாம். இது மத்திய அரசின் அதிகாரிகளின் தவறா தெரியவில்லை. ஆனாலும், அழைக் காமல்விட்டது தவறு என்று சுட்டிக்காட்டினார்.

(த-5)

**கணினி திருத்திக்கொடுக்கப்படும்**

கணினி பாகங்கள் வீடு வந்து உடன் ⇨ திருத்திக்கொடுக்கப்படும். ⇦

- Softweare கொடுக்கப்படும்.
- Antivirus ஒரு வருட உத்தரவாதத்துடன் கொடுக்கப்படும்.

T.P. No: 077 706 4151

**அந்தியேட்டிக் கிரியையும் சபிண்டீகரண அழைப்பும்**



அல்வாய் தெற்கு, வெளிச் சீமாவைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி **வேலுப்பிள்ளை பாலபரமேஸ்வரி**

26.11.2015 கொழும்பில் சிவபதமடைந்தார். அவரது அந்தியேட்டிக்கிரியை சுப்பர் மடம், எரிஞ்சம்மன் கோவில் மடத்தில் 23.12.2015 அன்று நடைபெறும். சபிண்டீக் கிரியைகள் அவரது விருப்புக்கமைய

தோற்றம் 01.01.1952 மறைவு 26.11.2015

கிளி.ஜெயந்தி நகர் மகாதேவசுவாமிகளது ஆச்சிரமத்தில் 26.12.2015 அன்று நடைபெறும்.

தொடர்ந்து நடைபெறும் பஜனையிலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

சோ.கிருபாகரன்
(ரவி, சாந்திபெறாமக்கள், பாலமகேஸ்வரி சகோதரி)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2715 திகதி 21.12.2015
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 01 45 50 52 Z
போனஸ் இல: 34
புதன்கிழமை ஜக்பொட்: ரூ. 16,161,950/-

**SAAMSON** இன் **ஆங்கில, சிங்கள** பயிற்சிநெறிகள்.
Experts in Language Training

O/L எழுதியோர், தொழில்புரிவோர், இளைஞர் யுவதிகள், ஆசிரியர்கள், வயதுவந்தோர் இணையமுடியும்!

சிங்கள வகுப்புகள் (சனி.ஞாயிறு) ஆரம்பம்-26.12.2015 மாலை 03.00

சாம்சனின் 3 மாத ஆங்கில வகுப்புகளுக்கான (சனி,ஞாயிறு) பதிவுகள் ஆரம்பமாகியுள்ளன இம்முறை O/L எழுதியோர், இளைஞர் யுவதிகள் தொழில்புரிவோர் இணையமுடியும்.

பதிவு செய்யவேண்டிய இறுதித் திகதி 27.12.2015

ஒவ்வொரு ஆங்கில பிரிவுகளிலும் 20 பேருக்கு மட்டுமே அனுமதி உண்டு.

SAAMSON Experts in Language Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

**வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம்**
**வரவு செலவுத் திட்டம் - 2016**

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைக் கட்டளைச் சட்டத்தின் 168 ஆம் பிரிவிற்கிணங்க வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப் பட்டு 22.12.2015 ஆம் திகதி தொடக்கம் 28.12.2015 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்திலும், சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலகங்களிலும், சுன்னாகம், உடுவில், ஏழாலை பொது நூலகங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகின்றேன்.

**தியாகராஜா தியாகச்சந்திரன்**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு, பிரதேச சபை,**
**சுன்னாகம்.**
**22.12.2015**

(C/15879) (16.17)

**வாடகைக்கு**

நல்லூர் பகுதியில் அரச பணிபுரியும் பெண்கள் இருவருக்கு சமையல்அறை வசதியுடன் கூடிய அறை வாடகைக்கு விடப்படும். முற்பணம் எதிர்பார்க்கப் படும். **071 4620 806**
(68041)

**பெண் வரவேற்பாளர்** தொடர்பு: 0777 302 882

அலுவலகம் ஒன்றுக்கு நாகரிகமாகப் பேசத்தெரிந்த நல்ல தொடர்பாடல் திறனுடைய பெண் வரவேற்பாளர் அடிப்படை ஆங்கில கணினி அறிவுடன் தேவை. முன் அனுபவம் உள்ளவர்க்கு குறைந்தபட்சம் 10,000/= வழங்கப்படும். யாழ் நகருக்கு அருகே வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

**தவறிவிட்டது**

11/2, விவசாயக்கந்தோர் லேன், முத்திரைச் சந்தி, நல்லூரைச் சேர்ந்த சிவநாமம் மகேஸ்வரன் ஆகிய எனது தே.அ.அ.இல 810665017 V, சாரதி அனுமதிப்பத்திரம் இல. B 1813850 ஆகியவை நாவற்குழிப் பகுதியில் (20.12.2015) தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்து டன் தொடர்பு கொள்ளவும்.
**075 4163 305**

**A/L Personal Class**

Biology / Chemistry } Theory & 37 வருட Past Papers கற்பிக்கப்படும்.

T.P. No: 076 654 1292

**தவறிவிட்டது**

கந்தையா உதயகுமார் ஆகிய எனது 670802310 V இலக்கமுடைய தே.அ. அட்டை, மோட்டார் சைக்கிள் புத்தகம் (VX - XXXX) சாரதி அனுமதிப்பத்திரம், வரிப்பத்திரம், இன்சூரன்ஸ், வெளிநாட்டு அ.அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் கோப்பாய் - நீர்வேலி றோட்டில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்பு: 076 6775073, 075 2520914

**Sky Computers (Pvt) Ltd**

O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம். TP: 021222[illegible]

Ms office 2013, Internet & E-mail, Graphic Design, ,Kids Programme, Hardware, Web Design, DTP, Computer Type Setting.

தமிழ், ஆங்கிலம், சிங்கள டைப்பிங் செய்து கொடுக்கப்படும்

89, கண்டி றோட், யாழ்ப்பாணம்.(கச்சேரிக்கு அருகாமையில்)

**31ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி அழைப்பும், நன்றி நவிலலும்**

தோற்றம் 26.04.1941 மறைவு 22.11.2015



**அமரர் பாக்கியலட்சுமி கனகரத்தினம்**

முப்பத்தோர் தினங்கள் மறைந்தனவே, அம்மா!
நீங்குமா உந்தன் பிரிவின் துயர்
அகலுமா உந்தன் பாசம், எமை
நிர்க்கதியாய் பரிதவிக்க விட்டு எங்கு சென்றீரம்மா?
எத்தனை காலங்கள் சென்றாலும்
மறக்குமா நின்தன் நினைவுகள்
"அம்மா" என்றழைக்க இனி நீங்கள் இல்லையே
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுடனும்
உங்கள் ஆசியுடனும் வாழும் குடும்பத்தினர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும், அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும், பல வழிகளில் உதவி செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (22.12.2015) செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு.

குடும்பத்தினர்.
021 222 4893

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

மண்ணில் 28.12.1946 — விண்ணில் 01.01.2015



**அமரர் சிவலிங்கம் மகாதேவன்**

திதி : துவாதசி [22.12.2015]

ஓராண்டு சென்றாலும் எம் விழிகளில்
நீர் இன்னுமே காயவில்லை அப்பா!
காலங்கள் எத்தனை சென்றாலும் - உங்கள்
எண்ணங்கள் எம் நெஞ்சில் நீங்கிவிடாது அப்பா!
நீங்கள் காட்டிய நேர்வழிப் பாதையிலேயே
நாம் எம் பயணத்தை உறுதியாய் தொடர்கின்றோம்.
உங்கள் நினைவு என்றுமே
எம் நினைவில் இருக்கும் அப்பா!
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

முருகைகபகர் கோவிலடி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிரியச் சிறுவனை அரவணைத்து கண்கலங்க வைத்த ரொனால்டோ

ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளின் தாக்குதலில் தனது பெற்றோரை இழந்து நிர்க் கதியாய் நின்ற ஹைதர் என்ற சிரியச் சிறுவனை அரவணைத்து, பார்பவர்களைக் கண்கலங்க வைத்துள்ளார் போர்த்துக்கல் அணியின் தலைவரும் ரியல் மட்ரிட் கழகத்தின் நட்சத்திர வீரருமான ரொனால்டோ.

கடந்த நவம்பர் 12ஆம் திகதி லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில் நிகழ்த்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் 44 பேர் கொல்லப்பட்டனர். இதில் மூன்று வயதுச் சிறுவனான ஹைதரின் பெற்றோரும் அடங்குகின்றனர். கால்பந்தில் ஆர்வம் கொண்ட ஹைதருக்கு ரொனால்டோ தான் ஹீரோ. இது தொடர்பாக பத்திரிக்கைகளில் செய்தி வெளியாகியது. இதனையறிந்த ரியல் மாட்ரிட் அணி ஹைதரை ரியல் மாட்ரிட் நகருக்கு விருந்தினராக அழைத்து வந்தது. அங்கு தனது ஹீரோவை (ரொனால்டோவை) நேரில் பார்த்த ஹைதர் ஆனந்தத்தில் அழ ஆரம்பித்தான். அவனை அரவணைத்த ரொனால்டோ கலங்கிய கண்களுடன் அவனுக்கு ஆறுதல் தெரிவித்தார். ஹைதரோ ரொனால்டோவை இறுக்கமாகக் கட்டித் தழுவி அழுதுகொண்டே இருந்தான். சுற்றிநின்று பார்த்தவர்களும் கண்கலங்க ஆரம்பித்தனர். இந்த வீடியோ தற்பொழுது இணையத்தில் விரைவாகப் பரவி வருகிறது. (ம)

# இலங்கைக்கு மீண்டும் பலத்த அடி கிண்ணத்தைக் கைப்பற்றியது நியூசி.



நியூசிலாந்து – இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் 5 இலக்குகள் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தித் தொடரை 2:0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது நியூசிலாந்து.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து களத்தடுப்பைத் தெரிவுசெய்ய, இலங்கை முதல் இன்னிங்ஸிற்காக சகல இலக்குகளையும் இழந்து 292 ஓட்டங்களை எட்டியது. பந்து வீச்சில் நியூசிலாந்து சார்பில், சவுத்தி மூன்று இலக்குகளையும் போல்ட், பிரேஸ் வெல் இருவரும் தலா இரு இலக்குகளையும் வாக்நெர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்துக்கு ஆரம்பம் கச்சிதமாக அமைந்தது. இருப்பினும் மத்தியவரிசை தடுமாற அந்த அணியால் 237 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. பந்துவீச்சில் சமீர ஐந்து இலக்குகளையும், கேரத், பிரதீப் இருவரும் தலா இரண்டு இலக்குகளையும், லக்மல் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

55 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை 133 ஓட்டங்களில் சுருண்டது. பந்துவீச்சில் சவுத்தி 4 இலக்குகளையும், வாக்நெர் 3 இலக்குகளையும், பிரேஸ் வெல் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

> “ 55 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை 133 ஓட்டங்களில் சுருண்டது. பந்து வீச்சில் சவுத்தி 4 இலக்குகளையும் வாக்நெர் 3 இலக்குகளையும், பிரேஸ் வெல் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ”

முதல் இன்னிங்ஸில் முன்னிலைபெற்றமை இலங்கைக்குக் கைகொடுக்க நியூசிலாந்துக்கு இலக்காக 189 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன. நியூசியின் ஆரம்ப வீரர்களான லாதம் 4 ஓட்டங்களுடனும், குப்தில் ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழக்க இலங்கைக்கு நம்பிக்கை துளிர்த்தது. விடுவதாக இல்லை வில்லியம்சன். தனித்து நின்று பந்தாடினார் இலங்கை வீரர்களை. ரெய்லரும் மக்கலமும் வில்லியம்சனுடன் சிறிது தாக்குப்பிடிக்க நியூசியின் வெற்றி படிப்படியாக உறுதியாகியது. அரைச்சதம் கடந்தார் வில்லியம்சன். சான்நெர் பெரிதாக பிரகாசிக்கவில்லை. மூன்றாம் நாளின் முடிவில் நியூசிலாந்து 142-5 என்ற நிலையில் இருந்தது. வில்லியம்சன் 78 ஓட்டங்களுடனும் வற்லிங் ஓட்டங்களைப் பெறாமலும் நான்காவது நாளுக்காகக் களமிறங்கினர். வில்லியம்சன் சதத்தைப் பதிவுசெய்ததற்காக நிதானித்து நின்றார் வற்லிங். சதத்தை வில்லியம்சன் நிறைவுசெய்ய 5 இலக்குகளால் வெற்றிபெற்றது நியூசிலாந்து.

பந்துவீச்சில் இலங்கை சார்பாக சமீர 4 இலக்குகளையும், லக்மல் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக வில்லியம்சன் தெரிவானார். (ம)



## காயம் ஒரு விடயமல்ல என்கிறார் ஸ்ரீவ் சிமித்

காயத்தால் இந்திய அணிக்கு எதிரான தொடரில் இருந்து விலகக்கூடிய சந்தர்ப்பத்தில் உள்ள ஸ்ரீவ் சிமித், தனக்கு காயம் ஒரு விடயமல்ல என்றும், அனைத்துவிதமான ஆட்டங்களிலும் களமிறங்கத் தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆஷஸ் தொடரின்போது சிமித்துக்குக் காலில் காயம் ஏற்பட்டது. தற்பொழுது முதுகுவலியும் அவருக்கு மற்றுமொரு பிரச்சனையாக உருவெடுத்துள்ளதால், இந்தியாவுக்கு எதிராக ஜனவரி மாதம் நடைபெறவுள்ள ஒரு நாள் மற்றும் ரி-20 தொடர்களில் இருந்து சிமித் விலகலாம் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆனால், தான் களமிறங்கத் தயார் என்று தெரிவித்துள்ளார் சிமித். இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில் – நான் ஒவ்வொரு ஆட்டத்திலும் விளையாட விரும்புகிறேன். மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான முதல் ஆட்டம் முடிந்த பின்னர் இரண்டாவது டெஸ்ட் ஆரம்பமாவதற்கு இடையில் கிட்டத்தட்ட 14 நாட்கள் ஆஸ்திரேலியா ஓய்வில் உள்ளது. இந்தக் கால அவகாசம் எனது ஓய்வுக்குப் போதும் என்று கருதுகிறேன். எனவே இந்தியாவுக்கு எதிராகக் களமிறங்குவதையே நான் விரும்புகிறேன். அந்த அணி பலமாக உள்ளது. சிறந்த பதினொரு வீரர்கள் களமிறங்கினாலே இந்தியாவை வீழத்த முடியும்.' என்றார். (ம)

## கிண்ணத்தைக் கைப்பற்றியது சென்னை அணி இந்தியன் பிறிமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில்



இந்தியன் பிறிமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டத்தில் நேற்று கோவாவை வீழ்த்தி சம்பியனானது சென்னை அணி.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த இறுதி ஆட்டத்தில் சென்னை-கோவா அணிகள் மோதின. ஆட்டத்தின் முதல் பாதியில் சென்னையின் கட்டுப்பாட்டிலேயே பந்து அதிக நேரம் இருந்தது. ஆனால் சென்னை அணியால் கோல் கணக்கை ஆரம்பிக்க இயலவில்லை. எந்த அணியாலும் கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே முடிவடைந்தது முதல் பாதி. 54ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பைப் பயன்படுத்தி கோல் அடித்த பெலிசாரி, சென்னை அணிக்கு முன்னிலை பெற்றுக் கொடுத்தார். ஆனால் அது நீண்டநேரம் நிலைக்கவில்லை. ஆட்டத்தின் 58ஆவது நிமிடத்தில் கோவா வீரர் ஹகிப், கோல் அடித்து ஆட்டத்தைச் சமநிலைக்குக் கொண்டு வந்தார். இந்நிலையில் ஆட்டத்தின் 87ஆவது நிமிடத்தில் கோவாவின் ஜோப்ரே, ஒரு கோல் அடித்து அந்த அணிக்கு முன்னிலை பெற்றுத் கொடுத்தார். எஞ்சியிருப் பது வெறும் 3 நிமிடங்கள் மட்டுமே. கிண்ணம் கோவாவிடம் செல்லக்கூடிய நிலைமை. ஆட்டத்தின் கடைசி நிமிடங்களில் விறுவிறுப்பாக ஆடிய சென்னை வீரர்கள் அடுத்தடுத்து 2 கோல்களை அடித்தனர். கட்டிமணி, மெண்டோசா ஆகியோர் இந்த கோல்களை அடிக்க சென்னை அணி 3-2 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணம் டயமன்ஸிடம் சென்றது
# வீழ்ந்தது கம்பர்மலை யங்கம்பன்ஸ்

கரணவாய், டிசெ. 22
பீமாவின் அதிரடியான ஹட்ரிக் கோலினால் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது டயமன்ஸ் விளையாட்டுக் கழகம்.

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையில் முன்னெடுத்துவரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் பலப்பரீட்சை நடத்தியது. கோல்க் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் கிட்டத்தட்ட அதே நிலைமைதான். 23 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணியின் அனுபவ வீரரான பீமா தன்னிடம் கிடைத்த பந்தை சரியாகப் பயன்படுத்தி முதல் கோலைப் பதிவுசெய்தார்.

சில நிமிடங்களிலேயே யங்கம்பன்ஸ் அணியின் பின்கள வீரர் விதி மீறலில் ஈடுபட்டதால் டயமன்ஸ் அணியினருக்கு தண்டனை உதை வழங்கப்பட்டது. பீமாவால் வாய்ப்பு கோலாக மாற்றப்பட டயமன்ஸ் அணி 2:0 என்று முன்னிலை வகித்தது. ஆட்டம் நிறைவடைய 3 நிமிடங்கள் இருக்கும் போது பீமா மீண்டும் ஓர் கோலைப் பதிவுசெய்து வெற்றியை உறுதி செய்தார். இறுதியில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது டயமன்ஸ். ஆட்டநாயகனாக டயமன்ஸ் அணியின் பீமாவும் தொடர் ஆட்டநாயகனாக அதே அணியைச் சேர்ந்த துசிகரனும் சிறந்த கோல்காப்பாளராக யங்கம்பன்ஸ் கோல் காப்பாளர் மகிந்தனும் தெரிவுசெய்யப்பட்டனர் மூன்றாம் இடத்தை உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் பெற்றுக்கொண்டது. வெற்றிபெற்ற அணிகளுக்கான கிண்ணங்களை வடமாகாண சபை உறுப்பினர் களான வே.சிவயோகன், சு.சுகிர்தன் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். (ம-108)



## பருத்தித்துறை லீக்கின் கால்பந்தாட்ட முடிவுகள்

கரணவாய், டிசெ. 22
பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் வடமராட்சி அணிகளுக்கு இடையில் முன்னெடுத்துவரும் கால்பந்தாட்டத் தொடரில் உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகம், குடத்தனை சென்.பிலிப்நேரிஸ் விளையாட்டுக் கழகம், தாளையடி சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் உடுத்துறைசெந்தமிழ்விளையாட்டுக் கழகம் என்பன அரையிறுதி ஆட்டங்களுக்குத் தகுதி பெற்றுள்ளன.

5 வீரர் பங்குபற்றும் இந்தத் தொடர் உடுத்துறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இதில் நேற்று இடம்பெற்ற காலிறுதி ஆட்டங்களில் உடுத்துறை பாரதி அணி குடத்தனை சக்திவேலர் அணியை 2:0 என்ற கோல் கணக்கிலும், உடுத்துறை செந்தமிழ் அணி கட்டைக்காடு சென்.செபஸ்ரியன் அணியை 3:2 என்ற கோல் கணக்கிலும், குடத்தனை சென்.பிலிப்நேரிஸ் அணி உதயசூரியன் அணியை 1:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றி கொண்டன.

தாளையடி சென்.அன்ரனீஸ் அணியுடன் விளையாட இருந்த அணி வருகை தராததால் அவ்வணி அரையிறுதி ஆட்டத்திற்கு நேரடியாகத் தகுதி பெற்றது. (ம-108)



இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களுக்கு இடையிலான தேசிய மட்ட விளையாட்டு நிகழ்வுகள் கடந்த 17ஆம், 18ஆம் திகதிகளில் கொழும்பு டி.எஸ். சேனநாயக்க விளையாட்டரங்கில் இடம்பெற்றன. இதில் நாடு முழுவதிலும் இருந்து 14 உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனங்கள் கலந்துகொண்டன. வலைப்பந்தாட்டத்தில் யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவன அணி, காலி உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவன அணியை 14:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்திக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. (ம)

## டெஸ்ட் அணிகளைத் தெரிவுசெய்வதில் இலங்கை கவனம் செலுத்த வேண்டுமாம்

டெஸ்ட் தொடர்களுக்கான அணித்தெரிவில் தேர்வாளர்கள் கூடுதல் கவனத்தை செலுத்த வேண்டும் என்றும், ஆகச்சிறந்த வீரர்களைக்கொண்டு பலமான அணியை உருவாக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார் சங்கா.

இலங்கை அணி நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் டெஸ்ட்டில் 122 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை படுதோல்வியடைந்தது. இரண்டாவது டெஸ்ட்டிலும் இலங்கை அணி 5 இலக்குகளால் வீழ்ந்தது. இது தொடர்பாக சங்கா தெரிவிக்கையில் – நியூசிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் துரதிர்ஷ்டவசமாக திரிமன்னே போன்ற அனுபவ வீரர்கள் இடம்பெறவில்லை. தற்போது இலங்கை டெஸ்ட் அணி அனுபவம் இல்லாமல் இருக்கிறது. ஒரே நாள் இரவில் அதிசயம் நடந்துவிடாது. நல்ல அணியை அமைக்க குறைந்தது ஒன்றரை வருடமாவது காலம் தேவை. இதற்கு அணியின் சிறந்த தெரிவும் முக்கியமானது. அடுத்தடுத்து வீரர்களைப் பரிசீலித்துப் பார்த்து குழம்பிக் கொண்டிருக்கக்கூடாது. மாறாக சிறந்த வீரர்களைத் தெரிவுசெய்து தொடர்ச்சியான வாய்ப்புக்களை வழங்க வேண்டும் என்றார். (ம)

## தேசிய மட்ட ஆசிரியர்களுக்கான போட்டிகளில் பதக்கங்களை அள்ளியது கோப்பாய் கலாசாலை

மாங்குளம், டிசெ. 22
தேசியமட்ட ஆசிரியர்களுக்கான மெய்வன்மைப் போட்டி கடந்த 18ஆம், 19ஆம் திகதிகளில் நடைபெற்றது. இதில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை 11 தங்கப் பதக்கங்கள், 24 வெள்ளிப் பதக்கங்கள், 14 வெண்கலப் பதக்கங்கள் உட்பட மொத்தமாக 49 பதக்கங்களைக் கைப்பற்றியது.

25 வயது தொடக்கம் 30 வயதுப் பிரிவில் ரி.இந்துக்கான் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டங்களில் தங்கப் பதக்கங்களையும் நீளம் பாய்தலில் வெள்ளிப் பதக்கத்தையும், எஸ்.பரீடா தட்டெறிதலில் தங்கப் பதக்கத்தையும், ஈட்டி எறிதலில் வெள்ளிப் பதக்கத்தையும், குண்டு எறிதலில் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். 400 மீற்றர், 100 மீற்றர் அஞ்சல் ஓட்டங்களில் பெண்கள் அணியினர் வெள்ளிப் பதக்கத்தையும், ஆண்கள் அணி 100மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும், 400 மீற்றர் அஞ் சல் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டனர்.

31 வயது தொடக்கம் 36 வயதுப் பிரிவில் எஸ்.ஜமீனா 800 மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தையும், எஸ்.துஸாந்தினி தட்டெறிதலில் தங்கப் பதக்கத்தையும், 400 மீற்றர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும், 800 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும், ஆர்.அனுசியா நீளம் பாய்தலில் வெள்ளிப் பதக்கத்தையும், உயரம் பாய்தல், முப்பாய்ச்சலில் வெண்கலப் பதக்கத்தையும், எஸ்.சர்மிளா 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டங்களில் வெள்ளிப் பதக்கத்தையும், வை.சுதாகர் 800 மீற்றரில் வெள்ளிப் பதக்கத்தையும், 400 மீற்றரில் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். 400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் ஆண்கள் அணி தங்கப் பதக்கத்தையும், 100மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் ஆண்கள் அணி வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றின.

36 வயது தொடக்கம் 40 வயதுப் பிரிவில் எஸ்.ஜெயராஜ் நீளம் பாய்தலில் தங்கப் பதக்கத்தையும், 200 மீற்றரில் வெள்ளிப் பதக்கத்தையும், முப்பாய்ச்சலில் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினார். எஸ்.எழில்பாரதி ஈட்டி எறிதலில் வெள்ளிப் பதக்கத்தையும், குண்டு எறிதலில் வெண்கலப் பதக்கத்தையும், எஸ்.சுதேஸ்வரன் 800 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும், மோகனா தட்டெறிதலில் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். 400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் பெண்கள் அணி தங்கப் பதக்கத்தையும் 100மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் ஆண்கள் அணி வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றியன. 41 வயது தொடக்கம் 45 வயதுப் பிரிவில் ரி.நாகேஸ்வரி நீளம் பாய்தல், தட்டெறிதல், குண்டு எறிதல் போன்றவற்றில் வெள்ளிப் பதக்கத்தையும், ஏ.அகஸ்ரின் 400 மீற்றர் 800 மீற்றர் ஓட்டங்களில் வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர். 46 வயது தொடக்கம் 50 வயதுப் பிரிவில் எஸ்.புவனேஸ்வரி 800 மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தையும், 400 மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
50 வயது தொடக்கம் 55 வயதுப் பிரிவில் எஸ்.ஜெயக்குமாரி ஈட்டி எறிதலில் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணியில் தொடருவேன் என்கிறார் சகலதுறை வீரரான யுவி



கிடைத்த வாய்ப்பை கச்சிதமாகப் பயன்படுத்தி இந்திய அணியில் தொடர்ந்து நீடித்து இருக்க முயற்சிப்பதாக தெரிவித்துள்ளார் சகலதுறை வீரரான யுவராஜ்.

2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் தொடராட்டநாயகன் விருது வென்ற யுவராஜ் சிங், மோசமான திறன் காரணமாக கடந்த ஒன்றரை வருடத்திற்கும் மேலாக அணியில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டார். இந்நிலையில் உள்ளூர் தொடர்களில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதன் மூலம் அவுஸ்திரேலிய தொடருக்கான இந்திய ரி-20 அணியில் இடம்பெற்றுள்ளார்.

இது தொடர்பாக யுவராஜ் சிங் தெரிவிக்கையில் 'சர்வதேச கிரிக்கெட்டில் நெருக்கடி என்பது எப்போதும் உண்டு. இந்திய அணிக்கு திரும்புவது எப்போதும் நெருக்கடியான விடயம். இந்திய அணியில் இடம் கிடைக்காத கடந்த ஒன்றரை ஆண்டு கடினமான காலகட்டமாக இருந்தது. தற்போது வலுவான வீரராக மீண்டு வந்திருக்கிறேன். இந்திய அணியில் எனது பழைய ஆட்டத்தை வெளிப்படுத்துவேன். எனது திறமையை நிரூபிக்க ஆவலோடு எதிர்நோக்கி இருக்கிறேன். என் மீது நம்பிக்கை வைத்த தெரிவாளர்கள், அணி நிர்வாகம் மற்றும் ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் சிறப்பாகச் செயல்பட்டு தொடர்ந்து அணியில் நீடிக்க முயற்சிப்பேன்.' என்றார்.

(ம)

# செப் பிளாட்டர், பிளாட்டினிக்கு 8 ஆண்டுகள் தடை விதிப்பு



சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தில் இடம்பெற்ற ஊழலின் எதிரொலியாக சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் செப்பிளாட்டர் மற்றும் ஐரோப்பிய கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் பிளாட்டினி இருவருக்கும் 8 வருடங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

உலகின் பெரிய பணக்கார விளையாட்டு அமைப்பாக விளங்கும் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்துக்கு கடந்த சில மாதங்களுக்கு முன் பெரிய சோதனை ஏற்பட்டது. அதில் இருக்கும் முக்கிய தலைவர்கள் உலகக் கிண்ணத் தொடர்களை நடத்தும் உரிமங்களை வழங்குவதிலும் ஒலிபரப்பு, ஒளிபரப்பு உரிமங்களை வழங்குவதிலும் பல கோடி ரூபாய் ஊழல் மற்றும் முறைகேடு செய்ததாக தெரிவிக்கப்பட்டது. சிலர் சுவிற்சர்லாந்தின் பொலிஸாரால் கைதுசெய்யப்படவும் செய்தனர். சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் செப் பிளாட்டர் மற்றும் ஐரோப்பிய கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் பிளாட்டினி இருவரும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வந்தனர். இந்த நிலையில் நேற்று இருவருக்கும் தலா 8 வருடங்கள் தடை விதிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் இடைக்கால நிர்வாகக்குழுவே இந்த முடிவை எடுத்துள்ளது.

(ம)

# இந்தியா—பாகிஸ்தான் தொடர் நடைபெறமாட்டாது

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் தொடர் நடைபெறமாட்டாது என்று தெரிவித்துள்ளார் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் செயலாளர் அனுராத் தாக்கூர்.

இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான தொடரொன்று நடத்தப்படுவதற்கு கடந்த சில வாரங்கள் இரு தரப்பினரும் படாதபாடுபட்டனர். பாகிஸ்தான், தொடருக்காக சில சாதகமான முடிவுகளை எடுத்த போதிலும் இந்தியத் தரப்பினர் அதற்கு உடன்படாமல் இருந்தனர். இலங்கையில் தொடரை நடத்துவதற்கும் இந்திய மத்திய அரசு அனுமதி வழங்கவில்லை.

இந்த நிலையில் தொடர் தொடர்பாக தாக்கூர் தெரிவிக்கையில் 'பாகிஸ்தானுடன் விளையாடுவதை பலர் விரும்பவில்லை. எல்லையில் பதற்றம் நிலவுகிறது. எமது இராணுவ வீரர்கள் அங்கு தொல்லைகளைச் சந்தித்து இருக்கையில் நாம் அவர்களுடன் தொடரில் விளையாடுவது எவ்வாறு? என கேள்வி கேட்கின்றனர். பணம் என்பது இரண்டாம் பட்சம்தான். பாகிஸ்தானுடன் விளையாடுவதை இந்திய மத்திய அரசு விரும்பவில்லை. எனவே தொடர் நடைபெற மாட்டாது.' என்றார்.



(ம)

# அப்பாடா செல்சி ஜெயிச்சிடிச்சு



இங்கிலாந்து பிரீமியர் லீக்கில் சுந்தர்லாண்ட் அணியை வீழ்த்தியுள்ளது செல்சி அணி.

இங்கிலாந்து பிரீமியர் லீக்கில் நேற்றுநடைபெற்ற ஆட்டமொன்றில் சுந்தர்லாண்ட் அணியை எதிர்கொண்டது செல்சி அணி. ஆட்டத்தின் 5ஆவது நிமிடத்தில் நட்சத்திர வீரர் இவானோவிக் செல்சியின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். 13ஆவது நிமிடத்தில் பெட்ரோ இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய செல்சியின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியானது. 50ஆவது நிமிடத்தில் பனால்டி மூலம் ஒஸ்கார் மேலும் ஓர் கோலை அடிக்க தற்பொழுது செல்சி 3:0. சுந்தர்லாண்ட் அணி சார்பாக பபியோ பொரிணி 69ஆவது நிமிடத்தில் ஓர் கோலை அடித்தார். மேற்கொண்டு கோல்கள் எவையும் பதியப்படாத நிலையில் முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது செல்சி. (ம)

O/L or A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு நம்ப முடியாத கட்டணச்சலுகையில் 1.5 மாதத்தில் பூர்த்தி செய்து சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட கணினி கற்கைநெறிகள் ஆரம்பம்.
பதிவுகளுக்கு நேரில்,
கல்வியங்காட்டு சந்தியில் MCAI CAMPUS
www.mcai.edu.lk Phone : 775520940, 212219464

இலவச ஆங்கில வகுப்பு
இடம்:ELAS Institute (யாழ். பல்கலை எதிரில்)
Time:- 9 am to 1 pm 24/12/2015 வியாழன்
நான்கு மணித்தியாலத்தில் ஆங்கிலம்
பதிவுகளுக்கு முந்துங்கள்
Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.

# இரண்டாவது டெஸ்ட் தோல்விக்கு துடுப்பாட்ட வீரர்களே காரணமாம்

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஆட்டத்தில் இலங்கை அணி அடைந்த தோல்விக்கு துடுப்பாட்ட வீரர்களின் திறன் இன்மையே காரணம்என்றுசாடியுள்ளார் இலங்கை அணித்தலைவர் மத்தியூஸ்.

நியூசிலாந்து - இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் நேற்று நிறைவுக்குவந்தது. இதில் இலங்கை அணி 5 இலக்குகளால் தோல்வியடைந்தது. இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை 71 ஓட்டங்கள் வரை இலக்குகள் இழப்பில்லாமல் இருந்தது. ஆனால் இறுதி 62 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது. துடுப்பாட்ட வீரர்களின் இந்தத் தடுமாற்றமே இலங்கையின் தோல்விக்குக் காரணம் என்று குறிப்பிட்டுள்ளார் மத்தியூஸ்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –'இரண்டாவது டெஸ்ட்டை வெற்றி பெற்று தொடரை சமப்படுத்துவோம் என்று எதிர்பார்த்தேன். ஆனால் துடுப்பாட்ட வீரர்கள் திடீர் தடுமாற்றம் காட்டிவிட்டனர். அவர்களின் ஆட்டத்தில் போராட்டத் தன்மை இல்லை. இரு இணைப்பாட்டம் சிறப்பாக அமைந்திருந்தால் ஆட்டத்தை குறைந்தபட்சம் சமப்படுத்தியிருக்கலாம்' என்றார்.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.